

# கலைமகள்

## மாதப் பத்திரிகை

விக்கிரம ௵ சித்திரை ௴

*

௧00

### முக்கிய விஷயங்கள்


பொன்னம்பலம் பிள்ளையின் திருப்பணி
(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

நம் நாடோடிப் பாட்டுக்கள்
(தேவேந்திர ஸத்தியார்த்தி)

பூதத்தம்பி கோட்டை
(சி. வைத்தியலிங்கம்)

தனிமை
(ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.)



வருஷ சந்தா ரூ. 4—0—0 * தனிப்பிரதி அணா ௬

சென்னை பிராட்வே டாக்கீஸில்

வெள்ளிக்கிழமை எப்ரல் 12உ மகத்தான ஆரம்பவிழா

# சண்டிகா

உணர்ச்சி ததும்பும் ஓர் தெலுங்கு சரித்திர படம்

ஆந்திரதேசத்து நடிகதிலகங்களான

வேமுரி கக்கையா, பெல்லாரி ராகவாசாரி

ஸ்ரீமதி கண்ணாம்பா

முதலியோர் நடிப்பது

கைவசமிருப்பவை:

ஜயக்கோடி (தமிழ்) பாலாஜி (தெலுங்கு)

மாணிக்கவாசகர் (தமிழ்)

செங்கற்பட்டு, வட, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கு.

ஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்,

அம்ஜிகரை : : : சென்னை.

---

## இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீசுகள்

| | |
|---|---|
| அதிகார மூலதனம் | ரூ. 60,00,000—0—0 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | 47,92,800—0—0 |
| செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள் | 10,00,000—0—0 |
| ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள் | 2,79,280—0—0 |
| ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும் | 17,92,762—0—0 |

சேக்ரடரி: N. கோபால அய்யர்




இப்புதிய 1940 ரேடியோ ரிஸீவர்கள்

- புத்தம் புது ரேடியோ கருவிகளையெல்லாம் கோண்டவை.
- ஸர்வதேசங்களிலிருந்து வார்த்தா விநோதங்களைச் சுத்தமாய்க் கேட்கலாகும்படி செய்கின்றன.
- சங்கீதத்தை ஸகஜ மாதுர்யத்துடன் பிரதிபலிப்பவை.



7 வால்வ்

மாடல் நெ. 686

A. C./D.C.

| மீட்டர்கள் | கரண்ட் |
|---|---|
| 13-30, 30-90<br>192-565 மீட்டர்கள்<br>வரை கேட்கலாகும் | 200-255 வோல்ட்<br>A. C./D. C.<br>40-60 ஸைகில்ஸ்<br>A. C. |

6 வோல்ட் அக்யூமிலேடருடன் உபயோகிக்க பாட்டரி மாடல் நெ. 673 கிடைக்கும்.

கேட்லாகுக்கு: தீ கிராமபோன் கம்பேனி லிட்., தபால் பெட்டி 705, கதீட்ரல், மதராஸ் அல்லது எச். எம். வி. ரேடியோ வியாபாரிகளிடமும் கிடைக்கும்

இன்றே எல்லா " எச். எம். வி." ரேடியோ வியாபாரிகளிடமும் காணலாம்

# "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

இன்ஷ்யூர்

செய்யுங்கள்

# ஜூபிடர் ஜெனரல்

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்

| | |
|---|---|
| ஆயுள் | மோட்டார்கார் |
| நெருப்பு | பஸ்கள், டாக்ஸிகள் |
| கப்பல் | தொழிலாளர் நஷ்ட ஈடு |

சமுத்திரம்

சாதனம் ரெயில்வே சாதனம்

தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக் கோடி ரூபாய்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

# இண்டியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்

10, மவுண்ட் ரோட் — மதராஸ்

| வருஷம். | பூர்த்தியான புது வியாபாரம். | ஆயுள் நிதிகள். |
|---|---|---|
| 1934 | ரூ. 10,27,250 | ரூ. 3,06,967 |
| 1935 | ரூ. 11,97,000 | ரூ. 3,92,145 |
| 1936 | ரூ. 15,09, 750 | ரூ. 5,01,741 |
| 1937 | ரூ. 17,09,750 | ரூ. 6,59,186 |
| 1938 | ரூ. 19,33,250 | ரூ. 7,96,277 |
| 1939 | ரூ. 25,06,500 | ரூ. 9,00,000க்கு மேல் |

பிரதி வருஷமும் ஏற்பட்டு வரும் அபிவிருத்தியைக் கவனித்தீர்களா?

**பரஸ்பர திட்டம் * உயர்தரக் கொள்கை**
**சிக்கனமான நிர்வாஹம்**

பிரதி 3 வருஷங்களிலும் போனஸ் விகிதம் உயர்ந்து வருகிறது.

பாலிஸி எடுப்பவர்களுக்கு வேறு என்ன வேண்டும்?

விவரங்களுக்கு எழுதுக:

**பொதுக் காரியதரிசி**

மவுண்ட் ரோட், மதராஸ்.

# கலைமகள்

தொகுதி ௧௭]  விக்கிரம ௵ சித்திரை ௴  [பகுதி ௧௦௦
ஏப்ரல், 1940

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பொன்னம்பலம் பிள்ளையின் திருப்பணி—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... | 363 |
| 2. | நம் நாடோடிப் பாட்டுக்கள்—தேவேந்திர ஸத்தியார்த்தி (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு)... | 369 |
| 3. | நாஸிகையும் அதன் அருகிலுள்ள ஸ்தலங்களும்—(படங்களுடன்)—'மூர்த்திவாஸன்' ... | 373 |
| 4. | பூதத்தம்பி கோட்டை—சி. வைத்தியலிங்கம் ... | 379 |
| 5. | தேசாந்தரத்தில் தமிழன்—வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. ... | 387 |
| 6. | சனல்நார்—எம். நாராயணசாமி, பி.ஏ., எல்.டி. ... | 392 |
| 7. | பூக்காரன் — மேரி வெப் ('ஆண்டாள்' மொழிபெயர்ப்பு) ... | 396 |
| 8. | வாழ்க்கைச் சர்க்கஸ்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். ... | 402 |
| 9. | தனிமை—ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ. ... | 408 |
| 10. | நிர்மலா (படத்துடன்)—ப்ரேம்சந்த் (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு) ... | 415 |
| 11. | அதிர்ஷ்டம்—"ராகோ" ... | 438 |
| 12. | காதலில்லாமல் கதை முடியுமா?—கி. சாவித்திரி அம்மாள் ... | 441 |
| 13. | உயர்ந்த பரிசு (படத்துடன்)—'வாசகன்' ... | 447 |
| 14. | மதிப்புரை ... | 451 |
| 15. | குறிப்பும் திரட்டும் ... | 454 |
| 16. | (அனுபந்தம்) திருக்குற்றாலச் சிலேடை வெண்பா—டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... | 25—32 |


முகப்புப் படம்

சைத்தியக் குகையின் வாயில்
(நாஸிகை)

விஸ்வா & கோ
ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர்
ஸ்டாம்பு மேக்கர்ஸ்
50, வாலாஜா ரோட்,
மவுண்ட் ரோட், மதராஸ்.



சைத்தியக் குகையின் வாயில்

(நாவிகை)




# பொன்னம்பலம் பிள்ளையின் திருப்பணி

* மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் *

---

பொன்னம்பலம் பிள்ளையின் அருமையை அறிந்து பழகி வந்த சொக்கம்பட்டி ஜமீன்தாராகிய பெரியசாமிச் சின்னணைஞ்சாத்தேவர் கி.பி. 1721-ஆம் வருஷத்திற்கு முன் உலக வாழ்வை நீத்தார். தம்முடைய தலைவராகவும் நண்பராகவும் இருந்த அவருடைய பிரிவைப் பொன்னம்பலம் பிள்ளையால் சகிக்கமுடியவில்லை. அவர் இல்லாத உலகத்தில் வாழ்வதைவிட அவரோடு செல்வதே நல்லதென்று நினைத்தார். ஆனால் விதி அதற்கு இணங்குமா? அன்பு, அருள், அறம் எல்லாவற்றிற்கும்மேல் நின்று ஆணை செலுத்தும் விதியின் வலிமையைக் கடப்பார் யார்?

பொன்னம்பலம் பிள்ளையின் துக்கம் கரை கடந்து நின்றது. அவர் ஒரே ஒரு செய்யுள்தான் சொல்லியிருக்கிறார். அவருடைய துயரத்தின் முழு இயல்பையும் அச் செய்யுள் புலப்படுத்தும்.

'அந்த மகராஜன் இந்த நாட்டின் அரசாட்சியைத் துறந்து வானாட்டை அரசாளப் போய்விட்டான். ஆனால் இங்கே என்னை ஸ்தானாதிபதியாக வைத்துக்கொண்டு ஆட்சிபுரிந்ததைச் சிறிதளவாவது மதியாமல் தனியே சென்றுவிட்டான். அந்தச் சேனாபதிப்பெருமானாகிய சின்னணைஞ்சானைப் பிரிந்து நான் இங்கே இருப்பதனால் என் உள்ளம் புண்பட்டுத் தவிக்கின்றது. அவன்

போனவழி போனலொழிய அப்புண் தீராது' என்று நைந்து புலம்பி அவர் பாடிய செய்யுள் வருமாறு:

*"வானு டரசாளப் போன மகராஜன்
தானு பதியேனவுஞ் சற்றுமதித் தானிலையே
சேனு பதிப்பெருமான் சின்னணைஞ்சான் போனவழி
போனு லோழியமனப் புண்பாடு தீராதே."

*　　*　　*

பெரியசாமிச் சின்னணைஞ்சாத் தேவருக்குப் பின் சிலர் சில காலம் ஜமீன் ஆட்சியை நடத்திவந்தனர். கி. பி. 1729-ஆம் வருஷம் சிவராமச் சின்னணைஞ்சாத் தேவரென்பவர் ஜமீன்தாரானர். அவர் பெரியசாமிச் சின்னணைஞ்சாத்தேவருடைய தம்பியின் குமாரர். அவர் காலத்தில் பொன்னம்பலம் பிள்ளையும் பெரியநாயகம் பிள்ளை யென்பவரும் ஸ்தானுதிபதிகளாக இருந்தனர். தம் பெரிய தந்தையார் காலத்தில் இருந்தவரென்ற நினைவினல் சிவராமச் சின்னணைஞ்சாத்தேவர் பொன்னம்பலம்பிள்ளையை ஸ்தானுதிபதியாக வைத்திருந்தாரேயன்றி உண்மையில் அவரிடத்தில் அன்பு கொள்ளவில்லை.

வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்த பொன்னம்பலம் பிள்ளையின் உள்ளம் தர்மத்திற் சென்றது. திருக்குற்ருலம் முதலிய ஸ்தலங்களில் தம் பெயரால் சில தர்மங்கள் செய்யவேண்டுமென்று எண்ணினர். அவருக்கு முன்பு சொக்கம்பட்டி ஸம்ஸ்தானத்தில் ஸ்தானுதிபதியாக இருந்த வயித்தியப்ப பிள்ளையென்பவர் திருக்குற்ருலத்தில் தம் பெயரால் வயித்தியப்ப விலாசம் என்ற மண்டபம் ஒன்று கட்டினர். அவ்வாறு தம் பெயராலும் ஒன்று கட்ட அநுமதி தரவேண்டுமென்று பொன்னம்பலம் பிள்ளை ஜமீன்தாரை வேண்டினர். ஜமீன்தார் அதற்கு இணங்கவில்லை. அப்பால் பண்புளிப்பட்டினத்திலுள்ள திருமலையிலேனும் தம் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்து ஒரு மண்டபம் கட்டிக்கொள்ள இடம் கேட்டார். அதற்கும் ஜமீன்தார் சம்மதிக்கவில்லை. சில

* இச்செய்யுள், "வானு டரசாளப் போன மதப்புலிதான், தானு பதிதனையுந் தானழைத்துப் போகாதோ, சேனு பதிராஜன் சின்னணைஞ்சான் போனவழி, போனு லொழியமனப் புண்பாடு தீராதே" என்றும் வழங்கும்.

முறை வற்புறுத்திக் கேட்டபோது, "நமக்கு இஷ்ட மில்லாத காரியத்தில் இவ்வளவு பிடிவாதம் பண்ணுவது நன்றாக இல்லை; உம்முடைய மனம் போனபடி யெல்லாம் நாம் செய்வது இயலாத காரியம்" என்று கோபித்துக் கொண்டார்.

பொன்னம்பலம் பிள்ளையின் உள்ளத்தை இவ் வார்த்தைகள் சுட்டன; தம் பழைய நிலையை அவர் எண்ணிப் பார்த்தார். அந்த ஸம்ஸ்தானத்தில் அவர் வைத்தது சட்டமாக நடந்தது ஒரு காலம். ஆனையோடு பழகி விட்டுப் பூனையைக் கெஞ்சவேண்டிய நிலை வந்ததை நினைந்து அவர் இரங்கினார். 'சரி; இனி இந்த இடத்தில் இருப்பதில் பயன் ஒன்றும் இல்லை' என்று தீர்மானம் செய்துகொண்டார். 'இவ்வளவு நாள் உங்கள் பரம்பரைக் குரிய செம்புலியென்னும் பட்டத்திற்கேற்ற குணம் எப் போது வரும் எப்போது வருமென்று காத்திருந்தேன். கோபமென்பது சிறிதும் இதுகாறும் உமக்கு வரவில்லை. இப்போதுதான் அந்தப் பட்டம் பொருளுடையதாயிற்று. உம்முடைய கோபம் உம்மிடம் புலியின் குணம் இருப் பதைக் காட்டியது' என்ற கருத்தைக் குறிப்பாக வெளி யிடும் ஒரு செய்யுளைக் கூறிவிட்டு அவர் சொக்கம்பட்டியை நீத்துச் சங்கரநயினார் கோயிலுக்குச் சென்றார். அச் செய்யுள் வருமாறு:

"என்றுவரு மேன்றுவரும் என்றிருந்தேன் திவ்யகுணக்
குன்றமே கோபங் குறியாதே—மன்றுதனில்
செம்பியன்போல் வாழுஞ் சிவராம தேவமன்ன
அம்புவிமேற் செம்புலிப்பட் டம்."

[கோபம் குறியாதே செம்புலிப்பட்டம் என்று வருமென்றிருந் தேன் என்று கூட்டிப் பொருள் செய்க. குணக்குன்றமென்றது குறிப்புமொழி. குறியாதே - காணமல். சிவராம செம்புலிச் சின் னணஞ்சாத் தேவரென்பது ஜமீன்தாரின் முழுப்பெயர்.]

* * *

சங்கரநயினார்கோயில் எம்பெருமானிடம் பொன்னம் பலம்பிள்ளை நெடுநாட்களாக ஈடுபட்டவர்; அந்த ஸ்தலத்து நாயகரை உத்தரகோசமங்கையிலிருந்து மீட்டவர். அவ்வாலயத்திற் புகுந்து சங்கரநாராயண

மூர்த்தியைத் தரிசித்தபோது அவருக்குத் துக்கம் பொங்கி வந்தது. உலக இயல்பை நினைந்து அவர் வருந்தினர். 'இதம் அறியாதவரிடம் ஊழியம் செய்வதைக்காட்டிலும் காவியாடை புனைந்து துறவியாகிவிடலாம்; இல்லையேல் அவர் கண்முன்னே இராமல் கப்பலேறி வேற்று நாட்டுக் குப் போய்விடலாம்; அதுவும் இயலாவிட்டால் இறந்து விடலாம்; மறுபிறவியிலேனும் இந்த நிலை வராமல் இருக்கும். கல்லிலே அம்பை எய்து பிளக்க முடியுமா? இங்கிதம் அறியாதவர்களோடு பழகுவது அத்தகையது தான்' என்ற எண்ணங்கள் அவர் உள்ளத்தே எழுந்தன; அவற்றையே ஒரு செய்யுளுருவத்தில் அவர் வெளி யிட்டார்:

"காவிக் கலையிலை யோகப்ப லேறக் கடலிலையோ
ஆவிக்கு மீளப் பிறப்பிலை யோகல்லி லம்புதனை
ஏவிப் பிளப்பது போலே யிதமறி யாதவரைச்
சேவிப்ப ரோசிவ சங்கர ராசைச் சிவக்கொழுந்தே."

[கலை - ஆடை. ராசை - சங்கரநயினர் கோயில்; ராஜபுர மென்பதன் மரூஉ.]

சில தினங்கள் சங்கரநயினர் கோயிலில் இருந்து ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டுப் பொன்னம்பலம்பிள்ளை திருநெல்வேலி சென்றார். அங்கே இருந்த ஆறை அழ கப்ப முதலியார் அவரை வரவேற்று உபசரித்தார். அவ ரைக் கண்டு பேசி மகிழ்வதில் முதலியாருக்கு மிக்க விருப் பம் உண்டு. பெரியசாமிச் சின்னணைஞ்சாத்தேவர் இறந்த பிறகு பொன்னம்பலம்பிள்ளை ஊக்கக்குறைவாக இருப் பதை முதலியார் அறிந்திருந்தார். அவரை நேரில் கண்ட போது முதலியாருக்குப் பழைய நினைவுகளெல்லாம் வந்தன.

"இப்போது உங்கள் ஜமீன் எப்படி இருக்கிறது?" என்று முதலியார் கேட்டார்.

"எங்கள் ஜமீனா? எனக்கும் அதற்கும் என்ன சம்பந் தம்? என்னுடைய மகராஜன் எப்போது போனானோ அப்போதே என் ஜீவனும் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும். இப்போது நடைப்பிணமாகத்தான் இருக் கிறேன்."

"அங்கே இப்போது நீங்கள் ஸ்தானுதிபதியாக இல்லையா?"

"இருந்தேன்; பெயருக்கு மாத்திரம் அப்படி இருந்தேன். அருமை அறியாத இடத்திலே இருப்பதில் என்ன பயன்? அதனல் தங்களைத் தேடி வந்து விட்டேன்."

இந்த வார்த்தைகள் முதலியார் நெஞ்சில் மிக்க இரக்கத்தை உண்டாக்கின; 'இவர் எத்தகைய மனிதர்! ஆயிரம் பேர் இருந்தாலும் இவருக்குச் சமானமாக முடியுமா? இவரை அருகில் வைத்துக்கொள்வதற்கு எவ்வளவு தவம் செய்திருக்கவேண்டும்!' என்று அவர் எண்ணி வருத்தமுற்ருர்.

பொன்னம்பலம்பிள்ளை தம் கருத்தை அமைத்து,

"தானு பதியேனும் பேர்மாத் திரமேன் றமிழருமை
ஆனு லறிவது நீமாத் திரமேனக் காதரவு
நானு விதத்திலுங் காணேன் உனைமுற்றும் நம்பிவந்தேன்
மானு பராதோண்டை நாடா வழகப்ப மன்னவனே"

என்ற பாடலைக்கூறினர்.

முதலியார், "நீங்கள் இங்கே வந்தது என் பாக்கியம். இந்த வீடு உங்களுடையது. சௌக்கியமாக இங்கேயே இருக்கலாம்" என்று அன்பு ததும்பக் கூறினர்; அவருக்கு வேண்டியவற்றையெல்லாம் உதவிப் பாதுகாத்து வந்தார்.

* * *

இவ்வாறு பொன்னம்பலம்பிள்ளை திருநெல்வேலியில் இருந்த காலத்தில் சொக்கம்பட்டியிலிருந்த சிவராமத் தேவரிடம் பலர் வந்து, "உங்கள் ஜமீன் ஸ்தானுதிபதி அங்கே போய் இருப்பது உங்களுக்கு அகௌரவமல்லவா?" என்று கூறினர். ஜமீன்தார் ஆறை அழகப்ப முதலியாருக்கு அடங்கினவர். ஆதலின் தம்மைப் பற்றி முதலியார் ஏதேனும் தவருக எண்ணிவிட்டால் என் செய்வதென்ற எண்ணம் ஜமீன்தாருக்கே இருந்தது. ஆதலின் பொன்னம்பலம்பிள்ளையை மீட்டும் சொக்கம்பட்டிக்கு வருவிப்பதற்கு முயன்ருர்; பிள்ளையின் விருப்பப்படியே திருமலையில் திருப்பணிகள் செய்துகொள்ளலாமென்று சொல்லியனுப்பினர்.

தம் கருத்து முற்றுப்பெறுமென்பதை உறுதியாக அறிந்துகொண்ட பொன்னம்பலம் பிள்ளை முதலியாரிடம் விடைபெற்றுச் சொக்கம்பட்டி வந்துசேர்ந்தார். பிறகு தம் பொருளை மிகுதியாகச் செலவிட்டுத் திருமலை ஆண்டவர் ஆலயத்திற் சில திருப்பணிகள் இயற்றுவித்தார். அவற்றை இயற்றிய பின்னர் அவர் மனம் ஒருவாறு ஆறுதலுற்றது.

* * *

சொக்கம்பட்டி ஜமீனில் பல குழப்பங்கள் நேர்ந்தன. பட்டத்தின் உரிமைபற்றிப் பல கலகங்கள் நிகழ்ந்தன. பொன்னம்பலம்பிள்ளை அவற்றிற் சிரத்தை கொள்ளவில்லை. முதுமைப் பருவத்தில் அவருக்குத் தெய்வ சிந்தையும் தமிழன்புமே பற்றுக்கோடாக இருந்தன. அவர் 1762-ஆம் ௵ (கொல்லம் ஆண்டு 937, மாசி மாதம் 7-ஆம் தேதி) சிவபத மடைந்தனரென்று தெரிகிறது.

மதியூகியும் தமிழ்ப்புலவரும் சிவபக்திச் செல்வருமாகிய பொன்னம்பலம் பிள்ளையின் செயல் ஒவ்வொன்றும், 'அவர் சாதாரண மனிதர்களோடு சேர்த்து எண்ணுதற் குரியவரல்லர்; மனிதவர்க்கத்தில் தமக்கென்று தனிச் சிறப்புடைய ஸ்தானத்துக்குரியவர்' என்றே நினைக்கச் செய்யும்.

[குறிப்பு: பொன்னம்பலம்பிள்ளையைப் பற்றி நான் இதுகாறும் எழுதிய வரலாறுகளுக்கு ஆதாரமாக உள்ளவை 'வடகரையென்ற சொக்கம்பட்டிப் பாளையப்பட்டுச் சரித்திரம்' என்னும் புஸ்தகமும் நான் கேள்வியுற்ற கர்ண பரம்பரைச் செய்திகளுமேயாம்.]



# : நம் நாடோடிப் பாட்டுக்கள் :

ஸ்ரீ தேவேந்திர ஸத்தியார்த்தி

[கலைமகளுக்காக ஹிந்தியில் எழுதப்பட்ட கட்டுரையை ஸ்ரீமான் கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது.]

"நம் நாடோடிப் பாட்டுக்களின் இயற்கையுருவம் நம் பெண்மணிகளின் இயற்கையுருவத்தை ஒத்ததே. கிராமங்களின் பாதுகாப்பில்தான் நமது சமூகத்தின் பாதுகாப்பும் அடங்கி யுள்ளது. நகரங்களைக்காட்டிலும் மிக அதிகமாக இயற்கையை நெருங்கியிருப்பதால், கிராமங்களுக்கு வாழ்க்கை யூற்றுக்களின் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கையின் புண்கள் கிராம வாழ்க்கையில் அநாயாஸமாக ஆறிவிடுகின்றன. பெண்களைப் போலவே கிராமங்களும் நமது வாழ்க்கையின் இன்றியமையாத உறுப்புக்கள்; அவை நமக்கு உணவு அளிக்கின்றன; அவை நம் வயிற்றை நிரப்புவதோடு மாத்திரமல்லாமல், நமது ஆனந்தத் துக்குரிய விஷயங்களாகவும் உள்ளன. ஆண்களும் பெண்களும் எளிய வாழ்க்கைக் காவியத்தைச் சிருஷ்டித்து, இயற்கையாகவே அமைந்த அழகுக்கொண்டாட்டங்களின் மூலமாக வாழ்க்கையை இன்பமயமாக்கும் இடங்கள் அவைதாம்."—சாந்தி நிகேதனத்துக் குருதேவரின் இப்பொன்மொழி எவ்வளவு அருமையானது!

ஆண்டவனின் அமுதப் புதல்வர்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். அவர்கள் ஏழையாயினும் சந்தோஷச் செல்வம் பெரிதும் படைத்தவர்கள்; தாம் பட்டினி கிடந்தும் தமது வாயிலில் வரும் விருந்தினரை இருதய பூர்வமாக வரவேற்பவர்கள்; அழகினராக இருந்தும் தமது அழகைப் பற்றிய அகந்தை சிறிதும் அற்றவர்கள்; குழந்தைகளைப்போல் கள்ளங்கவடு அற்றவர்கள்; பிரகிருதித் தாயின் தேனிலும் இனிய மடியில் வசிப்பவர்கள்; நம்பிக்கை, எளிமை, பக்தி—இவைகள் தாம் அவர்களது நாகரிகத் தின் மூலமந்திரங்கள். கிராமங்களின் இயற்கையான வாழ்க்கையில் நாம் ஆங்காங்கு நிர்மலமான இருதய ஸாம்ராஜ்யத்தைக் காண்கிறோம்; ஆனால், இதற்கு மாறாக, மனிதன் படைத்த பண்டங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கும் நகரங்களிலோ சாணக்கிய நீதியை அறிந்த மூளை இங்கும் அங்கும் வட்டமிடுவதையே காண்கிறோம். இதனால்தான், "கிராமங்களை ஆண்டவன் தாமே தம் திருக்காங்

களால் படைத்தார்; நகரங்களை மனிதன் நிர்மாணித்தான்'' என்ற சொல் எழுந்ததுபோலும்!

கிராமவாசிகளின் இலக்கியம் அவர்கள் பேசும் பாஷையில் தான் கிடைக்கின்றது; ஒவ்வொரு மாகாணத்தின் நிலையும் இது தான். மாகாண பாஷைகளின் இந்த இலக்கியம் மிகப் பழமை யானது. இது பல தலைமுறைகளாக வந்துகொண்டிருக்கிறது. கிராம இலக்கியத்தை அறிந்துகொள்ளவேண்டியது இன்று நமக்குத் தேவையாகிவிட்டது. இவ்விலக்கியம் ஒரு தனிப்பெருமை வாய்ந் தது. கிராம வாழ்க்கையைக் கண்முன்பே சித்திரிக்கும் பாட்டுக் கள், தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கப்பட்டுக் கிராமவாசிகளின் பேச்சுக்கு வன்மையையூட்டும் பழமொழிகள், ஓய்ந்த இனிய நேரங்களில் கிராமங்களிலுள்ள ஸ்திரீ புமான்களின் மனங்களை மகிழ்விக்கும் கதைகள், தெருக்கூத்துக்கள்—இவை யாவும் கிராம இலக்கியத்தின் உறுப்புக்களே. கிராமவாசிகளின் மனப்போக்கை நன்கு அறிவதற்கு நாம் இவ்விலக்கியத்தைப் பயிலவேண்டும். முக்கியமாக, நாடோடிப் பாட்டுக்களின் மனோ தத்துவ மதிப்போ அளப்பரிது; இவைகளை ஒன்றாகத் தொகுத்துப் பயிலுதல், நகரங் களையும் கிராமங்களையும் இணைத்து, அவைகளுக்கு இடையேயுள்ள ஆழத்தையும் அகன்ற மடுவையும் கடக்க உதவும்.

கிராம இலக்கியத்திலுள்ள தனிப் பண்புகள் பல. எல்லாவற் றிலும் பெரிய தனிப்பண்பு அதன் இயற்கை யமைப்பேயாம்; இந்த இயற்கையமைப்பில், பண்படுத்தப்பட்ட சிருங்காரத்துக்குப் பதி லாக வனத்தைப் போன்ற இயற்கையழகு தோன்றுவதே குறிக் கொள்ளற்பாலது. அதிலும் நாடோடிப் பாட்டுக்கள் விஷயத்தில் இந்த இலக்கணம் முற்றும் பொருந்துகின்றது.

"நாடோடிப் பாட்டுக்கள் பிரகிருதியின் வெளியீடுகள். அவைகளில் அலங்காரங்கள் இல்லை, சுவைமாத்திரந்தான் உள்ளது; சந்தங்கள் இல்லை, லயம் மாத்திரமே உள்ளது; கோவை இல்லை, ஆனால் இனிமை ஒன்றே உள்ளது. தன்னிலே அலை எழும்போது பிரகிருதி தேவி பாடுகிறாள். அவள் பாட்டுக்களிலே இருதயத்தின் சரித்திரம் காதலில் கவர்ச்சி போலும், சிரத்தையில் விசுவாசம் போலும், கருணையில் மென்மை போலும் வியாபித்துக் கிடக்கிறது. பிரகிருதியின் பாட்டில் மனிதசமூகம் கவிதையில் கவியைப் போன்றும், பொறுமையில் மனோபலத்தைப் போன்றும், தவத்தில் தியாகத்தைப் போன்றும் பிரதிபிம்பிக்கின்றது. பிரகிருதியே சங்கீதமயம். கிரஹங்களின் கூட்டங்கள் ஓர் இயற்கைச் சுழலில் சுழன்றுகொண்டு அந்தச் சங்கீதத்துக்கு ஒரு ஸ்வரத்தை இயக்கு கின்றன. அருவிகளின் இடையறு ஒலியும், இலைகளின் சலசலச்

சத்தமும், சஞ்சலநீரின் கலகலப்பும், மேகங்களின் கர்ஜனையும், மழைநீர் சோவென்று பொழிவதும், புயலின் ஹாஹாகாரமும், மொட்டுக்களின் இனிய இசையும், கலங்கிய கடலின் பேராவமும், மனிதர்களின் பலவித மொழிகளும் விசித்திர உச்சரிப்புக்களும், பட்சிகள் மிருகங்கள் புழுபூச்சிகள் முதலியவற்றின் பேச்சுக் களும்—எல்லாம் அந்தச் சங்கீதத்துக்கு உதவும் மந்த்ரங்களும் தாரங்களும் ஸ்வரங்களும் லயங்களுமாம்; இடி வீழ்வதே அதற் குக் காமமாம்; நதிகளின் பிரவாஹங்கள் மூர்ச்சனையாம். நாடோடிப் பாட்டுக்கள் பிரகிருதியின் அந்த மஹாசங்கீதத்தின் அம்சங்கள்.

"பண்டைக்காலத்தில் ஒரு வேடனின் அம்பினால் கிரௌஞ்சப் பறவை அடிபட்டதைக் கண்டு, மருமத்திலே தாக்கப்பட்ட மஹரிஷி வால்மீகியின் உள்ளத்தில் இயற்கையாகவே கருணை தோன்றியது. அந்தக் கருணையிலே கவிதை பிறந்தது. வால்மீகியினிடம் இருந்த அந்த உள்ளம் கிராமங்களில் எப்போதும் உள்ளது; இப்போதும் இருக்கிறது. அதிலிருந்துதான் பிரகிருதியின் பாட்டு வெளிவரு கின்றது. கவிதை பிரகிருதியின் பாட்டாகும். அது மூளையி லிருந்து பிறப்பது அல்ல; இருதயத்தினின்றும் பிறக்கிறது. அதனால் தான் கிருத்திரிம நாகரிகத்தின் ஒளியில் அது மலர்வதில்லை. நாடோ டிப் பாட்டுக்களின் பிறப்பிடம் கிராமந்தான். கிராமவாசிகளின் வாக்கில் மூளை இல்லை, இருதயமே உள்ளது; அவர்களது வணக்கத் தின் மறைவில் கபடம் இல்லை, பச்சாத்தாபமே உள்ளது; அவர் களுடைய நட்பாகிய மலரில் தன்னலமென்னும் புழு இல்லை, அன்பின் நறுமணமே உள்ளது; அவர்களின் மனவுலகத்தில் ஆனந்தமும் சுகமும் சாந்தியும் அன்பும் கருணையும் திருப்தியும் தியாகமும் பொறுமையும் நம்பிக்கையுமே உள்ளன. இத்தகைய கிராமவாசிகளினிடையே இதயமெனும் ஆசனத்தின்மீது வீற்றி ருந்து பிரகிருதி பாடுகின்றாள். பிரகிருதியின் அப்பாட்டுக்களே நாடோடிப் பாட்டுக்களாம்" என்று ஸ்ரீ ராம் நரேச் த்ரிபாடி எழுதி யிருப்பது முற்றிலும் பொருத்தமானதே.

நமது நாட்டின் இலக்கிய நிர்மாணத்தில் நாடோடிப் பாட்டுக் களின் இந்த இயற்கையான அமைப்பு மிக்க பயன் அளிக்கும். நமது இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் முன்னேறி வரும் இயற்கைக்கு விரோதமான அம்சங்களை யெல்லாம் இது களைந்தெறியும். இந்த உண்மையை அறிந்துதான், "இன்றைய யுகம் செயற்கையானது. நமது பாஷை, நமது வழக்கம், நமது பகுத்தறிவு, நமது கருத்து, நமது நீதி, நமது வாழ்க்கை எல்லாம் கிருத்திரிமங்களாகிவிட்டன. திறந்த வெளியில் சுற்றித்திரிவதோ அல்லது தூங்குவதோ நமக்குப்

பயத்தையும் வெட்கத்தையும் தரும் விஷயமாகிவிட்டது. இவ் விதமே சமூகம், அரசியல், குடும்பம் இவை சம்பந்தமான வியவகாரங்களில் இயற்கையோடு ஒட்டியிருக்கும் சக்தி நம்மிடம் இல்லை; இயற்கையோடு ஒத்திருந்தால் சாவோ அல்லது சர்வநாசமோ வந்துவிடும்போலும்! கிராம இலக்கியத்தைப் பயிலுவதாலும் அதை முன்னுக்குக் கொண்டுவருவதாலும் நாம் நமது இந்தக் கிருத்திரிமத்தன்மையாகிய கவசத்தைப் பிளக்க வல்லவர்களாவோம்; இயற்கைத் தன்மையாகிய தூய காற்றில் திரிந்து உலாவிச் சக்தி ஸம்பன்னர்களாவோம்'' என்று வரைகிறார் ஸ்ரீ காகா காலேல்கர்.

நாடோடிப் பாட்டுக்கள் விலையில்லா ரத்தினங்கள்; இவை நமது தேசத்தின் ஏழு லட்சம் கிராமங்களிலே சிதறிக் கிடக்கின்றன. இவைகளை ஒன்று திரட்டுவதற்கு ஏற்கெனவே பல மாகாணங்களிலும் முயற்சிகள் நடந்துள்ளன. முயற்சி ஒன்றும் நடைபெறாத இடங்களில் அதைத் தொடங்கவேண்டும்; முயற்சிகள் ஆரம்பமாகிவிட்ட இடங்களில் பின்னும் அதிகமாக வேலை செய்ய அடிகோலவேண்டும். தத்தம் மாகாணத்துப் பாட்டுக்களைத் திரட்டி ஒன்று சேர்த்து, நாட்டு இலக்கியத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் இளைஞர்கள் பலரை இன்று நம் நாடு எதிர்பார்த்து நிற்கின்றது.



# நாஸிகையும் அதன் அருகிலுள்ள ஸ்தலங்களும்

* 'மூர்த்திவாஸன்' *

**ப**ம்பாய் நகரத்திலிருந்து ஏறக்குறைய நூறுமைல் தூரத்தில் ஜி. ஐ. பி. ரெயில்மார்க்கத்தில் கோதாவரி நதிக்கரையில் இருக்கிறது நாஸிகை. இங்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் விசேஷத் தன்மை பொருந்தியவை. இந்தத் திவ்ய க்ஷேத்திரத்தில், ஸ்ரீராம பிரான் தம் வனவாசத்தின்போது சில வருஷங்கள் தங்கியிருந்ததாக ராமாயணம் கூறுகிறது. அருகில் ஏறக்குறைய ஒருமைல் தூரத்தில், சூர்ப்பணகையின் மூக்கை லக்ஷ்மணர் அறுத்த இடமாகிய தபோவனம் காணப்படுகின்றது. அதனால்தான் இந்த க்ஷேத்திரத்திற்கே நாஸிகை எனப் பெயர் வந்தது. சீதாபிராட்டியை ராவணன் தூக்கிச் சென்ற இடமாகிய பஞ்சவடியும் வெகு சமீபத்திலேயே உள்ளது.

வருஷமுழுவதும் யாத்திரிகர்கள் இந்த ஸ்தலத்தைத் தரிசிக்க வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். விசேஷமாகப் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை ஸிம்ஹாஷ்டமியன்று நடைபெறும் உற்சவத்தின்போது லக்ஷக்கணக்கான யாத்திரிகர்கள் இந்தியாவின் பல பாகங்களினின்று வந்து இங்கே குழுமுகிறார்கள். அன்று இவ்விடத்தில் கோதாவரிஸ்நானம் செய்தால் மிக்க புண்ணியம் உண்டு என்று சொல்கிறார்கள்.

நாஸிகைக்கு மேற்கே இருபது மைல்களுக்கு அப்பால் பிரம்ம கிரியினின்று உற்பத்தியாகிறது இப்புனித நதி. அம்மலையடிவாரத்தில்தான் திரயம்பகம் என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. இந்தியாவில் பிரஸித்தமான பன்னிரு லிங்கங்களுள் இந்த திரயம்பகேசுவரர் லிங்கமும் ஒன்றாகும். "அன்ன உருவா அரியும் வராக உருவாய் அயனும் கண்டு தெரிய முடியாத ஜோதிப் பிழம்பாய்ச் சிவபெருமான் நின்றார். அப்பொழுது பிரும்மா ஏதோ சொன்னதைக் கேட்டுக் கோபமுற்றுச் சிவபெருமான் அவரைச் சபித்தார். பிரும்மாவும் கோபமுற்று, 'நீ இப்படியே கல்லாகச் சமையக்கடவாய்' எனப் பதிலுக்குச் சாபம் விடுத்தார். உடனே சிவபெருமான் இந்தப் பிரம்மகிரியாக மாறினார். பின்பு பிரும்மா கோபந் தணிந்து சிவபிரானை வணங்கி மீண்டும் பழைய



பிரம்மகிரியில் கோதாவரி உற்பத்தியாகுமிடம்

நிலையை அடையவேண்டுமெனப் பிரார்த்தித்தும் அப்பெருமான் மலையுருவினராகவே தாம் இருக்க விரும்புவதாகத் தெரிவித்தார்'' என்பது புராண வரலாறு.

மேலே கூறிய ஸிம்ஹாஷ்டமி உற்சவத்திற்கு வரும் யாத்திரிகர்கள் முதன்முதலில் குசாவர்த்தம் என்ற புனித தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரயம்பகேசுவரரைத் தரிசிக்கச் செல்வார்கள். பிறகு கோதாவரி உற்பத்தியாகும் இடத்திற்குச் செல்வர். திரயம்பகத்திற்கு அருகிலேயே 700 படிகளைக் கடந்து மலையுச்சிக்குச் சென்றால் அவ்விடத்தைக் காணலாம். இம்மலை ஒரே செங்குத்தாக 300 அடி உயரம் இருக்கிறது. மலையுச்சிக்குக் கீழே ஒரு மண்டபம் காணப்படுகிறது. அதனுள் மலைச்சுவரில் கோமுகம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. அதினின்று ஜலமானது தொட்டி போன்ற ஒரு பள்ளத்தில் சொட்டுகிறது. அந்த ஜலம் பள்ளத்திலிருந்து எங்கோ மறைந்துவிடுகிறது. இந்தக் கோமுகத்திற்கு அர்ச்சனை செய்தவண்ணம் இருக்கிறார் ஒருவர். அவருக்கு இந்த நாட்களில் அதிக வரும்படி உண்டு. இந்தக் கோமுகந்தான் கோதாவரி உற்பத்தியாகும் இடம்!

பூமியினூடே கண்ணுக்குப் புலனுகாமல் இறங்கிக் கீழேயுள்ள திரயம்பகத்தருகில், பத்து அல்லது பன்னிரண்டு அடி அகலமும் முழங்கால் அளவு ஆழமும் உடைய சிற்றோடையாகக் கோதாவரி வெளிப்படுகிறது. வரவர அகலமாகிக்கொண்டே கிழக்கு முகமாக முப்பது மைல்கள் வரையில், பல குன்றுகளிடையே பாய்ந்து சென்று நாஸிகையை அடைகிறது. நாஸிகையின் பெரும்பான்மையான பாகம் நதியின் வலதுபக்கம் இருக்கிறது. பஞ்சவடி இடதுபுறம் இருக்கிறது. நதி ஆரம்பமுதல் கரையோரமெல்லாம் பல சைவ வைஷ்ணவ க்ஷேத்திரங்கள் காணப்படுகின்றன. இந்த க்ஷேத்திரங்களிலுள்ள கோயில்கள் 18-ஆம் நூற்றாண்டில் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழித்துக் கட்டப்பட்டன.

இங்கேயுள்ள காலராமர் கோயிலுக்கு அருகில்தான் புராதனமானவையும் புனிதமானவையும் ஆகிய ஐந்து ஆலமரங்களும் (பஞ்சவட விருக்ஷம்) ஓங்கி வளர்ந்திருக்கின்றன இந்த க்ஷேத்திரம் பஞ்சவடி என்று பெயர் பெற்றது இவற்றால்தான்.

அருகிலேயே ஸீதாதேவி குகையுள்ளது. இதனுள்ளிருக்கும் கர்ப்பக்கிருகத்தை அணுகுவதற்குத் தலை குனிந்தபடியேதான் செல்லமுடியும்.

நாஸிகைக்கருகிலுள்ள பாண்டுலேணக் குகைகள் சரித்திரப் பிரஸித்தமானவை. இவை இருக்கும் மலையின் அடிவாரம்



கோதாவரிக்கரையில் பஞ்சவடியும் நாஸிகையும்



பாண்டுலேனுக் குகைகள் அமைந்துள்ள மலை

பஞ்சவடியிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. பாண்டவர்களுக்கும் இந்தக் குகையில் இருக்கும் சிற்பங்களுக்கும் கல்வெட்டுக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அவை பௌத்த மத ஸம்பந்தமானவை. மொத்தம் பதினேழு குகைகள் இரண்டு பர்லாங்கு அளவுக்கு, வரிசையாக வடபுறம் நோக்கியபடி, தரை மட்டத்திற்கு 300 அடி உயரத்தில் இருக்கின்றன. இவற்றுள் சைத்தியகுகை, விஹாரைக்குகை, ஸத்தரகுகை என மூவகையும் உள்ளன. சைத்தியக் குகைகள் பிரார்த்தனைக்கூடங்களாகும். விஹாரைக் குகைகள் பௌத்த பிக்ஷுக்கள் வசிப்பதற்காக நிருமிக்கப்பட்டவை. ஸத்தர குகைகள் போஜனசாலைகளாகும்.

13-ஆம் எண்ணுள்ள குகை சைத்தியவகையைச் சேர்ந்தது. ஏறக்குறைய மாதாகோயிலின் உட்பாகம்போல் நீளமாகக் காணப்படுகிறது. உட்புறத்தின் கோடியில் புத்தரின் தந்தமோ எலும்போ அடங்கிய சிறிய வட்டவடிவமான ஸ்தூபம் ஒன்று ஒரு பீடத்தில் காணப்படுகிறது. இந்த ஸ்தூபம் $5\frac{1}{2}$ அடி அகலமும் 6 அடி உயரமும் கொண்டதாக இருக்கிறது. இவ்வகைக் குகைகளில் சித்திரவேலைப்பாடுகளோ கல்வெட்டுக்களோ காணப்படவில்லை. ஆயினும் குகைக்கு வெளியே அற்புதமான சித்திர வேலைப்பாடு உண்டு.

விஹாரை வகையைச் சேர்ந்த குகைகளில் ஒவ்வொன்றும் பெரிய கூடங்களைப்போல் இருக்கின்றது. உள்ளே பக்கச்சுவர்களில் சிறிய சிறிய அறைகள் குடையப்பட்டுள்ளன. ஒவ்வோர் அறையிலும் பிக்ஷுக்களுக்காக ஒரு கல்மேடை இருக்கிறது. 3-ஆம் எண்ணுள்ள கௌதமீபுத்ர குகை இவ்வகையைச் சார்ந்தது. இதன் கூடம் 41 அடி அகலமும் 46 அடி நீளமும் உடையதாக இருக்கின்றது. பக்கச்சுவர்களில் 18 சிறிய அறைகள் இருக்கின்றன. இங்கே விசேஷமான சிற்பவேலைப்பாடு காணப்படவில்லை. ஆயினும் முன்புறம் வராந்தாவிலும் தூண்களிலும் உள்ள சிற்பங்கள் பார்க்கத் தகுந்தவை.

8-ஆம் எண்ணுடையது நாகபணக்குகையாகும். விஹாரைக் குகைகளுள் முன் சொன்ன குகையைவிட இது கம்பீரமாக விளங்குகிறது.

ஸத்தர குகைகளும் விஹாரைகளைப்போலவே பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் உட்பக்கச் சுவரில் அறைகள் குடையப்படவில்லை. இதுதான் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம்.

இக்குகைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் பிற்காலத் தவையாகும். கௌதமபுத்தர், போதிஸத்வர், பத்மபாணி, பௌத்த தேவதையாகிய தாரை முதலியவர்களின் உருவங்கள் இவற்றுள் முக்கியமானவை.



பாண்டுலேனக் குகைச் சிற்பங்கள்

15-ஆம் எண்ணுள்ள குகையில்மட்டுமே இன்னும் பூஜாவிதிகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இதனுள் இருக்கும் கர்ப்பக் கிருகத்தில், பத்மாஸனத்து வீற்றிருக்கும் பிரும்மாண்டமான புத்தர் சிலையொன்று காணப்படுகிறது. மேலிருந்து தொங்குகின்ற எண்ணெய் விளக்குகளின் மங்கிய ஒளியில், ஒட்டடை படிந்து கறுத்துப்போன குகையின் உட்பாகத்தில் இந்த உருவம் ஒன்றுதான் சற்றுப் புலனாகிறது.

11-ஆம் எண்ணுள்ள குகையின் முன்பாகம் முழுதும் மறைந்துவிட்டது. பின்பாகத்திற்கும் ஓர் இரும்பு ஏணியின் மூலமே செல்லமுடியும். இங்கே சில விடங்களில் சுவர்கள் மெதுவாகவும் தொட்டால் பொடிப் பொடியாக உதிரும் தன்மை யுடையனவாகவும் இருக்கின்றன. இப்போது நம் கண் முன்னரே இந்தச் சிற்பக்களஞ்சியங்கள் சிறிது சிறிதாக மறைந்து வருகின்றன.

## : பூதத்தம்பி கோட்டை :

* சி. வைத்தியலிங்கம் *

### 1

"அதோ தெரிகிறதே, ஒரு பாழடைந்த மாளிகைமாதிரி. அதென்ன?" என்று சுட்டிக் கேட்டார் என்னுடன் வந்த நண்பர். நானும் தோணிக்காரனும் திரும்பி அத்திசையை நோக்கினோம். தூரத்திலே அடிவானம் சமுத்திரத்தைத் தழுவும் இடத்தில் பிடுங்கி எறியப்பட்ட குன்றுபோல் ஒரு கட்டிடம் நிமிர்ந்து நின்றது. நான் தோணிக்காரனைப் பார்த்தேன். அவன், "தம்பி, அதுதான் பூதத்தம்பியின் கோட்டை" என்றான். "பூதத்தம்பியின் கோட்டை! அவ்விடத்திற்குக் கொண்டு போ தோணியை" என்றேன். தோணி அன்னம்போல் உல்லாசமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

தோணிக்காரன், "தம்பி, இது உங்களுக்குத் தெரியாததே பெரும் புதுமை. இந்தப் பிராந்தியத்தில் எந்தச் சிறுவனைக் கேட்டாலும் சொல்லுவானே. அந்தக் கோட்டைக்குப் பக்கத்திலே போகவும் இத்தீவுப்பற்றிலுள்ளவர்கள் பயப்படுகிறார்கள். இருண்டதும் அங்கே அழுகையும், கூக்குரலும் கேட்டுக் கொண்டே யிருக்குமாம்" என்றான்.

தோணிக்காரன் சொல்லிக்கொண்டே வந்ததில் என் மனம் செல்லவில்லை. அது பின்னே முந்நூறு வருஷங்களுக்குச் சென்று கொண்டிருந்தது. குழந்தைப் பருவம் முதல் நான் கேள்விப்பட்டிருந்த பூதத்தம்பி முலியாரை இத்தனை வருஷங்களுக்குப் பிறகு நேருக்கு நேரே காணப்போவதாக எண்ணி என் மனம் துடித்தது.

தோணி, கோட்டையைச் சமீபித்ததும் என் நெஞ்சு துரிதமாய் அடிக்கத் தொடங்கியது. ஓங்கி உயர்ந்து நின்ற அக்கோட்டை பழமையிலே ஓர் உன்னதம் பெற்று மனத்திலே ஒரு திகிலையும், பயபக்தியையும் உண்டுபண்ணிவிட்டது. கோட்டையை அடைந்து அதன் வாசலிலே நான் கால் வைத்தேன். என் மேனி சிலிர் சிலிர்த்தது.

நாங்கள் கோட்டைக்குள் நுழைந்து ஒவ்வோர் அறையாகப் பார்வையிட்டு வந்தோம். அப்பொழுது இக்கோட்டையுடன்

சம்பந்தப்பட்ட அபூர்வமான வாழ்க்கை நாடகமும் என் கண் முன்னே நடப்பதுபோல் இருந்தது.

## 2

1658: யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டுப் போர்த்துக்கீசியரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றிக்கொண்டார்கள். தேசத்துரோகிகளும் சுயநலப் பிரியரும் மலிந்து, நாட்டின் பரிபாலனம் தளர்ந்துவிடவே சூழ்ச்சிகளும் கொலைகளும் குழப்பங்களும் யாழ்ப்பாண வாசிகளைக் கலக்கிக்கொண்டிருந்தன. இந்தப் பதினேழாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதி யாழ்ப்பாண சரித்திரத்தில் மஹாபயங்கரமான காலமென்றே சொல்லிவிடலாம்.

அப்பொழுது 'வான்டர் மெய்டீன்' என்பவன் டச்சுக் கவர்னராய் இருந்தான். புதிதாய்க் கவர்ந்துகொண்ட இப்பகுதியில் தங்கள் அதிகாரம் ஸ்திரமாக நிலை நாட்டப்படவேண்டுமென்று நினைத்து அதற்கு வேண்டியவை செய்யும்படி 'அந்தோனியா அமரால் மென்சீஸ்' என்பவனை யாழ்ப்பாணத்துக் 'கம்மந்தானுக' (Commandant) நியமித்திருந்தான். அதனுடன் அந்திராசி முதலி என்னும் ஒரு சிங்களப் பிரபுவை அவனுக்குக் கீழ்ப் பிரதம காரியதரிசியாக நியமிக்கும்படி கட்டளை ஒன்று இட்டிருந்தான்.

ஆனல் அந்தோனியா அமரால் வேறுவிதமாக நினைத்தான். அவன் அப்படி நினைத்ததற்கும் போதிய நியாயம் இருந்தது. அந்த முக்கியப் பதவிக்குப் பூதத்தம்பி முதலியாரே தகுதி வாய்ந்தவரென்று நினைத்து அவரையே பிரதம காரியதரிசியாக நியமித்துவிட்டான்.

பூதத்தம்பி முதலியார் வேளாள குலத்தவரின் அதிபதி; ஒரு புராதனமான பெயர்பெற்ற வம்சத்திலிருந்து தோன்றியவர். அவருடைய முன்னோர்களில் ஒருவராகிய பொன்பற்றியூர்ப் பாண்டிய அரசகேசரி மழவராயன் என்பவனே, சிங்கை ஆரியன் கூழங்கைச் சக்கரவர்த்தியை இந்தியாவிலிருந்து பல வருஷங்களுக்குமுன் கொண்டுவந்து யாழ்ப்பாணத்தில் தமிழர் ராஜ்யத்தை நிலைநிறுத்தியவன். அன்று தொடங்கிய ராஜவம்சம் யாழ்ப்பாணத்தில் கடைசியாக ஆண்ட பரராசசேகரன் வரைக்கும் அழியாமல் தொடர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்திருக்கிறது.

இம்மட்டோ? அந்த நாள் தொடங்கி ஏழு நூற்றாண்டுகளாய் அவருடைய குடும்பத்தினர் ராஜாங்கத்தில் அதி உன்னத பதவிகள் வகித்து வந்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர் இடையிடையே ராஜ

வம்சத்தில் விவாகஞ் செய்து ராஜ்யபாரம் தாங்கி யாழ்ப்பாணச் சிங்காசனத்தில் வீற்றிருந்ததும் உண்டு.

ஆனல் அவர் பிரதமகாரியதரிசியாக நியமனம் பெற்றதற்கு வேறொரு முக்கியமான நியாயம் இருந்தது. சிங்கள நாட்டிற்கும் யாழ்ப்பாண ராஜ்யத்திற்கும் இடையிலே கிடந்தது 'வன்னி' என்ற ஒரு நிலப்பிரதேசம். இப்பகுதியை ஆண்டுவந்த ராஜ குடும்பத்தினருடன் பூதத்தம்பி முதலியாருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. இந்த எல்லைப்புற மாகாணம் எப்பொழுதும் கலகங்களுடனும் சண்டைகளுடனும் கொந்தளித்துக்கொண்டிருக்கும். வன்னியர்கள் போர்த்துக்கீசியரை வெட்டவெளிச்சமாய்ப் போருக்கு அறை கூவி அழைத்துப் பயமுறுத்திக் கொண்டிருந்தனர். இப்பொழுது எந்நேரத்திலும் டச்சுக்காரரை முறியடிக்க வெளிக்கிளம்பி விடுவார்கள் என்ற பயமும் அந்தோனியோ அமராலுக்கு இல்லாமல் இல்லை.

ஆகவே, அந்தோனியோ அமரால் இவைகளெல்லாவற்றையும் யோசித்தே பூதத்தம்பி முதலியாருக்கு அப்பதவியைக் கொடுக்க உறுதிகொண்டான். அவருடைய பரந்த செல்வாக்கையும், பூரண ஆதரவையும் பெற்று, கொந்தளித்துக் கொண்டிருந்த இப்பகுதியிலே தங்களுடைய ஆட்சியைச் சீராய் அமைத்துவிடலாமென்று நினைத்தான் அவன்.

ஆனல் அந்திராசி முதலிக்கு இவ்விதச் சிறப்புகள் ஒன்றும் இருக்கவில்லை. அவன் யாழ்ப்பாணத்தவருக்கோ அந்நியன். அவனுக்கும் பூதத்தம்பி முதலியாருக்கும் இடையில் மடுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை அந்தோனியோ அமரால் கண்டான். எனவே, அந்திராசியைத் தன் சொந்தக் காரியதரிசியாக வைத்துக்கொண்டான். ஆனல் பேராசைகொண்ட அந்திராசியின் மனம் இச்சிறபதவியுடன் நிறைவுபெறவில்லை.

வாய்க்குக்கொண்டுபோன பழத்தை அந்தோனியோ அமரால் தட்டிப் பறித்து வேறொருவனுக்குக் கொடுத்துவிட்டான் என்று நினைக்கவே அந்திராசியின் மனம் புகைந்தது. உடனே கொழும்பிலிருந்த கவர்னர் அவர்களுக்கு ரகசியமாய் ஒரு கடிதம் அனுப்பினன்:

"நான் தங்களுக்கு முறையிட்டுக்கொள்வதற்கு ஒரே ஒரு காரியந்தான் இருக்கிறது. மாட்சிமை தங்கிய தாங்கள் யாழ்ப்பாணத்தின் பிரதம காரியதரிசியாக என்னை நியமிக்கும்படி கட்டளை கொடுத்திருந்தீர்கள். ஆனல் கம்மந்தான் அவர்கள் எனக்குப் பதிலாக் வேறொரு பிராமணனை நியமித்திருக்கிருர்.........அவனு

டைய சகோதரன் ஒருவன் கண்டிராஜாவின் அரண்மனையிலே இருக்கிறான்........."

அக்கடிதத்தில் 'பிராமணன்' என்றது பூதத்தம்பி முதலியாரையே! அந்நாட்களில் கண்டியை அரசாண்டுவந்தவன் ராஜசிங்கன் என்ற சிங்கள அரசன். அவன் டச்சுக்காரருடன் அப்பொழுது பகைத்திருந்தான்.

இந்தக் கடிதத்தைப் பற்றிப் பூதத்தம்பி முதலியாருக்கு ஒன்றுந் தெரியாது. அந்திராசி, தன் மனத்துக்குள் வளர்த்துவரும் பொறாமையையும், மனக்குறையையும் அவர் அறியவில்லை. அந்திராசி எல்லாவற்றையும் மறைத்து அவருடன் சிநேகப்பான்மையாய் நடந்து கொண்டான். நாளடையில் பூதத்தம்பி முதலியார் அந்திராசியைத் தம் ஆப்த நண்பனைக் கருதினார்.

ஒரு நாள் பூதத்தம்பி முதலியாரின் மாளிகையில் ஒரு பெரிய விருந்து நடந்தது. அவருடைய மாளிகை இன்றும் நல்லூர்க் கந்தஸ்வாமி கோவிலுக்கருகில் பாழடைந்து கிடக்கிறது. அந்த விருந்துக்கு அந்திராசியும் அழைக்கப்பட்டான்.

அந்திராசி முதலி பரதவகுலத்தைச் சேர்ந்தவன். அதிலும் சிங்களவன். அவனுக்குப் பிரத்தியேகமான ஓர் அறையில் உணவு பரிமாறப்பட்டது. மற்றைய விருந்தினர் மாளிகையின் போஜன மண்டபத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அந்திராசி முதலிக்கு இரண்டு வேலைக்காரர் பணிவிடை செய்துகொண்டு நின்றார்கள். பூதத்தம்பி முதலியாரே பக்கத்தில் நின்று, தம் நண்பனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தார்.

சிறிது நேரத்திலே அவர் வேறு விருந்தினர்களிடம் போய்விட்டார்.

அந்த வேளையில் பூதத்தம்பி முதலியாரின் மனைவியாகிய அழகவல்லி விருந்தினர்களிடம் போய்ப் பேசி அளவளாவிக்கொண்டு வந்தாள். அவள் ஆடவரின் உணர்வழிக்கும் வனப்பு வாய்ந்தவள். மெல்லிய மல்லிகைக் கொடிபோல் சுற்றிக்கொண்டு வந்தவள், அந்திராசி சாப்பிட்டுக்கொண்டிருந்த அறையின் வாசலை அடைந்ததும் சிறிது தயங்கி, அறைக்குள் பிரவேசித்தாள். அந்திராசியைப் பார்த்து அன்புடன் புன்னகை செய்துவிட்டுச் சட்டெனப் போய்விட்டாள்.

அந்திராசி அவளுடைய பேரெழிலிலே மயங்கிப்போனான். அவள் அறையிலே தோன்றியதும், மின்னல் கொடிபோல் சட்டென மறைந்ததும் அதிதுரிதமாய் நடந்துவிட்டனவே என்று ஏங்கினான். அவளை அடையவேண்டுமென்ற ஓர் ஆசை

நெஞ்சிலே தோன்றி அவனுடைய காம வேட்கையைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது. 'ஐயோ! அவள் இன்னும் சில நிமிஷங்கள் தாமதித்திருக்கக்கூடாதா? அவளுடைய மாதுர்யமான வடிவத்தின் ஒவ்வொரு கோட்டையும், பரிபூரணமான வளைவுகளையும் என் ஆசைதீரப் பார்த்து மகிழ்ந்திருப்பேனே!' என்று அவன் மனம் அங்கலாய்த்தது.

அவனுக்குச் சாப்பாட்டிலே மனம் செல்லவில்லை. ஏதோ சாக்குச் சொல்லிவிட்டு உடனே மாளிகையிலிருந்து போய்விட்டான். பூதத்தம்பி முதலியார் அவன் அவசரமாய்ப் போனதைப் பற்றி வித்தியாசமாய் ஒன்றும் நினைக்கவில்லை.

அழகவல்லியின் மோஹனச் சிரிப்பும், ஒயில் நிறைந்த வடிவமும் அவனைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தன. தன் மாளிகையை அடைந்தும் அவன் மனத்தில் மூண்ட காமத் தீக் குறையாது சுவாலை விட்டெரியத் தொடங்கியது.

காமப்பித்துக் கொண்டவர்கள் தாங்கள் நினைத்த காரியத்தை உடனே செய்யவேண்டுமென்று துடித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களால் ஆர அமர யோசிக்க முடிகிறதில்லை. அந்திராசியும் உடனே தன் இச்சையைப் பூர்த்திசெய்ய வழி தேடினன். தன் பணியாட்களில் நம்பத்தக்க ஒருவனை அழைத்து, அவனிடம் பொன்னும் ஆபரணங்களும் கொடுத்து, அவைகளை அழகவல்லியிடம் சேர்ப்பித்துவிட்டு அவளைத் தனியே ரகசியமாய் எப்போது எவ்விடத்தில் காணலாம் என்று அறிந்து வரும்படி அனுப்பினன்.

அழகவல்லி வன்னிப் பகுதியை ஆண்டுவந்த ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவள். கைலாய குமார வன்னியரின் சகோதரி. அந்த ராஜ குடும்பத்தினர் அதிபராக்கிரமசாலிகள்; அகந்தையும் இறுமாப்பும் கொண்டவர்கள். அவளுடைய ரூபசௌந்தர்யத்தைப் போல, அவள் கற்புடைமையும் ஒப்புயர்வற்றிருந்தது. அதோடு, அவளுடைய குடும்பத்தினரின் அகந்தையும், கர்வமும், நற்குணமும் அவளிடத்திலும் அமைந்திருந்தன.

அந்திராசி முதலியின் தூதுவனிடமிருந்து அந்த அருவருப்பான விஷயத்தை அறிந்ததும், தன் மனத்திலே மூண்ட கோபாக்கினியைத் தாங்கமுடியாது அவளே நடுங்கினள். அகந்தையும் அவமானமும் நிறைந்த வாசகங்களினலே அவனை ஏசி, விளக்குமாறு கொண்டு அடிப்பித்து அனுப்பினள். தூதுவனை வெறுங்கையோடு அனுப்ப அவள் விரும்பவில்லை. அந்திராசி அனுப்பியிருந்த நகைப் பெட்டியுடன் ஒரு ஜோடிச் செருப்பையும் சேர்த்துக் கட்டி அனுப்பிவிட்டாள்.

இதனால் என்ன தீங்குகள் நேருமோ என்று பயந்து, அந்தச் சம்பவத்தைப் பற்றித் தன் கணவனிடம் அவள் மூச்சும் விடவில்லை.

அந்திராசியின் வேண்டுகோளை அவள் அவமதித்துக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டாள். அவன் உடனே பழி வாங்கத் தீர்மானித்தான்.

அந்தச் சமயம் அந்திராசியின் சூழ்ச்சிக்கு அநுசரணையாயிருந்தது: ஊரிலே கலகங்களும், ராஜத் துரோகமான காரியங்களும் மும்முரமாய்ப் பரந்துகொண்டிருந்தன.

பூதத்தம்பி முதலியாரின் செல்வாக்குள்ள நெருங்கிய நண்பர்களுள் அந்தோனியோ அமராலின் தம்பியும் ஒருவன். அவனும் யாழ்ப்பாணக் கோட்டைத் தலைவனாகிய சின்ன உலகநாதரும் நெடுந்தீவிலே எழுந்துகொண்டிருந்த கடற் கோட்டையை மேற்பார்வை பார்க்கப் போய்விட்டார்கள். (அக்கோட்டையிலே தான் நான் இப்பொழுது நிற்கிறேன். அதைத் தான் 'பூதத்தம்பி கோட்டை' என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.)

அந்தக் கோட்டையைக் கட்டுவதற்கு மரங்கள் தேவையாயிருந்தன. அதற்குக் கடிதம் எழுதி வரவழைப்பதற்குப் பூதத்தம்பி முதலியாரின் கைச் சாத்து வேண்டியிருந்தது. அந்திராசி ஒரு வெள்ளைக் காகிதத்தைக் கொண்டுபோய்ப் பூதத்தம்பி முதலியாரிடம் நீட்டி, "கச்சாய்த் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு மரங்கள் வரவேண்டும். எவ்வளவு மரத்துண்டுகள் தேவையாக இருக்குமென்று எனக்குத் தெரியாது. நான் எல்லாவற்றையும் அறிந்து பின்பு எழுதிக்கொள்ளுகிறேன். நீங்கள் கீழே கையொப்பம் இட்டுக் கொடுங்கள்" என்று சொன்னான். பூதத்தம்பி முதலியாரின் 'ஆப்த நண்பனாகிய' அந்திராசியே இங்ஙனம் கேட்டான். பூதத்தம்பி முதலியார் கைச் சாத்திட்டுக் கொடுத்துவிட்டனர்.

ஐயோ! பூதத்தம்பி முதலியார் தம்முடைய நண்பனை நம்பித் தமது மரணத்திற்கே கையொப்பம் வைத்துக்கொடுத்துவிட்டனர்.

அந்திராசி அந்தக் கடிதத்தை ராஜத்துரோகமான விஷயங்களால் நிரப்பி, பூதத்தம்பி முதலியார் கண்டி அரசனாகிய ராஜசிங்கனுக்கு எழுதிய ஒரு கடிதம்போல ஆக்கிவிட்டான். சின்ன உலகநாதருடனும் சில போர்த்துக்கீசியருடனும் சேர்ந்து யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிப்பதற்குத் தாம் உதவி செய்வதாகவும், உடனே டச்சுக்காரரைத் துரத்துவதற்கு ஒரு சேனைப் போர்வீரர்களை அனுப்பும்படி கேட்பதாகவும் அது அமைந்திருந்தது.

அந்தக் கடிதத்தைக் கொண்டு சென்ற தூதன் பிடிக்கப்பட்டுக் கவர்னரிடம் கொண்டுவரப்பட்டான். முன்னரே ஒழுங்கு செய்து

வைத்திருந்தபடி தூதுவன் தன் பகுதியை அழகாக நடித்தான். இந்த நாடகத்திலே சேர்ந்த மற்றைய பாத்திரங்களும் தங்கள் பகுதியைச் சிறப்பாய் நடித்துவிட்டார்கள்.

அப்பொழுது தேசம் இருந்த நிலைமையும், சூழ்ந்திருந்த விஷயங்களும் பூதத்தம்பி முதலியாருக்கும் அவருடைய சினேகிதர்களுக்கும் பாதகமாயிருந்தன.

நாடு முழுவதும் கலகங்களும், சூழ்ச்சிகளும் கூடிக்கொண்டு வந்தன. ஒரு சிறிய சம்சயம் இருந்தாலும் நாட்டிலுள்ள ஜனங்களைச் சிரச்சேதஞ் செய்துகொண்டிருந்தனர் டச்சுக்காரர். யாழ்ப்பாணத்திலே இருந்த டச்சுப் போர்வீரர்களிற் பெரும்பாலோர் இந்தியாவுக்கு நாகபட்டணத்தை அடக்குவதற்குப் போய்விட்டார்கள். எல்லைப்புறத்துக்கு அப்பால் கூட்டில் அடைபட்ட சிங்கம்போல, ராஜசிங்கன் டச்சுக்காரரைப் பழி வாங்கக் கர்ஜித்துக்கொண்டிருந்தான். இவைகளுடன் பூதத்தம்பி முதலியாரின் சகோதரன் ஒருவன் ராஜசிங்கனுடைய அரண்மனையிலே இருப்பதாக ஒரு வதந்தியும் உலாவியது.

அந்தக் கபட நாடகம், அந்திராசி முதலியின் தூண்டுதல், வாத விவாதங்கள் எல்லாம் சேர்ந்து பூதத்தம்பி முதலியாரை ராஜத்துரோகி என்று முடிவாக உறுதிப்படுத்திவிட்டன. கவர்னரும் அதை நம்பிவிட்டார்.

அந்தக் கடிதத்தைத் தமக்குப் பலமாக வைத்துக்கொண்டு, பூதத்தம்பி முதலியாரைச் சிரச்சேதஞ் செய்யும்படி கட்டளை கொடுத்துவிட்டார். என்ன அநியாயமான கட்டளை என்றாலும் அக்கட்டளையின்படி பூதத்தம்பி முதலியார் கொல்லப்பட்டார்.

அழகவல்லி, அந்திராசி வெற்றியுடன் வாழ்வதைத் தன் கண்களால் பார்க்கவும் கூடாதென்று நஞ்சுண்டு உயிர் நீத்தாள்.

பூதத்தம்பி முதலியாருக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி நெடுந்தீவுக் கோட்டையிலிருந்த சின்ன உலகநாதர் கேள்விப்பட்டுத் தமக்கும் இங்ஙனம் அநியாயமான தீர்ப்புக் கிடைத்துவிடுமோவென்று பயந்து தற்கொலை செய்துகொண்டாராம்.

## 3

**நா**ன் நின்றுகொண்டிருந்த அந்தக் கோட்டையிலே சின்ன உலகநாதர் தற்கொலை செய்துகொண்டாரென்று நினைக்கவே என் உரோமங்கள் குத்திட்டு நின்றன. ஒவ்வொரு கற்றூண் மறைவிலும் யாரோ நின்று பல்லைக் காட்டுவதாக எனக்குத் தோன்றியது. எங்கிருந்தோ அழுகை ஒலியும், கூக்குரலும், சிரிப்பும், மணிச்

சப்தமும் கேட்பதாக நினைத்தேன். அப்பொழுது அந்திராசி முதலி போன்ற ஒரு தோற்றம் தூரத்திலே நின்று என்னைப் பார்த்துச் சிரிப்பதாக எண்ணிப் பக்கத்திலே கிடந்த கல்லை எடுத்து எறியப்போனேன்......"வா இருண்டுவிட்டது. படகுக்குப் போகலாம்" என்று என் கையைப் பிடித்து இழுத்தார் என் நண்பர்.

ஆம், நன்றாக இருண்டுவிட்டது. கனத்த அந்தகாரம் வந்து உலகத்தைத் தன் போர்வையால் மூடிக்கொண்டது. வானத்திலே நக்ஷத்திரங்கள் நிறையப் பூத்திருந்தன. அம்புலியின் மூன்றாம் பிறை ஒன்று முகிற் கூட்டத்திலே தொங்கிக்கொண்டு நின்றது. நாங்கள் தோணியிலே உட்கார்ந்திருந்தோம். அப்பொழுது நான் என் நண்பனைப் பார்த்துச் சொன்னேன்: "அந்திராசி விரித்த வலையிலே பூதத்தம்பி முதலியார் அகப்பட்டுப்போனார் என்று பரம்பரையாகக் கதை இருந்துவருகிறது. ஆனால் இலங்கைச் சரித்திரம் என்ன சொல்லுகிறது பார்: '1658-இல் பூதத்தம்பி முதலியாரும், சில போர்த்துக்கீசியரும், இரண்டாம் ராஜசிங்கனுடன் சேர்ந்து டச்சுக்காரருக்கு எதிராக ஒரு சூழ்ச்சி செய்தார்கள். தெய்வச் செயலாக அந்திராசி முதலியார் என்ற சிங்களப் பிரபு ஒருவராலே அது கண்டு பிடிக்கப்பட்டது. துரோகிகள் எல்லோரும் கொல்லப்பட்டனர்' என்றல்லவா கூறுகிறது?"

அப்பொழுது நாங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு நின்ற தோணிக்காரன், "அப்படியா தம்பி, வெள்ளைக்காரன் எழுதியிருக்கிறான்? ஏன், பூதத்தம்பி முதலியார் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டவுடன் எங்கள் அழகவல்லி நாச்சியாரின் தமையன் கைலாயகுமார வன்னியர் உடனே கொழும்புக்குச் சென்று கவர்னரைக் கண்டு இந்த விஷயத்தைப்பற்றித் தீர விசாரிக்கும்படி கேட்டாராமே. அவர் கேட்டுக்கொண்டபடி எல்லாம் விசாரித்துக்கொண்டு வந்தபோது, அந்திராசி முதலி செய்த சூழ்ச்சிகளெல்லாம் வெளிவந்துவிட்டனவாம். உடனே அந்திராசி முதலிக்குக் கொழும்புக்கு வரும்படி கட்டளை வந்ததும் அவன் கொழும்புக்குப் போகும் வழியிலே யானை அடித்துச் செத்துப் போனானாம். இது அந்தப் புத்தகம் எழுதின வெள்ளைக்காரனுக்குத் தெரியாதா, தம்பி?" என்றான். "ஒருகால் அவன் அறியாமலிருக்கலாம்" என்றேன். "ஏன் தம்பி அவனுக்குத் தெரியாமலிருக்கப் போகிறது? இக்கதை பரம்பரை பரம்பரையாக வந்திருக்கிறதே; உண்மையில்லாமல் வந்திருக்குமா? அவர்கள், புத்தகங்களிலே உண்மையே எழுதுகிறதில்லையாமே!" என்றான்.

நான் ஒன்றும் பேசவில்லை. தோணிக்காரன் சொன்னதில் எவ்வளவோ உண்மை இருந்தது.

எங்கள் தோணி பாயை விரித்து யாழ்ப்பாணத் துறைமுகத்தை நோக்கித் துரிதமாய்ச் சென்றுகொண்டிருந்தது.

# : தேசாந்தரத்தில் தமிழன் :

* வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. *

சுமார் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம். அதுதான் முதன் முதல் நான் தமிழ் நாட்டின் வட எல்லையைக் கடந்து வட இந்தியாவிற்கு வந்த காலம். நம் தேசத்து முக்கியப் பட்டணமான 'புது டெல்லி' என்னுமிடத்தில் ஒரு பரீக்ஷை கொடுப்பதற்காகப் போயிருந்தேன். ஒருநாள் மாலை பரீக்ஷை முடிந்தவுடன் அவ்வூரில் புதியனவாய் நிர்மாணிக்கப் பட்டிருந்த சில ரஸ்தாக்களின் வழியாக உலாவி இயற்கையுடன் சற்று உறவாடுவதற்காகப் புறப்பட்டேன். அந்த ரஸ்தாவில் நான் சென்றுகொண்டிருந்த திசையில் என்னைத் தவிர வேறு எவரும் செல்லவில்லை. ஆனால் எதிர்த் திசையில் மட்டும் திரள் திரளாக ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். அருகில் ஒரு சந்திலிருந்து அந்த ரஸ்தாவில் நுழைந்து நான் சென்ற திக்கை நோக்கி நடக்க ஆரம்பித்த ஒருவரை அணுகி எதிரில் வந்துகொண்டிருந்த கூட்டத்தின் காரணத்தை விசாரித்தேன். அது, ஒரு பந்து விளையாட்டிலிருந்து கலைந்து வீடு செல்லும் கூட்டம் என்றார் அவர். தொடங்கிய சம்பாஷணையை விடாது நடத்தினேன். நாங்கள் பேசிய விஷயம் லோகாபிராமமாய்த்தான் இருந்தது. பேச்சு முடிந்து அவர் என்னை விட்டுப் பிரியுந் தருணத்தில், "இந்தக் கேள்விக்கு என்னைச் சற்று மன்னிக்க வேண்டும். நீங்கள் 'மதராஸி'தானே?" என்றார்.

இக்கேள்வி எனக்குச் சற்று ஆச்சரியம் அளித்தது.

"ஆமாம். நீங்கள் இதை எப்படித் தெரிந்துகொண்டீர்கள்? நான் வேஷ்டி கட்டியிருக்கும் முறையிலிருந்தா?" என்றேன்.

'அடைய வளைந்தான்', 'தட்டுச் சுற்று' என்று குறிக்கப்படும் முறையில் நான் வேஷ்டியை உடுத்திருந்தேன். இம்மாதிரி வட இந்தியாவில் ஒருவரும் துணி கட்டுவதில்லை. சீக்கியர்கள் மட்டுந்தான் சில சமயங்களில் இப்படிக் கட்டிக்கொள்ளுகின்றனர். ஆனால் அவர்கள் முகத்தில் வளர்க்கும் ரோமத்தினால் அவர்களை எளிதிற் கண்டுபிடித்து விடலாம். வட இந்தியாவில் ஹிந்துக்கள் எந்த ஜாதியினராயிருப்பினும் கச்சம் வைத்துத்தான் வேஷ்டியை உடுக்கின்றனர்.

என் கேள்விக்கு அவர் அளித்த விடை அவருடைய கேள்வியைவிட அதிக ஆச்சரியத்தை அளித்தது.

"ஏன்? நீங்கள் பேசும் அழகான ஆங்கிலத்திலிருந்தே நான் உங்கள் ஊரைத் தெரிந்துகொண்டு விட்டேன்" என்றார்.

இப்புகழ் மொழியை நான் பலமுறை வட இந்தியரிடத்திலிருந்து கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஏன்? நம் தேசத்தையும் நம்முடைய பழக்க

வழக்கங்களையும் இகழவேண்டியே இந்தத் தேசத்திற்கு வந்த மிஸ் மேயோ என்னும் அமெரிக்க தேசத்தவளும் தான் எழுதிய 'இந்தியத்தாய்' என்னும் புத்தகத்தில் தென்னிந்தியனின் ஆங்கிலப்பயிற்சியைக் குறித்துப் பல விடங்களில் வாயாரப் புகழ்ந்திருக்கிறாள். வசை மொழிகளே நிறைந்துள்ள அப்புத்தகத்தில் இப்புகழுரை அமைந்திருப்பது அதற்கு ஒரு தனிப் பெருமையைக் கொடுக்கிறது.

இதே புகழ் மொழியை ஒரு சந்தர்ப்பத்தில் என்னுடைய பஞ்சாபி நண்பன் ஒருவனிடத்திலிருந்து நான் கேட்டதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன் :

இந்த நண்பன் தன்னுடைய மாகாணத்தவரைப் பற்றி அதிகக் கௌரவமாய் நினைப்பவன். இதர மாகாணத்தவர்—அதிலும் சென்னை மாகாணத்தவர்—பஞ்சாபிகளுக்கு ஒரு விதத்திலும் இணையாகார் என்ற கொள்கையையுடையவன். இதைப் பலமுறை அவன் பிறர் முன்னிலையில் வெளியிட்டதுமுண்டு. ஒருசமயம் ஒரு பஞ்சாபி உத்தியோகஸ்தரைக் குறித்து இவன் பேசுகையில், "இந்த அதிகாரி வெகு சாமர்த்தியசாலி. எங்கள் மாகாணத்திற்கே இவரால் ஒரு பெருமை ஏற்பட்டிருக்கிறது. இவர் ஆங்கிலம் பேசுவதை நீங்கள் கேட்டாலே போதும். 'மதராஸி'களைப் போலவே அழகிய நடையில், தெளிவாயும் வேகமாயும் பேசவல்லவர்" என்றான். தன் மாகாணத்தவருக்கு மற்றெவரும் ஈடு இணையில்லை என்பவன், தன்னை அறியாமலேயே நம்மைப் புகழ்ந்து விட்டது என் உள்ளங் களிக்கச் செய்தது.

வட இந்தியாவில் தெற்கேயிருந்து வருபவன் ஒவ்வொருவனும் 'மதராஸி' என்றே அழைக்கப்படுகிறான். சென்னை மாகாணத்தின் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் அவன் இவர்களுக்கு 'மதராஸி'தான். இவ் விஷயத்தில் பலதடவைகள் நான் இவர்களின் அபிப்பிராயத்தைத் திருத்த முயன்றிருக்கிறேன்.

"நீங்கள் பேசும் 'மதராஸி' பாஷையைக் கற்றுக்கொள்ளுதல் மிகக் கடினம் போலிருக்கிறதே" என்று பலர் என்னிடம் கூறியிருக்கின்றனர். அப்பொழுதெல்லாம் நான் அவர்களுடைய தப்பபிப்பிராயத்தைத் திருத்த வேண்டி, "நீங்கள் 'மதராஸ்' என்று பொதுவாய்க் குறிப்பது உண்மையில் பல சிறு பகுதிகள் அடங்கிய ஒரு குட்டித் தேசமே. ஆந்திரதேசம், தமிழ் நாடு, கேரளம், கொங்கணம் என்பவை அதன் முக்கிய பாகங்கள். இவைகளில் பேசப்படும் பாஷைகள் முறையே தெலுங்கு, தமிழ், மலையாளம், துளுவம் என்பன" என்பேன்.

வட இந்தியாவிற்கு வந்திருக்கும் மதராஸிகளுள் பெரும்பாலோர் தமிழர்களே. அவர்களுள்ளும் அதிகமான பகுதியினர் பிராமணர்களே.

வட இந்தியாவிலுள்ள தென்னிந்தியர்கள் முக்கியமாய் இரண்டு தொழில்களில்தான் அதிகமாகச் சோபித்திருக்கின்றனர். அவைகளில் ஒன்று சுருக்கெழுத்து எழுதுவது. மற்றொன்று கணக்குப் பரிசோதகர்களாயிருப்பது.

வடக்கே வந்ததும் தங்கள் பெயர்களைக் குறுக்கிக்கொள்ளுவ தென்பது நம்மவர்களுக்குள் ஒரு சம்பிரதாய மாகிவிட்டது. பலருக்கு "ஐயர்", "ஐயங்கார்", "ராவ்" என்பவைகளே பெயர்களாக வழங்குகின்றன. வேங்கடராமன் என்பதை வி. ராமன் என்றும் வைத்தியநாதனை வி. நாதன் என்றும் குறுக்கிக் கொள்வது மற்றொரு பத்ததி. பொதுவாக நம்முடைய பெயர்கள் உச்சரிப்பதற்குக் கடினமாகவும் அளவிற்கு மிஞ்சி நீண்டும் இருக்கிறதாக வட இந்தியர் குறை கூறுகின்றனர். இதில் சிறிது உண்மை இருக்கத்தான் இருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். "கோபிசெட்டி பாளையத்தில் செந்தாமரைக் கண்ணப்ப முதலியார் அக்கிராசனம் வகித்த கூட்டத்தில் ஸ்ரீ அலமேலு மங்கைத்தாயாரம்மாள் செய்த பிரசங்கம்" என்பதைத் தலைப்பாயமைப்பது நெல்லூர்ப் பத்திரிகாசிரியருக்கு எவ்வளவு கடினமான காரியம் என்று சற்று யோசியுங்கள்!

தென்னாட்டவர் குடியிருக்கும் ஒவ்வோர் ஊரிலும் அவர்கள் பொழுது போக்குக்காகச் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். 'சங்கம்' என்றதும் ஒரு சம்பவம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. எங்கள் சங்கத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக நூதனமாய் ஊருக்கு வந்திருந்த ஓர் உத்தியோகஸ்தரிடம் போனேன்.

"எந்தச் சங்கத்தின் சார்பாக நீங்கள் வந்திருக்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டேன்.

அதற்கு அவர், "இல்லை, வட இந்தியாவில் நம்மவர்கள் இருக்கும் பல ஊர்களில் நான் இருந்திருக்கிறேன். அவ்வூர்கள் ஒவ்வொன்றிலும் நம்மவர்களுள் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் ஏற்பட்டு ஒன்றிற்கு மேற்பட்ட சங்கங்கள் தோன்றி யிருக்கின்றன. அம்மாதிரி இங்கும் இருக்கவேண்டுமே யென்று தான் கேட்டேன்" என்றார்.

உண்மையில் இங்கும் ஒன்றிற்கு மேற்பட்ட சங்கங்கள் உண்டா யிருந்தன. ஆனால் எங்கள் மானத்தைக் காப்பாற்றும்பொருட்டு எங்கள் சங்கம் ஒன்றுதான் அவ்வூரில் பலர் ஆதரவைப் பெற்றிருப்பதென்று சொல்லி விஷயத்தை மழுப்பி அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டேன்.

இதுவிஷயமாய் மற்றொரு சம்பவமும் இங்கே குறிக்கத் தகுந்தது. எங்கள் சங்கத்திற்கு ஒருமுறை ஒரு பிரமுகர் விஜயம் செய்தார். நாங்கள் சங்கத்தை நடத்துவதைக் குறித்தும் எங்களுக்குள் அவர் கண்ட அந்நியோந்நியத்தைக் குறித்தும் பாராட்டிவிட்டுக் கடைசியாக அடியிற் கண்டபடி பேசினார்:

"நான் பல தேசங்களுக்குப் போயிருக்கிறேன். நான் சென்ற இடமெல்லாம் கண்ட உண்மை யொன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நான் சென்ற ஊர் ஒவ்வொன்றிலும் இரண்டு ஆங்கிலேயர்கள் இருந்தாலும் அவர்களுக்குள் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். இந்த அந்நியோந்நியத்தையும் கூட்டுறவு முறையையும் உங்களிடம் இச்சங்கத்தின் மூலமாக நான் கண்டு மகிழ்கிறேன்."

இவர் இப்படிப் பேசுகையில் எங்களில் ஒருவர் தாழ்ந்த குரலில், "இரண்டு ஆங்கிலேயர்கள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்துவது ஒரு பிரமாதமா? இரண்டு தென்னிந்தியர்கள் மட்டும் ஒன்று கூடினால் அங்கு மூன்று சங்கங்கள் தோன்றி யிருக்குமே!" என்றார். நல்ல வேளையாக இது அப் பிரமுகரின் காதுகளில் படவில்லை.

நம்மவர்களில் பலர் பிரசங்கம் செய்வதிலும் சமர்த்தர்களாயிருக்கின்றனர்.

'சார்தா சட்டம்' அமுலுக்கு வரும் சமயம் ஊரில் அதைப்பற்றி ஒரே கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. மேலெழுந்த வாரியாய் நோக்குகையில் நம்மைவிட அதிக முன்னேற்றம் அடைந்திருப்பதாய்த் தோன்றும் வங்க சமூகத்திலும் இச்சட்டத்தைக் குறித்துப் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அந்த மசோதாவைக் குறித்து வாதிக்க ஒரு பொதுக்கூட்டம் போட்டனர். ஒரு தமிழர் அம்மசோதாவை ஆதரித்துப் பேசுவதற்கு முன்வந்தார். ஒரு வயோதிக வங்க தேசத்தவர் அம்மசோதாவைக் கண்டித்துப் பேசுவதென்று ஏற்பாடாயிற்று. நம்மவர் ஆங்கிலத்தில் நன்றாய்ப் பேசவல்லவர். மசோதாவைப் புகழ்ந்து பேசுவதில் தம் சாமர்த்தியத்தை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டார்.

வங்காள வயோதிகர் தாம் சொல்லவேண்டியவற்றை யெல்லாம் சொல்லி முடித்துக்கொண்டு கடைசியில், "எதிர்க் கட்சியில் முக்கியமாய்ப் பேசிய ஸ்ரீமான் (நம்மவரைக் குறித்து) அவர்களின் வாக்கு வன்மையைக் கண்டு ஏமாறுதீர்கள். இது விஷயத்தில் நம் பழைய தெய்விக சாஸ்திர புராணங்களில் கண்டுள்ள பிரமாணங்களைச் சற்று ஆராயுங்கள். ராமாயணத்தில் வால்மீகி முனிவர், கலியாணமாவதற்குமுன் ராமருக்கு வயது பதினாறுக்குக் குறைந்ததாயிருந்தது என்று சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். ஆகையால் ஆண்களுக்குப் பதினெட்டுக்குமேலும் பெண்களுக்குப் பதினான்குக்குமேலுமே மணஞ்செய்யவேண்டுமென்று சொல்லும் இம்மசோதா முற்றும் சாஸ்திர சம்மதமற்றது" என்று முடிவு கட்டினார்.

இதைக் கேட்டதும் சபையில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. புராணங்களிலிருந்து தக்க அத்தாட்சி காட்டிவிட்டதால் நம்மவர் கட்சி தோற்றுவிடும், மசோதா முறியடிக்கப்படும் என்று எல்லோரும் நினைக்கத் தொடங்கினர். அத்தறுவாயில் எழுந்தார் நம் தமிழ் நண்பர். மசோதாவை எதிர்த்துப் பேசிய வயோதிகரின் பிரசங்கத்திற்கு மறுமொழியாக அடியிற் கண்டபடி கூறினார்:

"என் நண்பர் ஸ்ரீமான்—புராணத்திலிருந்து ஒரு பொருத்தமற்ற மேற்கோளைக்கொண்டு உங்களை ஏமாற்றப் பார்க்கிறார். நீங்கள் அவருடைய வலையில் விழுந்து விடாதீர்கள். ராமாயணத்தில் அவர் குறித்த சுலோகம்,

> "ஊனஷோடச வர்ஷோமே
> ராமோ ராஜீவ லோசன :
> நயுத்த யோக்யதாம் அஸ்ய
> பச்யாமி ஸஹ ராக்ஷஸை :'

என்பது. இதில் ராமரின் வயதைக் குறிப்பதுதான் கவியின் முக்கிய கருத்தென்றால் அவர் ஏன் அதைத் திட்டமாகக் குறிக்கவில்லை? ஏன் 'ஊனஷோடச வர்ஷ :'—அதாவது 'பதினாறு வயதிற்குட்பட்டவன்' என்று மட்டும் சொல்லவேண்டும்? ஆதலால் இங்கே கவி குறிக்க வந்தது வேறு விஷயமே. எங்களூரில் கம்பர் என்று ஒரு மகா கவி இருந்தார். அவரும்

தமிழில் ராமாயண காவியத்தை எழுதியிருக்கிறார். இந்தச் சுலோகத்திற்குச் சரியான கம்பரின் செய்யுள்,

'தொடையூற்றுந் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறுவ னிவன்பெரியோய்
பணியிதுவேல் பனிநீர்க் கங்கைப்
புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக வென்றான்'

என்பது. இதில் வால்மீகியின் 'ஊனஷோடச வர்ஷ:' என்பதற்குச் சரியாகப் 'படையூற்ற மிலன்' என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு 'வில்வித்தையில் தேர்ச்சியடையாதவன்' என்று பொருள். க்ஷத்திரியர்கள் வில்வித்தை பயில்வதைப் பதினாறு வயதிற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்பது விதியாகையால் வால்மீகியானவர் 'பதினாறு வயதிற்குட்பட்டவன்' என்பதில் ராமனுக்குத் தக்க யுத்தப் பயிற்சி போதாது என்றுதான் குறித்திருக்கிறார். ஆகையால் எதிர்க் கக்ஷிக்கு இது தகுந்த ஆதாரமளிக்கவில்லை என்பதை நீங்கள் தெளிவாக அறிவீர்களென்று நம்புகிறேன்.''

இதைக் கேட்டதும் சபை யெங்கும் ஒரே கரகோஷம். கடைசியில் வங்க வயோதிகரின் கக்ஷி தோற்று நம் தமிழ் நண்பரின் பக்கமே ஜயமடைந்தது.

ஆனால் இந்நண்பர் சில சமயங்களில் கைச்சரக்குகளையும் தாராளமாய் உபயோகிப்பதுண்டு. ஒருசமயம் எங்கள் சங்கத்தில் ஒரு விசேஷ தினம் கொண்டாடப்பட்டது. பலர் சொற்பொழிவுகள் நடத்தினர். இந்த நண்பரின் பிரசங்கம் கடைசியாக வந்தது. பேச்சுக்கள் முடிந்ததும் சிற்றுண்டிகள் விநியோகிக்கப்படும் என்று அறிவித்திருந்தனர். இவர் தம் பேச்சை முடித்துக்கொண்டு கடைசியில் சமத்காரமாய், ''நண்பர்களே, 'செவிக்குணவளித்த பின்பு சற்று வயிற்றிற்கு ஈயப்படும்' என்பது பொய்யா மொழி. அதன்படியே இப்பொழுது பிரசங்கங்கள் முடிகின்றன. நாமும் சிற்றுண்டிகளை அருந்தலாம்'' என்றார். சபையிலுள்ளோர் இதை மிகவும் மெச்சினர்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் இவர் என்னைத் தனித்துச் சந்திக்க நேர்ந்தது. என்னைப் பார்த்து, ''எப்படி என்னுடைய பிரசங்கம் இருந்தது இன்று?' என்றார்.

''வழக்கம்போல் சிறப்பாய்த்தான் இருந்தது. ஆனால் திருவள்ளுவரை மட்டும் ஏன் அப்படிக் கொலை செய்து விட்டீர்?'' என்று கேட்டேன்.

''ஏன்? செய்யுளில் ஏதாவது தவறோ?'' என்றார்.

''செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பதல்லவோ வள்ளுவரின் வாக்கு? இதற்கும் நீர் சொன்ன மேற்கோளுக்கும் பொருள் நேர் விரோதமாயிற்றே'' என்றேன்.

''ஏதோ, சமயத்திற்கேற்றாற்போல் அடித்து விட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் அதுவும் பொருத்தமாய்த்தானே இருந்தது? நல்ல வேளை, நீங்கள் பலரிடையில் என்னைத் திருத்தி என் மானத்தை வாங்காமல் இருந்தீர்கள்'' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்!

---

## : சணல் நார் :

* எம். நாராயணசாமி, பி.ஏ., எல்.டி. *

**வ**ண்டியை ஓடம் சுமக்கும் காலம் ஒன்றுனுல், ஓடம் வண்டியைச் சுமக்கும் காலமும் ஒன்று உண்டாகும் என்று நம் மக்கள் கூறுவர். அதேபோல், இந்த யுத்தம் தோற்றியதன் பயனுகக் கோணியானது துணியைச் சுமப்பதுபோக, துணி கோணியைச் சுமக்கும் காலமும் ஏற்படும் எனத் தோற்றுகிறது.

யுத்தம் ஆரம்பித்த சிலமாதங்களுக்குமுன், இந்தியாவிலுள்ள பல சணல் நார் நூற்கும் தொழிற்சாலைகளில் உற்பத்தி தேவைக்கு அதிகமாகவே இருந்தது. அதன்பயனுகக் கோணிகளின் விலை குறைந்து, ஆலை முதலாளிகளுக்கும் அவற்றில் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கும் பிணக்கு ஏற்படலாயிற்று. உலக சமாதானத்தைக் குலைக்கும் யுத்தம் தோன்றியதும் சணல் நாரினுல் நெய்த கோணிகளுக்கு எதிர்பாராத கிராக்கி ஏற்படலாயிற்று. எனவே, மேற்கூறிய தகராறுக்கு இடமில்லாமல் போனதுமன்றி, அதிகப்படியான மனிதர்களுக்குச் சணல் ஆலைகள் வேலை யளித்துள்ளன.

1914-ஆம் ஞு யுத்தத்தின்போது, பஞ்சு, புகையிலை, தேயிலை போன்றவற்றிற்கு ஏற்பட்ட விலையேற்றத்தின் பயனுக, அப்பயிர்கள் சாகுபடியாகும் பூமியின் விஸ்தீரணம் அதிகரித்தது. அதைப் போலவே, இந்தியாவின் சணல் பயிரின் சாகுபடியும் கடந்த 150 வருஷ கால அளவில் உன்னதஸ்திதியை அடைந்துள்ளது.

கிழக்கிந்தியா கம்பனியைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் இந்தியாவிலிருந்து பல நூதன வஸ்துக்களைத் தங்களுடன் பிறந்த நாட்டுக்குக் கொண்டுசெல்வது வழக்கம். அவ்வாறே ஓர் உத்தியோகஸ்தனின் மோகம், பொன் நிறத்துடன் கூடிய பல கற்றைச் சணல் நாரின்மேல் விழுந்தது.

பஞ்சு நூலினுல் ஆடைகள் நெய்வதைப்போன்று சணல் நாரினுலும் நெய்யமுடியாதாவென இங்கிலாந்தில் பரீக்ஷிக்கப்பட்டது. ஆனுல் சணல்நாரின் இழைகள் உறுதியற்றவையாக இருந்தமையால் எளிதில் அறுந்துவிடும் தன்மை காணப்பட்டது. அக்காலத்தில், அயர்லாந்து தேசத்திலுள்ள டண்டி என்னும் நகரில் பல நெசவுத் தொழிற்சாலைகள் இருந்தன. அங்கும் பலமுறைகளைக்

கையாண்டு பார்த்தும் நெய்வதற்கேற்ற உறுதி இந்த நாரின் இழைகளுக்குக் கிட்டவில்லை. எனவே, அரும்பாடுபட்டு இந்த நார்க் கற்றைகளைத் தூக்கிச் சென்ற உத்தியோகஸ்தரின் எண்ணங்கள் வீணாயின.

இது நடந்த சுமார் 50 வருடங்களுக்குப்பின், தற்செயலாகத் திமிங்கலம் போன்ற கடற்பிராணிகளின் கொழுப்பு எண்ணெயில் தோய்த்தால் இந்த நார்கள் உறுதியுள்ளவைகளாகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டதும் சணலின் எதிர்காலவாழ்வில் முன்னேற்றம் தொடங்கியது.

சணல் நாரின் பூர்வகதையைக் கவனிப்போம்: நெடுங்காலமாக வங்காளத்தில் சணல் நார் கையினால் திரிக்கப்பட்டுக் கயிறாகவும், அதனினின்றும் பைகள், சாக்குப் பைகள், கரடுமுரடான கோணிகள் போன்றவையாக நெய்யப்பட்டும் பாமர ஜனங்களால் உபயோகிக்கப்பட்டுவந்தது. ஆங்காங்கு மீன் பிடிக்கும் செம்படவர்களின் வலை, அவர்கள் படகின் பாய்கள் முதலியவற்றைக் கட்டவும் இந்நாரின் கயிறுகள் பயன்பட்டுவந்தன. அந்தக் காலத்தில் உள்நாட்டின் தேவைக்கேற்ற அளவே சணல் பயிராகிவந்தது.

ஆனால், மேலே குறித்த டண்டி நெசவுக்காரர்களின் முயற்சி பயனடைந்ததும், சணற் பயிரின் சாகுபடி அளவில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. உலகமுழுவதும் உபயோகப்படும் கோணிப் பைகள் அவ்வளவும் நெய்வதற்கான சணல் நார் இந்தியாவிலேயே பயிராகிறது. ஹுக்ளி நதிக்கரையோரம் காணும் பல சணல் நூல் நூற்கும் யந்திரசாலைகளின் எண்ணிக்கை இதை ருசுப்பிக்கிறது.

உலகத்தில் மனிதருக்கு ஏற்றமும் தாழ்வும் மாறி மாறி வரும் என்று கூறுவர். அத்தகைய காலம் சணலுக்கும் ஏற்பட்டதுண்டு. பருத்தி நூலாடை பரவியதும் சணல் நாரினால் நெய்த ஆடைகளைக் கேட்பாரில்லை. போக்கு வரத்துச் சாதனங்கள் அதிகரிக்கவே பருத்தி ஆடைகள் எல்லா மூலை முடுக்குகளிலும் பரவலாயின. கிழக்கு வங்காளத்தில் நெடுநாளைக்குப் பருத்தி நூலாடைகள் பணக்காரர்களன்றி இதரர் வாங்குவது இயலாததாக இருந்தது. எனவே, எல்லாரும் எளிதில் வாங்கி அணியும்படியான விலைக்கு மேற்படி துணிகள் கிடைத்ததும் சணல் வியாபாரிகள் சங்கடத்திற்குள்ளாகினர்.

மேல் நாடுகளுக்கும், கீழ் நாடுகளுக்கும் வியாபாரப் போக்குவரத்து ஏற்பட்டதும், அப்பண்டங்களை நிறைத்து அனுப்ப விலை மலிவான பைகள் தேவையாக இருந்தன. எனவே கோணிச் சாக்குகளுக்கும், கித்தானுக்கும் மறுபடியும் கிராக்கி ஏற்பட

லாயிற்று. சணற் சாகுபடியின் விஸ்தீரணமும் அதிகரித்தது. அக்காலத்தில், அதாவது இன்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன் சுமார் ரூ. 2,000,000 விலைமதிப்புள்ள சணல் நார் இந்தியாவினின்றும் ஏற்றுமதியாகியுள்ளது.

இதர நெசவுத் தொழில்களுக்கு ஏற்பட்ட கதியே சணலுக்கும் யந்திரவசதியால் ஏற்பட்டது. கையினால் நூற்றுத் தறியில் நெய்து அநேகர் பிழைத்துவந்தனர். யந்திரசாலைகள் ஏற்பட்டதும் அவர்கள் பிழைப்பு அதோகதியாயிற்று. இருந்தபோதிலும், சணல் பயிர் செய்யும் தொழில் விருத்தியாயிற்று. ஏனெனில், யந்திரசாலைகளின் நூற்கும் வேகத்திற்குத் தக்க அளவு பயிர் செய்யவேண்டியதாயிற்று. தற்காலத்தில், வங்காளம், பீஹார், அஸ்ஸாம் இந்த மாகாணங்களில் மழை மாதங்களில் காணும் காட்சியே இதற்குச் சான்றாகும். கங்கை யமுனை பிரம்மபுத்ரா நதியின் கரையோரங்களில் கண்ணுக்கெட்டியதூரம் பசுமை நிறமான இப்பயிர் காணப்படும்.

சணற் பயிர் எளிதில் பணம் தரக்கூடியதாகையால் வியவசாயிகள் இதைப் போற்றுகின்றனர். ஆறுமாத காலத்தில் அவர்கள் படும் பாட்டிற்குத் தகுந்த பணம் இப்பயிரினால் சம்பாதித்து விடுவார்கள். அதற்குத் தகுந்த கஷ்டங்களும் இதைப் பயிரிடுவதில் உண்டு.

வித்துத் தெளித்து அறுவடையாகும் வரை, வெயிலையும் மழையையும் பாராமல், இப்பயிருக்கு உழைக்கவேண்டியிருக்கும். செடியினின்றும் நாரைப் பிரித்து விற்பனைக்கு அனுப்பும் வரை குடியானவனின் வேலை கடினமானதுதான். இந்திய உழவர்களின் பொறுமையும் சாவதானமும் பெயர்போனவை. பாரதத்தாய் தன் புத்திரர்களுக்கு, நீர்வளம் நிலவளம் முதலிய சகலவசதிகளையும் ஏற்படுத்தித் தந்துளாள். மழை, தண்ணீர் வடிகால், சரக்குகளைக் கடத்திச் செல்ல வசதிகள் யாவும் சணற் பயிருக்கு அநுசரணையாக அமைந்துள்ளன.

இதரதேசங்களில், கடும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் உழைக்கக்கூடிய பொறுமையுள்ள தொழிலாளிகள் கிடைப்பது அரிது. இந்த ஒரு காரணத்தாலேயே, தற்பொழுது இந்தியா ஒன்றே ஏராளமான சணற் பயிர் சாகுபடி செய்யும் நாடாக இருக்கிறது.

குளிர்காலமுடிவில், தன் பூமிமுழுவதிலும் அதிக சிரமமில்லாமல் வித்துக்களைக் குடியானவன் தெளிக்கிறான். ஒருவார அளவில் முளை கிளம்புகிறது. சுமார் ஓர் அடி வளர்ந்ததும், நாற்றுக்களைப் பிரித்து நடுவார்கள். நான்கு ஐந்து மாத அளவில், எட்டு அல்லது

பத்து அடி உயரம் வளர்ந்துவிடுகிறது. பூப்பிடிக்கும் காலத்தில் இப்பயிர் அறுவடையாகும்.

தென்னிந்தியாவில், கற்றாழையிலிருந்து நாரெடுப்பதுபோன்றதே சணல் நாரைப் பிரிப்பதும். இச்செடியின் மெல்லிய தண்டுதான் முக்கியமானது. எனவே, இப்பயிர்க்கட்டுகளை நெடுநாள் தண்ணீரில் ஊற வைப்பார்கள். அப்பொழுது ஏற்படும் நாற்றம் சொல்லத் தரமன்று. தண்டினுள் இருக்கும் நாரைப் பிரிக்கும் உபாயம் இது. கையினாலும், சிடுக்கறுக்கும் கருவியினாலும் இவ்வேலை நடைபெறுகிறது. நாரைக்கழுவிச் சுத்தம் செய்து, உலர்த்திக் கட்டுகளாகச் செய்து விற்பனைக்கு அனுப்புவர். இன்னும் இவ்வேலையைச் செய்ய யந்திரங்கள் ஏற்படவில்லை. அதனால், நார் பிரித்தெடுக்கும் தொழிலில் காலம் கழிப்பவர்கள் இன்னும் பாதிக்கப்படவில்லை.

ஏஜெண்டுகளினால் நியமிக்கப்பட்ட பல தரகர்கள், ஒவ்வொரு குடியானவனிடமிருந்தும் நாரை விலைபேசி வாங்கித் தம் ஏஜெண்டுகளுக்கு அனுப்புவர். பெரிய கிடங்குகளில், ரகவாரியாகப் பிரிக்கப்பட்டுக் கட்டுக்கட்டாகச் சணல் நார் கல்கத்தாவிற்கு அனுப்பப்படுகிறது. அங்கு நெய்வதற்கு ஒரு பகுதியும், இதரநாடுகளிலுள்ள நெசவுச்சாலைகளுக்கு எஞ்சிய கட்டுகளும் அனுப்பப்படும்.

டண்டி, அமெரிக்கா, ஜப்பான், வேறு சில ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் சணல் நெய்யும் ஆலைகள் உண்டு. சிலவருடங்களுக்கு முன்வரை டண்டிதான் கோணிகள் நெய்யும் பிரதான ஸ்தலமாக விளங்கியது. ஆனால் இந்தியாவிலேயே அநேகம் தொழிற்சாலைகள் இப்போது ஏற்பட்டுள்ளன. முன் சுமார், 40 ஆலைகள் இருந்த இடத்தில் 100-க்கு அதிகம் இப்பொழுது காணலாம்.

சணல் நாரின் உபயோகம் பலவாகும். கயிறு, பாய், பை, கித்தான், பிரஷ், பாதரக்ஷைபோன்றவை சணல் நாரினால் ஆகியவை. யுத்தம் ஆரம்பித்ததும், ஆகாயவிமானப்படையினால் வீசப்படும் வெடி குண்டுகளினின்று தப்புவதற்கு அரணாகவும் மணல் மூட்டைகள் உபயோகமாகின்றன. அத்தகைய சேவைக்கு ஈடுசெய்யத் தேவையான கோணிப்பைகள் தயாரிப்பதில் இந்தியாவிலுள்ள சணல் ஆலைகள் இரவும் பகலும் ஈடுபட்டுள்ளன. அதனால், பருத்தி நூல் துணிகளையும் நூல் பொதிகளையும் பஞ்சுப் பொதிகளையும் கட்டியனுப்பும் சாக்கின் விலை அதிகமாகவே, அத்தகைய பணிக்கு முரட்டுமில் துணியையே உபயோகிக்கத் தொடங்கியுள்ளனர். எனவே சணற் பயிர் உற்பத்தியாளருக்கு மறுபடியும் சுக்கிரதசை ஆரம்பித்திருக்கிறது எனலாம்.

---

## : பூக்காரன் :

[மேரி வெப் எழுதிய ஒரு கதையின் மொழிபெயர்ப்பு]

* "ஆண்டாள்" *

அவனுடைய உண்மைப் பெயர் யாருக்குமே தெரியாது. யாரும் அவனுடைய உண்மைப் பெயரை அறிந்துகொள்ள முயலவுமில்லை; விரும்பவுமில்லை. எல்லோரும் அவனைப் பூக்காரன் என்றே அழைத்தனர்: 'பூக்காரன்' என்பதே அவன் பெயராகிவிட்டது. எல்லோரும் அவனை 'ஒரு விதத்தில் நல்லவன், ஆனால் அசடு' என்றே மதித்தனர். அவன் வேலை செய்யப் போன இடத்தில் எல்லாம் அவன் நடையும், பேச்சும் எல்லோருக்கும் சிரிப்பு மூட்டும். அவன் நல்ல உயரமாக இருந்தான்; அவன் உடம்பெல்லாம் முண்டுமுண்டாக இருந்தது; அவன் முகத்தில் பள்ளமும் மேடும் மாறி மாறித் தவறான இடங்களில் காணப்பட்டன. அவன் முகத்தில் எப்போதும் ஓர் அசட்டுப் புன்னகை அரும்பி யிருக்கும். அப்புன்னகையைப் பார்த்தாலே யாருக்கும் சிரிப்பு வரும். அப்புன்னகையின் கீழ், அதனால் மறைக்கப்பட்ட அவனுடைய ஆத்மா உண்மையில் எப்படிப்பட்டது என்று அறிய யாரும் முயலவில்லை. அவனுக்கும் ஓர் ஆத்மா உண்டு என்று யாராவது நம்பினார்களா என்பதுகூடச் சந்தேகப்பட வேண்டிய விஷயந்தான். ஊர்ப் பாதிரியினால்கூடப் பூக்காரன் பைத்தியமல்ல என்று சொல்ல முடியவில்லை. "அவன் கண்களையும், தலைமயிரையும் பார்த்தாலே அவன் பித்துப் பிடித்தவன் என்பது தெரியவில்லையா?" என்று கேட்டனர் ஜனங்கள்.

தவிரவும் அவன் சதா பூக்கள் அணிந்துகொண்டிருப்பான். அதனால் தான் அவனுக்கு முதன்முதலில் பூக்காரன் என்று பெயர் வந்தது. கோடையிலும், மாரியிலும் அவன் பூக்களைப் பல விதமாகக் கோத்து எங்கேயாவது செருகிக் கொண்டிருப்பான். சிலநாள் அவனைப் பார்த்தால் சர்க்கார் உதவியுடன் நடக்கும் ஒரு பெரிய பூக்காட்சிச் சாலை போலத் தோன்றும். அவன் அணிந்த பூ அலங்காரங்கள் பலதரப்பட்டவை: சட்டையில் அல்லிப் பூ; தொப்பியில் ஒரு சிவப்பு ரோஜாமாலை; டை ஊசிமாதிரி ஒரு கோதுமைக் கதிர்; பச்சைப் புல் முடிச்சு ஒன்று; இன்னும் பலதரப்பட்டவை. அந்தப் பூக்களெல்லாம் தெருவிலே எங்கேயாவது வேலியிலிருந்து பறிக்கப்பட்டவைதாம். அவனுக்குச் சொந்தமாக ஒரு தோட்டமும் இல்லை. மார்க்கெட்டுக்கு அவன்மூலமாக யாராவது தோட்டக்காரன் பூக்கூடை கொடுத்தனுப்பினால் அன்றைக்குப் பூக்காரன் கெஞ்சிக் கேட்டு ரோஜாப் பூக்கள் வாங்கிக் கொள்ளுவான். ரோஜாப்பூ அணிவதில்தான் அவனுக்கு மகிழ்ச்சி; பரம திருப்தி. மனத்திலே ஒருவித விகற்பமோ, ஆசையோ, எரிச்சலோ இல்லாமல், "சொந்தத் தோட்டம் உடையவர்கள் பாடு குஷிதான்" என்று சொல்வான்.

யாராவது அவனைப் பரிஹாசம் பண்ணினல் அவன் மெதுவாக எப்போதும் ஒரு விதமான பதில்தான் சொல்லுவான்; "எனக்குப் பூ என்றால் பிடிக்கிறது" என்பான்.

யாரும் உபயோகப்படுத்தாத ஒரு சிறு மண் குடிசையில் அவன் வசித்து வந்தான். ஞாயிற்றுக்கிழமைகளில் மாலைப்போதில் செய்ய ஒன்றும் காரியம் இல்லாவிட்டால், அவன் குடிசைக்குப் போகுமுன் ஒரு மரத்தில் சாய்ந்துகொண்டோ, குன்றின் அடிவாரத்தில் தரையில் படுத்துக்கொண்டோ எதைப்பற்றியோ தீவிரமாக யோசிப்பவன்போல மனத்தைப் பறிகொடுத்து ஆழ்ந்திருப்பான். அந்த யோசனைகளால் அவன் வாழ்க்கை எவ்விதத்திலும் மாறுபடவில்லை; ஜனங்கள் கண்ணுக்குப் புலனாகும்படியாக எவ்விதத்திலும் மாறுபடவில்லை. ஒரு வைக்கோலை யாவது புல்லையாவது கடித்துக்கொண்டு, தன் செம்பட்டை மயிர்த் தலையை ஒருதரம் ஆட்டிவிட்டு, "சூரியாஸ்தமனத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கும்" என்று சொல்லுவான்; அவ்வளவுதான்.

ஊர் ஸ்திரீகள் எல்லோரும் அவனிடம் பிரியமாக இருந்தனர். ஊரில் குடியான ஸ்திரீகளே அதிகம். குடியான ஸ்திரீகளுக்கு வீட்டில் கன்று குட்டிகளைப் பாலித்துப் பாலித்துப் பழக்கம். அவர்கள் அநேகமாக மாத்ரு ஹ்ருதயம் படைத்தவர்கள். அவனுக்குத் தங்கள் வீட்டில் பூத்த பூக்களைப் பறித்துக் கொடுப்பதிலோ, பசிக்கிறது என்று வந்தால் உணவு கொடுப்பதிலோ அவர்கள் தயங்குவதே யில்லை. அவன் மௌனமாகப் பூவையோ, சூரியாஸ்தமனத்தையோ பார்த்துக்கொண்டிருக்கையில் அவர்கள் சேவி பண்ணுவதில்லை. "பாவம்! அவனுக்கு வீடும் இல்லை; வாசலும் இல்லை; குழந்தையுமில்லை, குட்டியுமில்லை; ஆடுமில்லை, மாடுமில்லை. பாவம்! ஏதோ விதிவசம் அவன் பைத்தியமாகப் பிறந்து விட்டான். அதற்கு அவன் என்ன செய்வான்?" என்பார்கள்.

பல வருஷங்கள் சென்றன; பல ருதுக்கள் மாறி மாறி வந்தன; மரங்களும் மனிதர்களும் தங்கள் தங்கத்தையும் ஊதாவையும், தங்கள் பச்சையையும் சிவப்பையும் காலக்கிரமத்தில் உகுத்தனர். பூக்காரன் அப்படி உதிர்க்கப்பட்ட தங்கத்தையும் ஊதாவையும் பச்சையையும் சிவப்பையும் சேகரித்து வைத்துக்கொள்ள முயலுபவன் போலத் தன் காலத்தைக் கழித்து வந்தான். ஏதோ யாத்திரைக்காகக் கிளம்பியவன், ஒரு பெரிய அரண்மனையை அடைந்து அங்கு நடந்துகொண்டிருந்த விருந்தில் ஈடுபட்டு மதுவிலும் உணவிலும் மயங்கி, குளிர் எட்டாதவகையில் வாழ மனங் கொண்டு, யாத்திரை முடிவையும் லக்ஷியத்தையும் மறந்து விட்டவனைத் தங்கியது போலிருந்தது பூக்காரனின் வாழ்க்கை.

சில சமயம் அவன் கையில் ஒரு ரோஜாப்பூவை வைத்துக்கொண்டு அன்புடன் முகத்தில் இன்பம் மலர, பூவின் இதழ்களுடன் தன் விரலால் விளையாடிக்கொண்டிருப்பான். சில சமயம் அவன் பூவுக்குப் பதில் ரோஜாவின் இளங் கன்னங்களில் கைவிரலால் தட்டிக் கொஞ்சுவான். ரோஜாப் பெண்ணும் மலரும் அவனுடன் விளையாடுவதில் அளவிலாத பிரியம் கொண்

டிருந்தனர் என்றே தோன்றிற்று. ரோஜாப்பெண் பூக்காரனுடைய குடிசையின் சொந்தக்காரனுன வெயின் ரைட் என்பவனின் கடைசிப் பெண்குழந்தை.

அந்த ரோஜாப் பெண்ணைத் தவிரப் பூக்காரனுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் அவன் நாய்தான். அவனுக்குத் தகுந்த நாய்தான் அது; அவனைப் போலவே இருந்தது. நாய் என்ருல் எப்படி யிருக்கும் என்று நாம் எதிர் பார்ப்போமோ அதற்கு நேர் மாருக இருந்தது அது. அதன் காதுகள் ஒரு தினுசு. அதன் வர்ணமும் ஒரு தினுசு. அதன் நடை ஒருமாதிரி. யஜமானனைப் போன்றதேதான் அதன் அழகும். நாயும் பூக்காரனும் அந்தத் தனிமையான குடிசையில் கூடியவரையில் சந்தோஷத்துடனேயே வசித்து வந்தனர். அவர்கள் உணவு ஊரார் மனமுவந்து அளித்ததுதான். கிறிஸ்துமஸ் பண்டிகைத் தினத்தை யஜமானும் நாயும் கொண்டாடும் ஜோரைப் பார்த்திருந்தால் கன்னிமேரிகூட ஆகாயத்திலிருந்து இறங்கி வந்து அவர்களுடன் கலந்துகொண்டிருப்பாள் என்பது நிச்சயம்; கண்ணில் கண்ணீருடன், மனத்தில் புன்னகையுடன் கன்னிமேரி அவர்களை மனமார ஆசீர்வதித்திருப்பாள்.

டிங்கர்—அதுதான் அவனுடைய நாயின் பெயர். அதனுடைய உயிரைக் காப்பாற்றப் போய் ஒருதரம் பூக்காரன் அகஸ்மாத்தாகத் தன் காலை ஒடித்துக்கொண்டு விட்டான்.

"அடபாவமே!" என்ருர்கள் ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும். "என்ன பைத்தியக்காரத்தனம் இது! இத்தனை நாளாகத் தெரியாவிட்டாலும் இப்போது சந்தேகம் இன்றித் தெரிந்து விட்டது, நீ பைத்தியந்தான் என்று. அந்த நாய்க்காக உன் காலை ஒடித்துக் கொள்ளலாமோ?" என்றனர்.

பூக்காரன் ஓர் அசட்டுப் புன்னகை புரிந்தான்; "எனக்கு நாய் என்ருல் பிடிக்கும்" என்ருன் மெதுவாக.

டிங்கருக்கும் அவனுக்கும் இருந்த நட்பு அதற்கப்புறம் அதிகரித்தது. ருதுக்கள் என்ற கால்களை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து வைத்துக் காலதேவன் நடந்து சென்ருன். பூக்காரனின் செம்பட்டை மயிர் வெள்ளையாக மாற ஆரம்பித்து விட்டது. ஆனல் வழக்கம்போலவே அவன் தன் நாட்களைக் கழித்தான். மார்க்கெட்டுக்குக் கூடை தூக்கிக்கொண்டு போவது, புல் அறுத்துக் கட்டித் தூக்கி விடுவது, அகப்பட்ட வேலையைச் செய்வது, வேலையில்லாத சமயத்தில் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது, இப்படியாக அவன் நாட்கள் கழிந்து வந்தன. வேறு யாரும் வேண்டாத அந்த நாயைத் தவிர அவனிடம் தனக்குச் சொந்தம் என்று சொல்லிக்கொள்ளக் கூடியதாக ஒன்றும் இல்லை.

சின்னரோஜாப் பெண்ணும் இந்த நாட்களில் உயரமாக வளர்ந்தாள்; இன்பமாக வளர்ந்தாள். பூக்காரனின் தலைமயிரை நரைக்கச் செய்துவிட்ட அதே காலதேவன் அவளை அழகியாக்கிவிட்டான். மங்கைப் பருவம் என்னும் மாளிகையின் வாயிற்படியில் அவள் மௌனமாக, நம்பிக்கை நிறைந்தவளாக நின்ருள். கொஞ்ச நாளில் அவளுக்குப் பரிசம் போட்டாய் விட்டது. அதற்குள் அவளுக்கு வயதாகி விட்டதா என்று ஆச்சரியப்பட்டான் பூக்காரன். பரிசம் போட்டபின் அவள் கலியாணச் செய்தி மாதாகோவிலில்

எல்லோருமறிய ஒருதரம் கூறப்பட்டு விட்டது. மூன்றுதரம் அப்படிக் கூறப்பட்டபின் அவள் கலியாணம் செய்துகொள்ளுவாள் என்று பூக்காரன் அறிந்து கொண்டான்.

கலியாணத்துக்கு அவளுக்குப் பரிசு ஏதாவது அளிக்கவேண்டுமென்று எண்ணினன் பூக்காரன். அவன் சாயங்கால வேளைகளில் அந்தப் பரிசைச் செய்து கொண்டிருந்தான். டிங்கரும் அவனுக்கு உதவி செய்வதுபோல அருகில் உட்கார்ந்திருந்தது. உப்புப் போட்டு வைக்க ஓர் அலங்கார மான பெட்டி செய்துகொடுப்பதாக உத்தேசித்தான் பூக்காரன். அதன் மேல் மூடியை விதவிதமான சித்திர வேலைகளால் அலங்கரிப்பதாக அவன் உத்தேசித்திருந்தான். அந்தப் பெட்டி வேலையில் அவன் ஈடுபட்டிருக்கை யில் டிங்கர் அதிகமாகத் தொந்தரவு செய்யாமல் சாதுவாக உட்கார்ந்து அவனுடன் ஒத்துழைத்தது. திறந்த கதவு வழியாகத் தினமும் அழகிய மாலை நேரத்தில் அழகிய ரோஜா தன் முகத்தில் ஒரு புன்னகையுடன் காதலனைச் சந்திக்கப்போவது அவர்கள் கண்ணில் படும். ஒவ்வொருநாள் ரோஜா சீக்கிரமாகக் கிளம்புவாள்; அவள் தன் காதலனின் வரவை எதிர்பார்த் தவளாகப் பச்சைப் பசேல் என்றிருந்த புல் தரையில் ஒரு பூவைப் பறித்துக்கொண்டு உட்கார்ந்து விடுவாள்; காத்துக்கொண்டிருக்கையில் அவள் கை பூவின் ஒவ்வோர் இதழாகப் பறித்து உதிர்த்துக்கொண்டிருக்கும்; அவள் வாய், "என் காதலன் என்னைக் காதலிக்கிறன், அவன் என்னைக் காத லிக்கவில்லை" என்று முணுமுணுத்துக்கொண்டே இருக்கும். இல்லாவிட் டால் அவள் ரோஜாப் புஷ்பங்களைப் பறித்துப் பாடிக்கொண்டே மாலையாகத் தொடுத்துப் போட்டுக் கொள்ளுவாள். அவள் காதலன் எப்போதும் ஒரே சமயத்துக்குத்தான் வருவான்; வயலில் வேலை விட்டதும் ஆறு மணிக்குச் சரியாகக் கிளம்பி வருவான். பூக்காரனும் டிங்கரும் அவர்களுடைய காதல் நாடகத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பார்கள். அதனல் பரிசுப் பெட்டி வேலை கொஞ்சம் மெதுவாகவேதான் நடந்தது.

ஒரு நாள் மாலை இப்படி ரோஜா தன் காதலனது வரவை எதிர் நோக்கிக் காத்திருப்பதை அன்புடன் பூக்காரன் கவனித்துக் கொண்டிருந்தான். மாலை வானம் மேகமின்றி நிர்மலமாக இருந்தது. ரோஜா திடீர் என்று இரண்டு தரம் அலறினள். பூக்காரன் எழுந்து நின்று வயல்பக்கம் நோக்கினன். வயல் கோடியில் ஒரு சின்னக் குட்டை இருந்தது. அக்குட்டையை ஒட்டினற் போல ஒரு சின்ன ஆறு ஓடிற்று. அந்த ஆற்றின் கரையிலே நின்ருள் ரோஜா. அந்தக் குட்டைக்கருகே இருந்த அது என்ன?

பூக்காரன் பதற்றமாகத் தன் குடிசையை விட்டு வெளியே ஓடி வந்தான். டிங்கர் அவனை ஓர் இன்பக் குரைப்புடன் பின் தொடர்ந்தது. பூக்காரன் தன்னல் எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடினன்.

டிங்கருக்குத் தன் யஜமானன் எதைக் கண்டுவிட்டு அப்படிக் குடல் தெறிக்க ஓடினன் என்று தெரியாது. ஆனல், காரணம் எதுவாக இருந் தாலும், ஓட்டம் நன்ருக இருந்தது; டிங்கரின் மனத்துக்குப் பிடித்திருந்தது.

"ஓ! கடவுளே!" என்றான் டிங்கரின் யஜமான். அப்புறம் அவன் ரோஜாவைக் கையைக் காட்டி அழைத்துக் கூவினன்.

"திரும்பி வந்துவிடு, ரோஜா! வீட்டுக்குப் போ! பிட்டர்லீ வீட்டுக் கறுப்புக் காளை இந்தப் பக்கம் வருகிறது."

ரோஜா, முகம் வெளுத்தவளாகி, கால்கள் பயத்தால் தடுமாற, மூச்சுத் திணற, அவர்களைத் தாண்டி ஓடினள். பிட்டர்லீ வீட்டுக் கறுப்புக் காளை மஹா துஷ்டக்காளை; அது முன்தடவை கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடி வந்தபோது இரண்டு மனிதர்களைக் கொம்பால் குத்திக் கொன்று எறிந்து விட்டது. மற்றொருதரம் அதனிடம் அகப்பட்டுக்கொண்ட சில நாய்களை அது குத்தி மிதித்துக் கொன்றுவிட்டது; ஒரு மனிதனைக் கூட அது குத்திக் குற்றுயிரும் குலையுயிருமாகப் பண்ணிவிட்டது.

பயத்தால் நடுங்கிய குரலில், "ஜானி!" என்று கத்தினள் ரோஜா.

பூக்காரன் அவளைப் பின்தொடரத் திரும்பிவிட்டான். ஊரும் தெருவும் அருகில் இருந்ததுபற்றி அவனுக்கு மிகவும் சந்தோஷம். காளையை அடக்க ரோஜாவின் தகப்பனும் அவன் ஆட்களும் போதும். காளை ஆற்றிலிருந்து கரையேறிக் குட்டைப்பக்கம் போய்க்கொண்டிருந்தது, மெதுவாக; ஆனல் அந்த வழியேதான் ரோஜாவின் காதலன் வரவேண்டும்.

அவளுடைய பயம் நிறைந்த "ஜானி!" என்ற வார்த்தையைக் கேட்டு நின்றான் பூக்காரன். தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்ததால் அவன் முகத்தில் வழக்கத்தை விட அதிகமாக அசட்டுக்களை தோன்றியது.

குறுக்குவழியோ சுற்றுவழியோ வேறு எதுவும் இல்லை. குட்டைக்கு அருகில் வந்து திரும்பும்வரையில் ஜானியின் கண்களில் அந்தக் காளை படாது. அதற்குள் காளையும் குட்டையண்டை போய்விடும். அதன் கண்ணில் அவன் பட்டுவிட்டால் தப்ப வழியிராது; மதம் பிடித்த துஷ்டக்காளை அது.

பூக்காரன் அது எப்படியாவது போகட்டும் என்று ரோஜாவுடன் திரும்பிவிட்டால், மறுநாள் ரோஜாவைச் சந்திக்க அவள் காதலன் வருவான் என்பது நிச்சயமில்லை. அப்போதே மிஞ்சிவிட்டதோ என்னவோ; யார் சொல்லமுடியும்? திரும்பிப் பார்த்தான் பூக்காரன். ஜானியாவது, காளையாவது அவன் கண்ணில் அப்போது படவில்லை.

தைரியமாகத் திரும்பவேண்டும்; நிச்சயமாகச் சாவு. அவள் கலியாணப் பரிசுப் பெட்டிகூடச் செய்து முடிந்தபாடில்லை. அதற்கப்புறம் பூக்கள் கிடையாது; வேலை கிடையாது; அழகிய சூரியாஸ்தமனங்களைப் பார்க்க முடியாது. குளத்தில் தவளைகள் தத்தித் தத்திக் குதிப்பதுபோல அவன் மனத்தில் இம்மாதிரி எண்ணங்கள் குதித்தன. அவன் தொப்பியைச் சுற்றி அணிந்திருந்த ரோஜாமாலை கலைந்து விழுந்தது.

"டிங்கர்!" என்று கூப்பிட்டான் அவன்.

டிங்கர் இரண்டு கால்களில் எழுந்து நின்று குதித்தது.

"வீட்டுக்குப் போ, டிங்கர்!"

அந்தக் கொடூரமான கொம்புகளால் தன் நண்பன் எவ்விதமான கஷ்டமும் அடையக்கூடாதென்பது அவன் எண்ணம்.

டிங்கருக்கு இஷ்டமில்லை. "நீ இருக்கும் இடந்தானே என் வீடு?" என்றன அதன் கண்கள்.

தன் யஜமானன் குரல் எட்டாத இடத்துக்கு, தன் யஜமானன் இல்லாத இடத்துக்கு, அது ஏன் போகவேண்டும்?

"வீட்டுக்குப் போ! போ!" என்று கத்தினான் பூக்காரன். முன்னால் ஓடிக் கொண்டிருந்த ரோஜாவையும், டிங்கரையும் விட்டுத் திரும்பி வயலை நோக்கி ஓடினான். ஊரையும், மாலைவெயிலில் அழகாகக் காணப்பட்ட ஊர்வீடுகளையும் ஒருதரம் பார்த்துவிட்டுத் திரும்பி வயலை நோக்கி, தலையில் அணிந்திருந்த பூமாலையும் தொப்பியும் கலைந்து விழ ஓடினான்.

"ரோஜா! ரோஜாப் பெண்ணே!" என்று, பிட்டர்லீ வீட்டுக் கறுப்புக் காளையைச் சந்திக்க வேகமாக ஓடிக்கொண்டே, தனக்குள் சொல்லிக் கொண்டான் பூக்காரன்.

இந்தக் கதை இதோடு முடிந்துவிடவேண்டும்; ஆனால் முடியவில்லை. அப்படி முடிந்திருந்தால், காதல் என்றும் சாவை எதிர்நோக்கி நிற்கும்; பரிசுப் பெட்டி செய்து முடிந்ததா என்று யாருக்கும் தெரியாது; ரோஜா தன் காதலனை அதற்கப்புறம் எப்போதாவது வழக்கமான இடத்தில் சந்தித்தாளா என்பதும் யாருக்கும் தெரியாது. நல்லவேளையாக இந்தக் கதை இதனுடன் முடியவில்லை.

ரோஜா வழக்கப்படியே தன் காதலனைச் சந்தித்தாள். அவள் வேகமாக ஓடி, ஊருக்குள் இருந்த ஆண்களையெல்லாம் திரட்டிக்கொண்டு கறுப்புக் காளையை அடக்க வந்துவிட்டாள். அவள் திரும்பி வந்தபோது காளை பூக்காரனைக் கீழே தள்ளி அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தது; அச் சமயம், பூக்காரனைக் காளை கீழே தள்ளுவதைப் பார்த்துக்கொண்டே வந்த ஜானி தன் கையில் ஒரு மரக்கிளையை ஒடித்து எடுத்துக்கொண்டு அதனுடன் யுத்தம் செய்யத் தயாராக நின்றுகொண்டிருந்தான். நல்ல வேளையாக யுத்தம் தொடங்குமுன் ரோஜா உதவியுடன் வந்துவிட்டாள். டிங்கரும் யுத்தத்துக்குத் தயாராகித் தன் யஜமானனைக் காக்க அங்கு வந்துவிட்டது. காளையை விரட்டிப் பிடித்துக் கட்டிவிட்டு ஊரார் பூக்காரனை ஒருவிதப் பிரியத்துடன் தூக்கிக்கொண்டு போனார்கள். அவனது கிழ உடலை விட்டு நல்ல வேளையாக உயிர் நீங்கிவிடவில்லை. அவன் பிழைத்துக்கொண்டான்.

ரோஜாப் பெண்ணுக்கு உப்புப் பெட்டி நன்றாகச் செய்யப்பட்டது. ரோஜாவின் காதலன் குடித்தனம் வைக்கும்போது இரண்டு வீடுகள் எடுத்துக் கொண்டான். இரண்டாவது வீட்டில் ஒரு பெரிய தோட்டத்தின் மத்தியில் இப்போது வசிக்கிறான் பூக்காரன். யாராவது அன்றைய சம்பவங்களைப் பற்றி ஏதாவது கேட்டால் அவன் தன் பழைய பதிலையேதான் சொல்லுகிறான்.

"எனக்குப் பூ என்றால் பிடிக்கும்" என்கிறான் அவன்; "அதுவும் ரோஜாப்பூ என்றால்......!"

—

## : வாழ்க்கைச் சர்க்கஸ் :

### — சிங்கத்தை ஆள்பவர் —

* பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். *

இவ்வுலக வாழ்க்கை நம்மைப் படுத்தாத பாடெல்லாம் படுத்துகிறது. அதனிடத்தே அகப்பட்டுக்கொண்ட நாம், பெரும் பான்மையும், அதினின்று தப்ப வகையறியாதவர்களாய்ப் பலவித மாய்த் திண்டாடுகிறோம். நம்மை வருத்தும் வாழ்க்கையின்மேல் நேருக்கு நேராகப் பழிவாங்க இடமில்லை. அதனால், கையாலாகாத வர்கள் வாய்த்திறமையைக் காட்டுவதுபோல், நாமும் அதை நம் முடைய மனம்போனபடி யெல்லாம் உவமித்து, வாயில் வந்தபடி யெல்லாம் குறை கூறுகிறோம். கடும் தண்டனை என்றும், வஞ்சனை மாயம் என்றும், நிலையில்லாது சுழலும் சக்கரம் என்றும், ஆழ்த்தி முழுகச்செய்யும் கடல் என்றும், போலி நாடகம் என்றும், வெறும் பொம்மலாட்டம் என்றும், சர்க்கஸ் அல்லது கழைக்கூத்து என்றும் அதைச் சொல்லுகிறோம். இத்தனை விதமான பழிப்புரைகளில் ஓரளவு உண்மை இருக்கத்தான் இருக்கிறது.

*　　*　　*

சர்க்கஸைப் பலர் பார்த்திருப்பார்கள்; பலர் கேட்டிருப்பார் கள். உணர்ச்சிகள் நிரம்பிய சிறு வயதிலே சர்க்கஸைப் பார்த்தவர் களுடைய மனக் கண்ணினின்று அக்காட்சி ஒருநாளும் மறையாது. சர்க்கஸ் என்ற பெயரைச் சொன்னதுமே அக்காட்சி முழுதும் கண் முன் தோன்றும்.

அகன்று, விரிந்து, உயர்ந்த கூடாரம்; அதன் நடுவே வட்ட வளையமாய் அமைக்கப்பட்ட ஓர் அரங்கம்; அங்கே பாண்டு வாத்தி யத்தின் தாளத்துக்கு ஏற்பக் குதிரைகள், மெல்லவேனும் வேகமாக வேனும் சுற்றிச் சுற்றி ஓடி வருகின்றன. பலநிறமான உடைகளைத் தரித்த ஆடவர்களும் பெண்களும், காற்றின்மீது மிதப்பதுபோல், குதிரைகளின்மேல் ஒரு காலின் விரலை ஊன்றி நின்று, உல்லாசமாய் அனாயாசமாய்ச் சவாரி செய்கிறார்கள். அரங்கத்தின் நடுவிலே நிற்கும் எஜமானன் தன் கையிலுள்ள நீண்ட சவுக்கைப் படீரென்று சுண்டுகிறான். துப்பாக்கி வெடிப்பது போல் அச் சவுக்கோசை கேட்கிறது. அது கேட்ட கணமே சுற்றிச் சுற்றி ஓடிவரும் குதிரை கள் திடீரென்று நிற்கின்றன. மறுபடியும் இன்னுமொரு சவுக்கு

வெடி. நின்ற குதிரைகள் திரும்பித் திசைமாறி எதிர்ப்புறமாய்ச் சுற்றி ஓடத் தொடங்குகின்றன.

இந்த வித்தை முடிந்ததும், நல்ல உடலமைப்புள்ள பலர் வந்து, பற்பல வகையான கருவிகளை வைத்துக்கொண்டு, பம்பரத்தைப்போல் சுழன்றும், வளையத்தைப்போல் உருண்டும், பலவித மான கெருடி வித்தைகளைக் காட்டுகிறார்கள்.

பிறகு, ஒரு பனை உயரத்தில் தொங்கவிட்டிருக்கும் ஊஞ்சல்களிலே, ஆண்களும் பெண்களும் வீசி வீசி ஆடுகிறார்கள்; ஓர் ஊஞ்சலிலிருந்து மற்றோர் ஊஞ்சலுக்குத் தாவிப் பாய்கிறார்கள்; தலை கீழாய்த் தொங்கி ஆடுகிறார்கள். பார்க்கும்போதே நமக்கு மயிர்க்கூச்செறிகிறது. பிடி சற்றே நழுவினால் அவர்களுடைய கதி என்ன ஆகும் என்ற திகில் நம்முடைய மனத்தைப் பற்றுகிறது.

ஒன்றோடொன்று ஒவ்வாத பல நிறங்கள் கலந்த உடையையும், கோபுரம்போன்ற குல்லாவையும், கிலுகிலுவென்று ஒலிக்கும் சிறு சதங்கைகளையும் அணிந்த கோமாளிகள் பற்பல அரிய வேடிக்கைகளைக் காட்டுகிறார்கள். ஹாஸ்யப் பேச்சுகளைப் பேசுகிறார்கள். விகடச் செயல்களைச் செய்கிறார்கள். நாம் வயிறு குலுங்கச் சிரிக்கிறோம். மேகத்தினிடையே மின்னல் தோன்றுவது போல, நாம் கொண்ட கவலையின் இடையே ஆனந்தம் பளிச்சென்று தோன்றுகிறது.

மறுபடியும் ஒரு பயங்கரக் காட்சி. நடு அரங்கத்திலே உயர்ந்த கம்பிக்கூண்டு ஒன்று, அவசர அவசரமாய்க் கட்டப்படுகிறது. குரங்கும், சிறுத்தையும், கரடியும், ஆடும், புலியும், நாயும், சிங்கமும் ஒவ்வொன்றாய் வந்து, சீறிச் சினந்து உறுமிக்கொண்டு வருகின்றன; தத்தம் இடங்களில் போய் அமருகின்றன; அல்லது அப்படி அமராதபடி நாலு பக்கங்களிலும் சூழ உள்ள ஜனத்திரளை விறைத்துப் பார்க்கின்றன. கூண்டின் உயரம் போதுமா? 'அது பலமாய்க் கட்டப்பட்டிருக்கிறதா? கூண்டுக்கு வெளியே அக்கொடிய மிருகங்கள் வந்துவிட்டால் நாம் என்ன செய்வது!' என்ற கலக்கம் நம்முடைய மனத்தில் ஒருபுறம் கிடந்து உறுத்துகிறது. மற்றொரு புறம் அத்தனை மிருகங்களையும் ஒன்றாகக் கண்டதனால் உண்டாகும் வியப்பு.

சிங்கம் கொட்டாவி விடுகிறது. அதன் வாயில் உள்ள பற்கள் ஈட்டிகளைப்போல் மின்னுகின்றன. புலி சோம்பல் முறிக்கிறது. அதன் கையின் தசை நார்கள் எஃகுக் கம்பிகளைப்போல் தோன்று

கின்றன. 'கையின் நுனியில் எத்தனை வளைந்த கத்திகள்' என்று எண்ணுகிறோம், அதன் கூரிய நகங்களைப் பார்த்து.

அத்தனை கொடிய மிருகங்களுக்கும் இடையே ஒருவன், ஒரே ஒருவன், கையில் பிடித்த சவுக்கோடு ஒய்யாரமாக வருகிறான். அம்புகளை எய்து பாண்டவ சேனையைச் சின்னபின்னமாக்கிய பீஷ்மனை எதிர்த்துத் தேர்ப்பாகனாகிய கிருஷ்ணன் கைச் சவுக்கோடு தாக்கப் போனான் என்ற மகாபாரதக் கதையை அவனுடைய செயல் நினைப்பூட்டுகிறது. அவனைக் கண்டதும் அத்தனை மிருகங்களின் இடையேயும் ஒரு பரபரப்புக் காணப்படுகிறது. அவை யாவும் அவனை அடிபணிந்து அவன் மனப்படி நடந்து கொள்கின்றன.

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
காடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்"

என்ற அடிகளை நினைப்பூட்டுவனவா யிருக்கின்றன அவனுடைய காரியங்கள். சிங்கத்தின் மேலேறிச் சவாரி செய்கிறான், காளியைப் போல. புலியின் குகைபோன்ற வாயில் தன்னுடைய தலையையே விடுகிறான்; பார்க்கும் நமக்குப் பயத்தினால் கண்ணை மூடிக் கொள்ளத் தோன்றுகிறது. புலியின்மேல் ஆடு ஏறிச் சவாரி செய்கிறது; சிறுத்தையின் மேல் குரங்கு நின்று ஒட்டுகிறது. தக தக வென்று எரிந்து கொண்டிருக்கும் சக்கரத் தீவட்டிபோன்ற நெருப்பு வளையங்களைக் கூண்டில் அங்கங்கே வைக்கிறான். அவற்றைக் கண்டு மிருகங்களெல்லாம் அஞ்சி ஒதுங்குகின்றன. நெருப்பைக் கண்டால் எல்லா மிருகங்களுக்கும் பயம் அதிகம். ஆனால், திடீரென்று ஒரு சவுக்கோசை கேட்கிறது. ஒவ்வொரு மிருகமும் தயங்கித் தயங்கிக் கிட்டவந்து, நெருப்பு வளையங்களின் ஊடாகத் தாவிப் பாய்கிறது. நெருப்புக்கும் அதிகமாக அவை அவனுக்குப் பயப்படுகின்றன என்பது நமக்குத் தெரிகிறது. அவற்றின் கையால் ஒரு விளையாட்டுத் தட்டுக்கு அவன் ஆளாகமாட்டான்; அவற்றின் வாயால் ஒரு பொய்க்கடிக்கும் ஈடாகமாட்டான். அப்பேர்ப்பட்ட ஒருவன் எப்படி அத்தனை மிருகங்களையும் அடக்கி ஆள்கிறான் என்ற வியப்பு நமக்குத் தோன்றுகிறது.

* * *

சர்க்கஸில் நடப்பதைப் போலவே உலக வாழ்க்கையிலும் நடக்கிறது. அறிவும் ஆண்மையும் மிகுந்த சிலர் தம்மைக் காட்டிலும் உடல்வலி பொருந்திய பலரைத் தம் இஷ்டம் போலெல்லாம் ஆட்டி வைக்கிறார்கள். ஜனத்தொகையாற் சிறிய தேசத்தினர்

ஜனத்தொகை மிகுந்த தேசங்களைத் தாக்கி அவற்றைக் கைக் கொள்ளுகிறார்கள். அந்நாட்டினரைத் தமக்கு அடங்கி நடக்கும் படி வசப்படுத்துகிறார்கள். அவ்வாறு கீழ்ப்படும் மக்கள் தொகையிலும் உடல்வலியிலும் வேறு அமிசங்களிலும் மிக்கோராயிருப்பினும், மனோதிடத்திலும் அறிவுத்திறத்திலும் குறைந்தவர்களாய் இருப்பதால், எதிர்த்து நிற்கத் திறமையற்றவர்களாய்க் கைதாழ்ந்து போகிறார்கள். கார்ட்டெஸ் என்னும் ஸ்பெயின் தேசத்து வீரன் சிறு சைனியத்தைக் கொண்டு மெக்ஸிகோ நாட்டைக் கைப்பற்றியதை இதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

பிரான்சு தேசத்துக்கு ராஜாதிராஜனாயிருந்த நெப்போலியன் யுத்தத்தில் தோல்வியுற்று, எல்பா என்னும் சின்னஞ் சிறு தீவில் அடைபட்டிருந்தான். அவன் மனத்தில் கிடந்த ஆசைத்தீ அவிந்து சாம்பராய்ப் போகாமல் ஒரு நாள் சுடர்விட்டுச் சுவாலையாய்ப் பொங்கிற்று. எல்பாவிலிருந்து பிரான்சுக்குள் தப்பி வந்து, தான் இழந்த பதவியை மீண்டும் கைப்பற்ற முயன்றான். அவனை எதிர்க்கச் சைனியங்கள் அனுப்பப்பட்டன. ஒரு சிறுபடையைத் திரட்டிக் கொண்டு அவன் செல்லும்போது, ஓரிடத்தில் அந்தப் பெருஞ் சைனியங்களுள் ஒன்று குறுக்கிட்டது. அவனை உயிருடனேனும் அல்லது பிணமாகவேனும் கொண்டுவரவேண்டும் என்பது அதில் ஒவ்வொருவனுக்கும் இடப்பட்டிருந்த உத்தரவு. சைனியத்தைக் கண்டதும் நெப்போலியன் ஏகாங்கியாக எதிரே போய் நின்று, "என்னுடைய அருமைப் படைவீரர்களே! இதோ இருக்கிறேன் உங்கள் அரசனாகிய நான். என்னைக் கொல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் கொல்லலாம்" என்றான். அவனைக் கண்டதும் அவர்கள் கொண்ட வியப்பு அவன் பேசக்கேட்டதும் திகைப்பாக மாறிற்று. "வாழ்க எம் அரசன்" என்று சிலர் உரக்கக் கூவவே, சைனியம் முழுதும் ஏகோபித்து, "வாழ்க எம் அரசன். நெப்போலியன் வாழ்க" என்று வாழ்த்தி அவன் பக்கம் சேர்ந்துகொண்டது. அவனுடைய அஞ்சாமை பயன் அளித்தது.

* * *

முரட்டுக் காட்டு மிருகங்களைக் காட்டிலும் கொடிய மனம் படைத்த மனிதர்கள் எத்தனைபேர்கள் இவ்வுலகத்திலே இருக்கிறார்கள்! நெஞ்சில் ஈரமற்றவர்கள் எத்தனைபேர்கள்! பசியைத் தீர்ப்பதற்காக விலங்குகள் கொல்லும். அவைகளைப் போலன்றிக் கொல்லுவதில் தமக்குள்ள ஆசையின் நிமித்தம் கொல்பவர்கள் எத்தனைபேர்கள்! சூதும் வாதும் கபடமும் நிரம்பிய தீய நெஞ்சினர்கள் எத்தனை பேர்கள்!

இந்தக் கதையைக் கேட்டிருப்பீர்கள் : ஒருவன் தன்னுடைய மனைவிக்குப் பயந்து ஓடி ஒளித்தான். அவனைத் தேடித் துரத்திச் சென்ற அவனுடைய மனைவி சிங்கக்கூட்டில் சீறும் சிங்கங்களினிடையே அவன் பதுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். "கூட்டுக்குள் போய்ப் பதுங்கிக் கொள்வதைப் பார். தைரியம் உண்டானால் வெளியே வாடா, பயங்கொள்ளி!" என்று கூட்டுக்கு வெளியே நின்று அவனை ஏசினாள். சிங்கத்தைக் கண்டு அஞ்சாதவன் தன் மனைவியைக் கண்டு அஞ்சினான்.

* * *

இவ்வாறு சர்க்கஸுக்கும் உயிர் வாழ்க்கைக்கும் பற்பல அமிசங்களில் ஒற்றுமை இருக்கிறது. ஓர் அரங்கத்திலே பல்வேறு வகைப்பட்ட ஜந்துக்களும் பல்வேறு திறமையையுடைய ஆடவரும் பெண்டிரும் அதிகாரிகளாகவும், ஏவலாட்களாகவும், கீழ்ப்படிவோராகவும் காணப்படுகிறார்கள்; வகைவகையான உடைகளை அணிந்து அனேக வகையான செயல்களைச் செய்கிறார்கள்; அதைப் போலவே, உலகவாழ்க்கையிலும் பற்பலர், பற்பல குணமுடையவர், பற்பல துறைகளில் தம் தம் திறமைக்கு ஏற்ற செயல்களைப் புரிந்து வருகிறார்கள். அவர்களுள் ஆளுவோர் சிலர், ஆளப்படுவோர் பலர்; ஆட்டுவிப்போர் சிலர், ஆட்டுவிக்கப்படுவோர் பலர். அதிகார தோரணையும், செல்வத்தின் வலிமையும் உலகவாழ்க்கையை நடத்துவிக்கும் சவுக்குக்களாக இருந்துவருகின்றன.

* * *

மனிதனுடைய இந்திரியங்களை வேகமாய் ஓடும் குதிரைகளுக்கும், அவனுடைய புத்தியை அவற்றை அடக்கி ஆளுதற்குரிய சவுக்குப் பிடித்த பாகனுக்கும் ஒப்பிடுவதுண்டு. நிச்சயமும் தெளிவும் உறுதியும் உடைய புத்தியானது, சீர்கேடான வழிகளில் தம் இஷ்டம்போல் பாய்ந்தோட முயலும் இந்திரியங்களை அடக்கி நிறுத்தியும், அவற்றைத் திருப்பி எதிர்ப்புறமாக நன்னெறியில் செல்லத் தூண்டியும் வாழ்க்கையை நெறிப்படுத்துகிறது.

பற்பல வகையான கருவிகளிலும் வானத்தினின்று தொங்கும் ஊஞ்சல்களிலும் அரிய வித்தைகளைச் செய்பவர்கள் தாம் செய்ய நினைத்த செயல்களை நன்கு செய்து காட்டும்பொருட்டு எத்தனையோ மாதங்கள், எத்தனையோ வருஷங்களாகப் பாடுபட்டு முயன்று முயன்றுதான் அத்தனை லாகவத்தையும் தேர்ச்சியையும் பெற்றிருப்பார்கள். அவற்றைப் பெறுமுன் எத்தனை தடவை

அவர்கள் தவறியிருப்பார்கள்! தோல்வியால் மனச் சலிப்புருமல், உடல் நோவை ஒரு பொருட்டாக எண்ணுமல், தாம் செய்ய நினைத்த காரியத்திலே கண்ணுக இருந்து, விடாமுயற்சியாலும் ஏகாக்கிர சித்தத்தாலும் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். இவ்வாறே வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வெற்றிபெறு பவர்களை நாம் காணலாம்.

கோமாளி வேஷம் பூண்டு, வயிறு குலுங்கச் சிரித்து நம்மையும் ஆனந்த வெள்ளத்திலே மூழ்குவிப்பவர்கள் உண்மையில் கோமாளிகள் அல்ல. கோமாளி வேஷத்தைக் கொண்டு அவர்கள் தம்முடைய அரிய திறமைகளை மறைக்கிருர்கள். உயிர் வாழ்க்கையிலும் இப்பேர்ப்பட்டவர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்களுடைய போலிப் பயித்தியக்காரச் செயல்களைக் கண்டு உலகம் சிரிக்கிறது. அவர்களுடைய மெய்த்திறமைகளைச் சிலரே உணருகிருர்கள். அவர்களைப் பார்த்துச் சிரிப்பவர்களாயும், நல்ல ஆடையாபரணங்களை அணிந்து மேலான பதவிகளை வகிப்பவர்களாயும் உள்ளவர்கள் பலரைக் காட்டிலும் அவர்கள் எத்தனைபேர் அறிவில் மேம்பட்டவர்கள்.

காமம், வெகுளி, பொருமை, அகங்காரம் முதலிய தீய குணங்கள் கொடிய காட்டு மிருகங்களைக் காட்டிலும் கொடியவை. மிருகங்கள் உடலை மட்டுமே அழிப்பவை; தீய குணங்களோவெனில் உடலையும், புத்தியையும், ஆத்துமாவையும், ஜனசமூகத்தையும் ஒருங்கே அழிப்பனவாக உள்ளன. சட்ட திட்டங்களாலும், கடும் தண்டனைகளாலும் அரசாங்கம் இவற்றைத் தடுக்க முயலுகிறது. நரக வேதனைகளைக் குறிப்பிட்டு மத குருக்கள் இவற்றை அகற்ற முயலுகிருர்கள். ஆனல் ஆண்மை மிக்க மன உறுதியும், கூர்மை மிக்க புத்தித் திறமையுமே இவற்றை அடக்கியாளுதற்குரிய சாதனங்கள். சர்க்கஸின் சவுக்கைக் கண்டு மிருகங்கள் அஞ்சவில்லை: அதைப் பிடித்திருப்பவனுடைய ஆண்மையையும் வீரத்தையும் கண்டே அவை அஞ்சி அடங்குகின்றன.

* * *

ஆனல் இவ்வாறு மன உறுதி கொள்வதும், எல்லாவற்றையும் அடக்கி ஆள்வதும் எளிய காரியங்கள் அல்ல. எல்லாராலும் எப்பொழுதும் இவ்வாறு நடக்க இயலாது. ஆயினும் நாம் ஆண்மை மிக்கவர், அறிவு மிக்கவர், எல்லாவிதங்களிலும் பிற ஜீவ ஜந்துக்களைக் காட்டிலும் மேம்பட்டவராகிய மனிதர் என்பதை உணர்ந்து, அதற்கேற்பச் சீராக நடக்க முயலுவோமாக.

---

திருச்சி அகில இந்திய ரேடியோவில் 3-3-40-இல் பேசியது. அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

# : தனிமை :

: ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. :

உலகச் சிருஷ்டிப்படம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் காட்சி அளிக்கிறது. பார்க்கிறவனையும், இடத்தையும் பொறுத்ததாயிருக்கிறது உண்மையின் வடிவு. மோனு லிஸா (Mona Lisa) படத்தை ஆர்வத்தோடு நோக்கி அதன் சோபையைப் பருகிய பேடரது (Pater) கண்ணின் பார்வை வேறு, மனத்தின் பண்பு வேறு. படத்தின் முகத்திலும் கண்களிலும் இதழ்களிலும், அவர் நுகர்ந்த அதிசயங்களை நாம் காணமுடியாது. அவர் மனத்தில் வீசி அடித்த துவனித் தரங்கங்கள் நம் சிந்தையில் எழா.

ஆனுல் என் மனத்திற்கு ஒரு தனிச்சக்தி யுண்டு. உலகத்திலுள்ள எந்தப் பொருளின் உட்சோகத்தையும் உறிஞ்சுகிற தன்மை அது பெற்றிருக்கிறது.

> "பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
> பாவித் திறைஞ்ச ஆங்கே
> பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்திஅப்
> பனிமல ரெடுக்க மனமும்
> நண்ணேன்"

என்று தாயுமானுர் விரிந்த மலரில் ஈசன் முறுவலைக் கண்டு கண்ணீர் சொரிகிருர். பரந்த கடலின் அலைகளின் குனிப்பில் பகவானுடைய சிருஷ்டி நடனத்தைப் பார்த்து,

> "தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
> தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
> நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
> நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின் கண் நின்றதே"

என்று திருமழிசைப்பிரான் வியந்து பாடுகிருர்.

அவர்கள் அனுபவங்கள் எனக்கு இல்லை. அழகைக் கொட்டும் ஒரு மலரைப் பார்க்கும்போதெல்லாம், 'கொஞ்ச நேரங்கழித்தால் கருகி உதிர்ந்து விடுமே!' என்ற எக்கந்தான் வருகின்றது. அலைகளின் ஒலத்தில் உலகத்தின் சோகநாடகத்தின் சுருதியைத்தான் கேட்கிறேன். நட்ட நடு நிசியின் கன அந்தகாரத்தில் இந்திர சாபவொளியைக் காண்கிற சுபாவம் சிலபேர்களிடம் வேரூன்றி இருக்கிறது. ஆனுல் பட்டப்பகலிலும் இருளின் உருவந்தான் என்முன் திரண்டுவரும். இருவர் கைகோத்து வருகிற களி நடையிலே கோரமான துக்கப்பிரிவுதான் என்முன் நடமாடுகிறது. அதிகமாய்க் கதையை வளர்ப்பானேன்: மனத்தின் மங்களநாதத்தில் இழவுச் சங்க ஹுங்காரத்தைத்தான் என் செவி உணர்கிறது.

தக்க உணர்ச்சி அலைகள் என் உள்ளத்தில் அடித்து ஓய்ந்தால் பாதகம் இல்லை; ஆனால் அவை என்னை மீறிப் பிறர் சிந்தைக்கரைகளின் மீது மோத ஆரம்பித்துவிடுகின்றன.

* * * * *

காலை ஏழுமணி. பம்பாய் போகிற வண்டித்தொடரின் என்ஜினிலிருந்து புகைப் படலம் மேகம்போல் உயரப் போய்க்கொண்டிருந்தது. ஸென்ட்ரல் ஸ்டேஷனில் ஒரு கூட்டம்; பலபல ஜனங்கள்; பலபல சிந்தனைகள், பலபல நோக்கங்கள்; அழுகை, சிரிப்பு, விம்மல், பிரிவுச் செயல்கள், பிரிவுப் பேச்சுக்கள்—எல்லாம் கலந்து ஓடுகிற ஓர் ஓட்டம் அர்த்தமற்றதாகத் தென்பட்டது.

ஒரு வண்டியின் அறையில் மூவர் பேசிக்கொண்டிருந்தார்கள். நானும் ஒரு நான்காம் மனிதனாக நின்றுகொண்டு அங்கே நடக்கிற சம்பவங்களைப் பார்த்த வண்ணம் இருந்தேன். "இப்படித் தலையை வைத்துக்கொள்ளாதே; காற்றுச் சில்லென்று அடிக்கும்" என்று படுக்கையை ஒரு புறம் விரிக்கிறார் குமரகுரு. "இப்பொழுது புழுக்கமாயிருக்கிறது; கதவு திறந்திருக்கட்டும். புனா சமீபிக்கிறபொழுது ஜன்னலை மூடிவிடு. இந்தச் சமயம் அங்கே குளிர் தாங்கமுடியாது. ஆளை அப்படியே வெடவெடவென்று உள் நடுக்கும்படி செய்துவிடும். தலைக்குப் பனிக்குல்லாயைப் போட்டுக் கொள்; கழுத்துக்குப் பிளானல் இருக்கட்டும். டிக்கட்டு, பணம் முதலியவை பத்திரம். நீ போகிற காரியம் உன் உடம்பைப் பார்த்துக்கொள்ளுவதற்காக. புத்தகங்களோ பெட்டி நிறையக் கொண்டுபோகிறாய். படிப்பின் மகிழ்ச்சியில் அதிக நேரம் இரவில் வாசித்து உடம்பைக் கெடுத்துக் கொண்டுவிடாதே. பம்பாய்க்குப் போகிறதாயிருந்தால் எனக்குக் கடிதம் எழுது. அங்குள்ள மனிதர்களுக்கு எழுதி வேண்டிய சௌகரியங்களை உனக்கு அமைக்கச்செய்கிறேன்."

இப்படிக் குமரகுரு பேசிக்கொண்டிருக்கும்பொழுது மணி அடித்தது; கொடி வீசப்பட்டது. இன்ஜின் குரல் கொடுத்தது. நாங்கள் கீழே இறங்கிவிட்டோம்.

"சௌக்கியமாய்ப் போய் வா, அப்பா" என்றார் குமரகுரு, மிகப் பரிவுடன்.

"கடிதம் எழுது போனவுடனே" என்றார் விசுவநாதம். அவர் பாலனுடைய தமக்கையின் கணவர்.

"அதற்கென்ன அப்படியே செய்கிறேன், அத்திம்பேரே" என்று மொழிந்தான் பாலன்.

என்னோடு பாலனுக்குப் பேச அவகாசம் இல்லை. என்னைப் பார்த்து ஒரு முறுவல் செய்தான். அது எனக்குப் போதும். அந்த முறுவலில் ஓர் உலக விஷயமும் அர்த்தமும் அடங்கியிருந்தன. வண்டி நகர்ந்தது. எங்களைப் பார்த்து நின்றான் அவன். சிறிது நேரத்தில் அவ்வுருவம் தூரத்து நீல மூட்டத்தில் மறைந்துவிட்டது.

நாங்கள் மூவரும் வீடு திரும்பக் காரில் ஏறினோம். கார் 'விர்' என்று போயிற்று. வழியிலே நான் ஒன்றும் பேசவில்லை. மௌனத்தில் ஆழ்ந்தேன். ஆனால் அகத்தில் ஒரு நினைவுப்பாதை என் முன் விரிந்தது. அதில் நான் போய்க்கொண்டிருந்தேன்.

குமாரகுருவின் அன்பு ததும்பும் ஒவ்வொரு வார்த்தையையும் நினைத்து நினைத்துப் பார்த்தேன். அவருடைய சொல்லிற் கடுமை இருந்தது; உள்ளத்திலோ கனிவு. அவருடைய அன்பின் ஆழத்தை அவர் பிள்ளையால் அளக்க முடியவில்லை. ஒரு தகப்பனின் உள்ளத்தை உள்ளவாறு உணர்வதற்குப் பழுத்த அனுபவம் நிறைந்த அறிவும் வேண்டுமல்லவா?

வீட்டிற்குக் கார் வந்ததும், குமாரகுரு ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அவருக்கு நேர்முகமாக மற்றொரு நாற்காலியில் நான் அமர்ந்தேன். எங்களுக்கிடையே ஓர் அமைதிதான். அசட்டுத்தனமாய் ஒரு வார்த்தை என்னை விட்டு நழுவிவிட்டது.

"கொஞ்சதூரம் போய்ச் சேர்ந்து வழி நடந்து ஒரு மூலையில் ஓர் ஆப்தரை விட்டுப் பிரிந்தாலே நமக்குக் கஷ்டமாக இருக்கிறதே; வாஸ்தவமாய் ஒரு பெரிய பிரிவு நேர்ந்தால்........." என்று ஆரம்பித்தேன்.

பக்கத்தில் உயரத்தில் மாட்டப்பட்டுள்ள ஓர் உருவத்தை நோக்கி அவர் கண்கள் தம்மை அறியாமலே திரிய ஆரம்பித்தன; கண்களில் நீர் ததும்பிற்று. அதைச் சிரமப்பட்டு ஒருவாறு அடக்கிக்கொண்டு என்னோடு அவர் பேசலுற்றார்.

"பிரிவுத்துயரை அடைந்தவன்தான் அதைப்பற்றிப் பேசமுடியும்" என்றார் அவர்.

"ஆமாம். நீங்கள் சொல்வது உண்மையே" என்று பதில் தந்தேன். என்ன பைத்தியக்காரத்தனம் செய்தேன்! 'மேலே சாம்பற் படிந்து உள்ளே கணகணவென எரியும் சோகத்தழலை என் அசந்தர்ப்ப வார்த்தைகள் தூண்டிவிட்டனவே' என்று என்னையே நொந்துகொண்டேன். ஆனால் மீண்டும் அவரோடு நான் பேசாமலில்லை; "மலடி அறிவளோ பிள்ளையின் அருமையை? உற்றவருக்குத்தான் கண்ணீரும் கம்பலையும்" என்று வார்த்தையை வளர்த்தேன்.

"தியாகராஜஸ்வாமிகள் குழந்தை ராமனின் சுருண்ட அளகத்தையும், சில்பாக்களையும், கம்பீர கமனத்தையும்பற்றிப் பேசினாரே ஒழிய, தசரதன் புலம்பலைப்பற்றிப் பாடவில்லையே. அந்த விஷயத்தைப்பற்றி என்றைக்காவது யோசித்தது உண்டா?" என்று என்னைக் கேட்டார் குமாரகுரு.

"இல்லை; நீங்களே அந்த மர்மத்தை அறியமுடியும். சங்கீத ஜீவநாடியைக் கண்ட தங்களால்தான் அவருடைய ஆத்மாவில் நுழைந்து அங்குள்ள ரகசியங்களை ஆராய்வது சாத்தியமாகும்."

"தியாகையரவர்களுக்குப் பிள்ளையில்லை. நெடுநாளாய் உள்ளே மறுகிக் கிடந்த ஆசையும் குறையும் சங்கீதத்தில் தீர்ந்துவிட்டன. குழந்தையின் தெய்விக யௌவனத்தையும் லாவண்ய ரூபத்தையும், மழலை



# ஆயாசமில்லாத ஜீரணத்திற்கு

ஸைன்டிபிக்

# டிடி

மிஸ்கி பெருங்காயம்

உபயோகியுங்கள்

மனமொத்த மணம் ஜீரணத்தை மிதப்படுத்தும்

**வெகுமதி கூபன்களோடு விற்கப்படும் விலை 1 டி ரூ. 1/14**



## ரூ. 1-8-0க்கு

**3** கைக்கடிகாரங்களும் 1295 விநோத ஸாமான்களும் அளிக்கப்படும்



எங்கள் ஆட்டோ ரோஜா ஸெண்டு 10 புட்டி ஒரேசமயம் ரூ. 1-8-0க்கு வாங்குபவர்களுக்குப் பின்வரும் சாமான் இனாமாக அளிக்கப்படும். (1) தங்கமுலாம் பூசிய பட்டுப்பட்டையுடன்கூடிய பொம்மைக் கைக் கடிகாரம், (2) ரெயில்வே மணிகாட்டும் பொம்மை ஜேபி கடிகாரம், (3) ஸேப்டி ரேஸர், (4) க்ஷவரஸோப்பு, (5) க்ஷவரப்ரஷ், (6) சிறுகண்ணடி, (7) முகப்பவுடர் பொட்டணம், (8) சீப்பு, (9) திருகுடன்கூடிய பென்ஸில், (10) சிகரெட்பெட்டி, (11) சிகரெட் பற்றவைக்கும் கருவி, (12) கைக்குட்டை, (13) மோதிரம், (14) கத்திரி, (15) 555 அடி தூரம் நன்ருக வெளிச்சம் வீசும் டார்ச்லைட், அல்லது 5 வருஷ உத்தரவாதமுடையதும் கெட்டியான யந்திரவேலைப்பாடுடையதுமான ஜெர்மன் B டைம்பீஸ்.

தபால், பாக்கிங் செலவு தனியே அணு 12.

The French Watch Co., Post Box No. 12216. Calcutta, (K.M.)

# குறைந்த விலை

சித்திரை மாதத்தில் புஸ்தகம் வாங்குபவர்களுக்கு
மாத்திரம்

## மூன்று ரத்தினங்கள்

வேதாந்தம், ஸ்தோத்திரம், ஆத்மானந்தத்திற்
பழுத்த பெரியாரின் அமுத மொழிகள்.

### 1. ஸ்ரீ ரமண சந்நிதிமுறை

விலை ரு. 2 8 0

### 2. பரமார்த்த தீபமென்னும் குருவாசகக்கோவை

விலை ரு. 1 0 0

### 3. ஸ்ரீ ரமண தேவமாலை

விலை அணா 4

மூன்றும் ஒருங்கே வாங்குபவர்களுக்கு மூன்று ரூபாய்க்குத் தரப்படும். தபாற்கூலி வேறு.

ஒருமாதத்திற்கு மாத்திரம் இந்தக் குறைந்த விலை

**மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்**

முற்றாத மென்சொல்லையும் சித்திரித்து அந்தக் குறையை நிவர்த்தித்துக் கொண்டார். குழந்தை குட்டிகளைப் பறிகொடுத்திருந்தால் தசரதனுடைய புலம்பலைப்பற்றிப் பாடியிருப்பார்.'' புலம்ப லென்ற பொழுதே அவர் மனத்தில் ஒரு சலனம். ''புலம்பலென்றால், தசரதன் புலம்பலொன்றுதானோ? பிரிவுக்குள் எத்தனையோவிதப் பிரிவுகள் இருக்கின்றன. சோகங்களுக்குள் எத்தனையோ மாதிரியான சோகங்கள் இருக்கின்றன'' என்று ஒரு தீனக் குரலில் பேசினார்.

அவருடைய முகத்தைப் பார்த்த எனக்கு அவர் ஏதோ ஒன்றை எண்ணி உள்ளம் நைந்து உருகுகிறார் என்று பட்டது. அதைத் தெரிந்து கொள்வதற்காக மேன்மேலும் அவரைக் கேள்விகள் கேட்கலானேன் :

''நமக்கு நேர்ந்தால்தானா அதை வர்ணிக்கமுடியும்? கற்பனையினால் பிறர் உள்ளத்தில் நுழைந்து அவருடைய அனுபவங்களையும் நம்முடைய அனுபவங்களாகச் செய்துகொள்ள முடியாதா?''

''அதை நான் மறுக்கவில்லை, ஆனால் நமக்கு நேர்ந்தால், துக்கத் துடிப்பிலே கற்பனை அதிக வேலை செய்யும் என்பதில் சந்தேகமில்லையே?''

''இல்லை'' என்றேன்.

''இன்று பாலன் ஊருக்குப்போனது எனக்கு அநேக ஞாபகங்களைப் படைபடையாக எழுப்புகிறது'' என்று துக்கம் தொண்டையை அடைக்கத் தம் கதையைச் சொல்லலானார்.

''எனக்கு ஊர் ஊராய்த் திரிகிற உத்தியோகம்; ஓய்வில்லை, ஒழிவில்லை.''

''மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் காரியத்தைச் செய்கிறதாயிருந்தால், எந்தத் தொழிலும் கஷ்டந்தான்'' என்று குறுக்கே பாய்ந்தேன்.

''என் மனைவிக்கு நல்ல உடம்பில்லை. அவளைக் கூட அழைத்துப் போக முடியாமற் போயிற்று. 'அடிக்கடி என்னை விட்டு இப்படிப் போகிறீர்கள்; இப்பொழுது தெரியாது. முடிவில் தெரியும்' என்று நான் ஊருக்குப் போகிறபொழுதெல்லாம் அவள் சொல்லுவாள். அதனுடைய வேகமும் உண்மையும் இப்பொழுதுதான் எனக்கு விளங்குகின்றன.'' இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, ''சந்துருவை உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

''ஆமாம், தெரியும். நியூயார்க்கில் இருக்கிறவர்தானே?''

''அவனை முதல் முதல் சீமைக்கு அனுப்பும்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்; கேளுங்கள்.''

ஆனால் நான் என் துக்கத்தை அவரிடம் சொல்லப் புகுந்தேன்; 'நம் நாட்டில் மேதாவிகளுக்குச் சரியான வசதிகளும் ஆதரவுகளும், இருந்தால் வெளிநாட்டுக்குப் போகவேண்டிய அவசியம் இராது. எத்தனையோ தாய் தகப்பன்மார்களின் மனம் பிரிவினால் உடையாமல் இருந்திருக்கும். நம் நாட்டை ஒரு கலாபவனமாய் அமைத்துவிட்டால் அந்நிய நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு ஒரு பெருங் கோவிலுக்கு வருகிறது

போல மேதாவிகள் வருவார்கள். நாமும் அங்கே போகலாம். ஒரு சமநிலை இருந்தால் எவ்வளவு கண்ணியமாயிருக்கும்! வெளி நாட்டு முத்திரை பெற்றால்தான் இந்த நாட்டில் கௌரவம். இப்பிரதேசத்திலேயே அறிவாளிகளை அறிந்து போற்றுகிற உண்மை ஞானமும், சிறந்த ஒழுக்கமும் இல்லை. மேல் நாட்டார்களோடு ஒக்கக் கணக்கத்தான் நம் நாட்டு ஜனங்களுக்குத் தெரியும். அரை குறையாய் ஞானமுள்ளவர்கள் கூட அங்கே போய் என்னவோ பட்டங்களைப் பெற்று இங்கே தங்கள் பொல்லாச் சிறகுகளை விரித்தாடுகிறார்கள்'' என்று என் உள்ளத்திலே வெகு நாளாகப் புழுங்கிக்கொண்டிருந்த விசனத்தைக் கொட்டித் தீர்த்துக்கொண்டேன்.

''ஆமாம், நீங்கள் சொல்வது உண்மைதான். பையன் சீமைக்குப் போன ஏக்கந்தான் என் மனைவியின் மரணத்தைத் துரிதப்படுத்தியது. இன்று காலையைப் போலத்தான் பம்பாய்த் துறைமுகத்தில் ஒரு கூட்டம். பல சுருதிகளிற் பேச்சு; பலவிதக் காட்சிகள். அழுகையும் சிரிப்பும் கலந்த நாடகந்தான் என் முன் தோற்றியது. அங்குள்ள ஒவ்வோர் உள்ளத்திலும் என்ன என்ன காட்சிகள் எழுந்தனவோ, யாருக்குத் தெரியும்! என் பையனை வழியனுப்பிவிட நான் ஒருவன்தான் போயிருந்தேன். கப்பலில் ஒருவனுக்கு அவன் தாய் தகப்பன்மார்கள் மாலையிடுங் காட்சியைக் கண்டேன். இதைப் பார்த்தவுடன் சென்னையில் என் பையனுக்கு, வியாதியாய்ப் பட்டுக்கிடந்த என் மனைவி சொன்ன வார்த்தைகள் எனது ஞாபகத்திற்கு வந்தன. பம்பாய்க்குப் புறப்படுவதற்கு முன் பட்டணத்தில் காலேஜில் சேர்ந்து படித்த மாணவர்கள் என் பிள்ளைக்கு மாலையிட்டார்கள். மாலையுடன் அவன் வீட்டிற்கு வந்தான். அதைப் பார்த்து, 'அப்பா, நீ திரும்பி வருவதற்குமுன் நான் இருப்பேனோ இல்லையோ! கல்யாண மாலையைத்தான் போட்டுப் பார்க்கவில்லை. இந்த மாலையையாவது போட்டுக்கொண்டு என்னையும் அப்பாவையும் நமஸ்காரம் செய்' என்று சொன்னாள். அந்த வார்த்தை மனத்தில் எழுந்தது. நான் தைரியத்தை விடாது என் பையனோடு பேசிக்கொண்டிருந்தேன். இதற்குள் ஸைரன் ஊதப்பட்டது: தண்ணீரைக் கிழித்துக்கொண்டு கப்பல் நகர்ந்தது. பையன் மேல் தளத்திலிருந்து கைக்குட்டையை வீசிக்கொண்டிருந்தான். அதுவும் மறைந்தது. நான் துறைமுகத்தில் நின்றுகொண்டு கப்பல் போகிற திசையைச் சிந்தை தேக்கிய முகத்தோடு பார்த்தேன். நான் உடனே திரும்பிப் பட்டணம் வருகிற வண்டியில் உட்கார்ந்தேன். மனத்தில் என்ன என்னவோ எண்ணங்கள் குவிந்தெழுந்தன. மற்றவர்கள் வைத்த ரோஜாப்பூ மாலையின் அதிக மணத்தினால் 'ஐயோ பையனுக்குக் கப்பல் அறையில் மூச்சுத் திணறிவிடுமோ' என்ற எண்ணம் சட்டென உள்ளத்தில் பாய்ந்தது. 'சீ என்ன எண்ணம்? அவ்வளவு தெரியாதா அவனுக்கு?' என்று எண்ணும் பொழுதே வேறொரு விஷயத்திற்கு என் மனம் தாவிற்று. பட்டணத்தில் நாளுக்குநாள் மலினமடைந்து தேய்கிற என் மனைவியின் உருவம் மிதந்து வந்தது. பையனது பிரிவாற்றாமையினால் அவள் விட்ட விம்மலும் என் கற்பனைச் செவியில் விழுந்தது. பிறகு மனத்திற்கு ஓர் உணர்ச்சியற்ற நிலைதான்.

"வீடுபோய்ச் சேர்ந்தேன்; என் மனைவியைக் கண்டேன். இத்தனை காலம் பையனின் முன்னேற்ற ஆசைக் கனவில் ஆழ்ந்த என் மனம் திடுக்கிடச்செய்யும் வாழ்வின் பயங்கரமான பிரத்தியக்ஷத்துக்குத் திரும்பியது. அதுமட்டும் அல்லாமல் ஒருவிதமான அணைபோடப்பட்ட என் துக்க வெள்ளம் அவளுடைய பரிதாபமான நிலையைக் கண்டவுடன் கரையை உடைத்துக்கொண்டு கிளம்பியது.

"நான் ஹோவென்று அலறினேன். அவளும் அழுதாள். என் கண்களிலிருந்து தாரைதாரையாய் அருவி பாய ஆரம்பித்துவிட்டது. பிள்ளையின் பிரிவினால் சாம்புகிற அவள் உள்ளம் அவனது சீமைப் பிரயாணத்தை நினைத்ததுமட்டுமின்றி மீளாத் தன் மஹாப்ரயாணத்தையும் சித்திரித்துவிட்டது.

"எனக்குப் பையனைப் பிரிந்த துக்கம்; மனைவியைச் சீக்கிரம் இழந்துவிடப்போகிறோமே என்ற ஏக்கம்; இத்தனைநாளாக நாங்கள் பெற்று, சேர்ந்து வளர்த்து அறிவு ஊட்டிய பையன் திரும்பிவருமுன் இவள் காலமாய்விடுவாளே என்ற பயம்—எல்லாம் சேர்ந்து கண்ணீர் ஊற்றுக்களைத் திறந்துவிட்டன. என் சுயநலத்தில் எழுந்த நீர்த்திவலைகள், அவளுடைய தூய அன்பில் சுரந்த கண்ணீரில் கரைந்தன.

"சிலநாட்களுக்குப் பிறகு அவள் இறந்தாள். இறக்குந் தறுவாயில் அவள் இரண்டொரு வார்த்தைகளைத் தழுதழுத்த குரலில் மொழிந்தாள்; 'அன்றுந் தனிமைதான்; இன்றுந் தனிமைதான். தனிமையாகத்தான் நான் பிரயாணமாகிறேன்' என்று கூறிக் கண்களை மூடிவிட்டாள். அன்று சொன்ன வார்த்தைகள் ஒன்பது வருஷங்கள் தேய்ந்தும், இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

"அவள் மாண்டது முதற்கொண்டு என் உள்ளத்தில் ஒரு சூனியந்தான். உள்ளத்தனிமையை என் சங்கீதச் சுவையினாலும், புத்தகத்தினாலும் நிரப்பி வருகின்றேன். சங்கீதத்தின் மூலம் எனக்குச் சில சமயத்தில் ஆத்ம தரிசனங்கூடக் கிடைக்கிறது" என்று அவர் சொல்லி முடித்தார்.

"உங்களுக்குக் கிடைத்திருக்கும்; ஆனால் அமிர்தம்மாதிரி வழிகிற சங்கீதத்தைக் கேட்கிற எனக்கு, அதன் ஊற்று ஒருநாள் அடைத்துப் போய்விடுமே என்ற துக்கந்தான் வருகிறது."

"அப்பா, அம்மா" என்று மாடிப்படியண்டை நின்று தன் தளிர்க்கையால் தட்டி அழைத்து இறந்த செல்வக் குழந்தையினால் எழுந்த சோகக் குத்தலையும் கசப்பையும், புத்தகமும் சங்கீதமும் நீக்கிவிடுமோ?

குமரகுரு அடிக்கடி இங்கே பட்டணத்திற்கு வருகிற மர்மம் இப்பொழுதுதான் புரிந்தது. அவருடைய மனைவியின் நிஜ உருவம் அவருடைய குழந்தைகளிடத்தில் சிதறிக் கிடக்கிறது. குழந்தைகளின் பார்வையிலும் நடையிலும் உடையிலும் வீணையின் கானத்திலும் அறிவிலும் அழகிலும் அவர் தம் மனைவியின் சாயையைப் பார்க்கிறார்; ஒலியைக் கேட்கிறார்.

சுவரில் உள்ள குழந்தையின் அர்த்தமற்ற கீறல்கூட நம்முடைய எத்தனையோ ஞாபகங்களைத் தட்டியெழுப்புகிறது. ஒரு புத்தகம்— சேர்ந்து அனுபவித்த புத்தகம்— இராப்பகல் தெரியாது இன்பமாய்ப் பேசிக்கொண்டு, கதையின் ரஸம் சிதையாமல் மூலத்தை அனுசரித்து மாற்றப்பட்ட இப்ஸனின் (Ibsen's Doll's House) 'பொம்மைக் குடித் தனம்' என்ற புத்தகம், என்னதான் ஓர் அன்பர் உள்ளத்தைச் செய்யாது? இதுதான் குமரகுருவின் தர்மபத்தினி தன் கணவனுக்கு விட்ட ஞாபகச் சின்னம்.

குமரகுரு ஷாஜஹான்போலப் பைத்தியக்காரத்தனம் செய்யவில்லை. ஷாஜஹானுக்கு அன்பின் சூக்ஷ்மம் தெரியாது. அந்த மலரின் மெல்லிய சுபாவம் தெரியாது. அவனுக்கு நாகரிகம் இல்லை. கோப்பியமாய் உள்ளக் கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் வைக்கவேண்டிய அன்பின் வடிவை அம்ப லத்தில் வைத்துவிட்டான். நல்ல விஷயத்தைப் பகிரங்கப்படுத்துவதுகூட நாகரிகத்திற்குக் குறைவே. நாகரிகத்தின் முதிர்ச்சி, சிகரம், மோன நிலையை அடைவதுதான். 'நீ என்ன பண்ணுகிறாய்? சோகந் தாங்காமல் சற்று ஆடின திரையை இப்போது முழுவதும் தூக்கிவிட்டாயே. எழுத்து மூலம் வெளி யிட்டாலும் அநாகரிகந்தானே?' என்று என் பின் ஒரு நிந்தைவார்த்தை கிளம்பிற்று.

ஆமாம், அநாகரிகந்தான். அவர் துக்கந் தாங்காமல் வெளியிட்ட செய்தியை என் மனத்திற்குள்ளே இருத்திவைத்துப் போற்றாமல் உலக மறியப் பறைபடித்தேனே, அது என் குற்றமா? அல்லது அவர் குற்றமா?

'குமரகுரு உள்ளத்தில் ஓடுகின்ற யமுனாநதிக்கரையில் விளங்கு கின்ற பிரேமாலயத்திற்கு ஈடாகுமோ, பல சால்பட்டு மாசுறும் தாஜ் மஹல்?' என்று இந்தச் சுருதியில் எண்ணமிட்டு ஓடுகின்ற என் சிந்தையில் அவர் மனைவியின் கடைசிவார்த்தைகள் அலையடித்தன:

"அன்றுந் தனிமைதான்; இன்றுந் தனிமைதான். தனிமையாய்த்தான் போகிறேன்."

இவ்வார்த்தைகளின் அலையொலிக்கு என் உள்ளம் எதிரொலி கொடுத் தது. தாரகா கணங்கள் அற்ற நீண்ட இருள்மூடிய பெரும்பாழில் ஓடுகிற என் தனிவழியை நானும் உன்னினேன். என் கண்களில் ஜலம் சேர்ந்தது. ஆனால் அத்துளிகளை, நிரம்பியுள்ள அவர் சோகபாத்திரம் ஏற்குமோ?



# : நிர்மலா :

* ஸ்ரீ ப்ரேமசந்த் *

[கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது]

[**பூ**ர்வகதை: தம் பெண்ணாகிய நிர்மலாவின் கல்யாணச் செலவு விஷயமாக வக்கீல் உதயபானுலாலுக்கும் அவர் மனைவிக்கும் சச்சரவு ஏற்படுகிறது. வக்கீல் வெளியே அன்றிரவே உலாவச் செல்லுகையில் விடுதலையான ஒரு குற்றவாளியால் கொல்லப்படுகிறார். அவர் மனைவி வருந்தினபின் தேர்ந்து கல்யாண விஷயத்தைப்பற்றி மீண்டும் தன் புரோகிதர் மூலமாக சொல்லியனுப்ப, ஸம்பந்தியாவதற்கிருந்தவர் சிரித்தமுகத்துடனே ஸம்பந்தம் வேண்டாமெனத் தெரிவிக்கிறார்.]

(சென்ற இதழ் 311-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அத்தியாயம் 4

## விவாகப் பேச்சு

**க**ல்யாணிக்கு இப்போது இது ஒரு சிக்கலான பிரச்னையாயிற்று. கணவன் இறந்த பிறகு, தன்னுடைய ஈன நிலைமையைப் பற்றி அவளுக்கு ஏற்பட்ட கசப்பான முதல் அனுபவம் இதுதான். கல்யாணத்துக்குரிய ஓர் இளம்பெண்ணைக் காலில் கட்டிக்கொண்டிருப்பதைவிட வேறு என்ன ஆபத்து வேண்டும், ஒரு தரித்திர விதவைக்கு? வேண்டுமானால் பிள்ளைகள் செருப்புப் போட்டுக் கொள்ளாமலே பள்ளிக்கூடம் போகலாம்; சமையல்வேலைகளைத் தானே செய்து கொள்ளலாம்; ஏதோ கசந்ததையும் புளித்ததையும் தின்று வயிறு வளர்க்கலாம்; குடிசையில் வேண்டுமானாலும் வாசம் செய்யலாம்; ஆனால், இளம்பெண்ணை வீட்டில் வைத்திருக்க முடியுமா? கல்யாணிக்குப் பாலசந்திரர்மீது மிகமிகக் கோபம் வந்தது. தானே நேரிற் சென்று அவர் முகத்தில் கரியைப் பூசித் தலையை மொட்டையடித்து, "நீ சொன்ன சொல் தவறிவிட்டாய்! உன் அப்பனுக்குப் பிள்ளையல்ல நீ" என்று சொல்லிவிட்டு வந்து விடலாமென்று அவளுக்குத் தோன்றியது. பண்டிதர் மோடேராம் பாலசந்திரருடைய கபடநாடகம் முழுவதையும் ஒளிக்காமல் அவளிடம் சொல்லிவிட்டார்.

இதே கோபத்துடன் அவள் உட்கார்ந்திருந்தபோது, கிருஷ்ணா விளையாடிக்கொண்டே வந்து, "என்ன அம்மா? இன்னும் கல்யாணம்

வர எத்தனை நாளாகும்? பண்டிதர்கூட வந்துவிட்டாரே?'' என்றாள்.

கல்யாணி: ஓ! கல்யாணம் வருமென்று கனவு காண்கிறாயா?

கிருஷ்ணு: சந்திரன் தான் சொல்லுகிறானே; இன்னும் இரண்டு மூன்று நாளில் வருமென்று. என்னம்மா, வராதா?

கல்யாணி: ஒருதரந்தான் சொன்னேனே; ஏன் பிராணனை வாங்குகிறாய்?

கிருஷ்ணு: எல்லோர் வீடுகளிலும் விவாகம் செய்கிறார்களே; நம் வீட்டில் ஏன் செய்யவில்லை?

கல்யாணி: இங்கே கல்யாணம் வர இருந்ததே; அவன் வீடு எரிந்து போயிற்று!

கிருஷ்ணு: உண்மையாகவா, அம்மா? அப்படியானால் வீடு முழுதும் எரிந்துபோயிருக்கும். அவர்கள் எங்கே வசிப்பார்கள்? அக்கா எங்கே போய் இருப்பாள்?

கல்யாணி: போடீ பைத்தியம்! உனக்கு ஒன்றுமே தெரிவதில்லை. வீடு எரியவில்லை. நம் வீட்டில் அவன் கல்யாணம் செய்ய மாட்டானாம்!

கிருஷ்ணு: அது ஏன் அம்மா? முதலில் அங்கே கல்யாணம் நிச்சயமாகி விடவில்லையா?

கல்யாணி: நிறையப் பணம் கேட்கிறான். அவனுக்குக் கொடுக்க என்னிடம் ரூபாய் இல்லை.

கிருஷ்ணு: பெரிய பேராசைக்காரர்களா, அம்மா, அவர்கள்?

கல்யாணி: பேராசைக்காரனல்லாமல் பின் என்ன? அசல் கசாப்புக் கடைக்காரன்; இரக்கமற்றவன்; ஏமாற்றுபவன்!

கிருஷ்ணு: அப்படியானால், அம்மா, அங்கு அக்காவுக்குக் கல்யாணம் நடக்காததே நல்லதாயிற்று. அவர்களுடன் அக்கா எப்படி இருப்பாள்? அம்மா, இது சந்தோஷப்படவேண்டிய விஷயம். இதற்காக ஏன் வருந்துகிறாய்?

கல்யாணி தன் மகளை அன்பு நிறைந்த பார்வையால் நோக்கினாள். 'இவள் கூறியது எவ்வளவு உண்மையான வார்த்தை! பிரச்னையின் மர்மம் எளிய சொற்களில் எவ்வளவு தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது! இப்படிப்பட்ட கொடிய இடத்தில் சம்பந்தம் செய்யாதது சந்தோஷப்படத்தக்க விஷயமே; துன்பப்படவேண்டியதல்ல. இவ்வாறான தீய மனிதர்களினிடையே நிர்மலாவின் கதி என்ன ஆகும்? அவள் விதியை நொந்து கொள்வாள். பருப்பில் நெய் கொஞ்சம் அதிகம் கொட்டிவிட்டால், வீடு முழுதும் அமர்க்களப்

படாதா? சோறு சிறிது அதிகம் சமைத்துவிட்டால் மாமியார் உலகயுத்தத்தையே வரவழைத்துவிட மாட்டாளா? பிள்ளையும் அதே மாதிரிப் பேராசைக்காரன்தான். இது நல்லதாயிற்று; இல்லையெனில், பாவம், நிர்மலா ஆயுள் முழுவதும் அழவேண்டியிருந்திருக்கும்!' என்று யோசித்தாள் அவள். அவள் அங்கிருந்து எழுந்தபோது அவளது இருதயம் லேசாயிருந்தது.

ஆனால் விவாகமோ நடக்கவேண்டியதுதான்; அதுவும் கூடிய மட்டில் இதே வருஷத்தில். இல்லாவிட்டால் அடுத்த வருஷம் மறுபடியும் புதிதாக எல்லாவற்றையும் ஸித்தம் செய்யவேண்டியிருக்கும். இனி நல்ல இடம் தேவையில்லை; நல்ல வரனும் தேவையில்லை. துரதிருஷ்டம் பிடித்தவளுக்கு நல்ல வரன் எப்படிக் கிடைக்கும்? எப்படியாவது தலைச்சுமையை இறக்க வேண்டும்; எப்படியாவது பெண்ணைக் கரையேற்ற வேண்டும்—அவளைக் கிணற்றில் தள்ளவேண்டும்! அவள் ரூபவதிதான், நற்குணங்கள் நிறைந்தவள்தான், கெட்டிக்காரிதான், பெரிய குடும்பத்திற் பிறந்தவள்தான்; ஆனால் என்ன? வரதக்ஷிணை இல்லையென்றால், எல்லாக் குணங்களும் குறைகளேயாகிவிடும். வரதக்ஷிணையிருந்தால் எல்லாக் குறைகளும் நிறைந்து குணங்களாகி விடும். உயிருக்கு மதிப்பில்லை; வரதக்ஷிணைக்குத்தான் மதிப்பு. விதியின் விளையாட்டுத்தான் என்ன!

கல்யாணியினிடமிருந்த குறைகளும் கொஞ்சம் நஞ்சமல்ல. அபலையாகவும், விதவையாகவும் இருக்கும் வரையில் அவள் குறைகளிடமிருந்து தப்ப முடியாது. அவளுக்குத் தன் பெண்ணை விடப் பிள்ளைகளிடத்தில் ஆசை அதிகம். பிள்ளைகள் உழவு மாடுகள்; தவிடு பிண்ணாக்குகளின்மீது முதல் அதிகாரம் அவர்களுடையதுதான். அவர்கள் தின்று மிஞ்சினால்தான் பசுக்களுக்கு! அவளிடம் வீடு இருந்தது; கொஞ்சம் ரொக்கமும் இருந்தது; எத்தனையோ ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் இருந்தன. ஆனால் இன்னும் இரண்டு பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டும்; அவர்களைப் படிக்கவைக்கவேண்டும். மற்றொரு பெண் இன்னும் நாலைந்து வருஷங்களில் விவாகத்துக்கேற்றவளாகி விடுவாள். இக்காரணங்களினால் வரதக்ஷிணையாகப் பெருத்த பணம் அவளால் கொடுக்க முடியவில்லை. கடைசியில் பிள்ளைகளுக்கு ஒன்றும் வேண்டாமா என்ன? தங்கள் தகப்பனாரும் தங்களுக்காகக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தார் என்பது அவர்களுக்குப் பின் எப்படித்தான் தெரியும்?

பண்டிதர் மோடேராம் லக்னௌவிலிருந்து வந்து பதினைந்து நாட்களாயின. திரும்பிவந்த மறுநாளே, அவர் வரன் தேடப் புறப்பட்டுச் சென்றார். "இந்த லக்னௌக்காரர்களுக்கு, 'உலகத்

தில் நீங்கள் ஒருவர்தானென்று எண்ணவேண்டாம்; உங்களைப் போல் எத்தனையோபேர் கிடக்கிறார்கள்' என்று காட்டாவிட்டால் நான் ஒரு மனிதனல்ல'' என்று பிரதிக்ஞை செய்துவிட்டுக் கிளம்பினார் அவர். கல்யாணி தினந்தோறும் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள். அன்று அவள் அவருக்குக் கடிதம் எழுத நிச்சயித்து, மைக்கூடும் பேனாவும் கொண்டுவந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தவுடனே, அவரே வந்து சேர்ந்தார்.

**கல்யாணி**: வாருங்கள் பண்டிதரே! உங்களுக்குத்தான் கடிதம் எழுதுவதாயிருந்தேன். நீங்கள் எப்போது வந்தீர்கள்?

**மோடேராம்**: இன்று காலையிலேயே வந்துவிட்டேன். இப்போதுதான் ஒரு சேட்டினிடமிருந்து அழைப்பு வந்தது. நல்ல விருந்து சாப்பிட்டு வெகு நாளாயிற்று. கையோடு கையாக இந்த வேலையையுந்தான் முடித்துக்கொண்டு வந்துவிடுவோமே என்று நினைத்தேன். இப்போது அங்கிருந்துதான் வருகிறேன். பந்தியில் சுமார் ஐந்நூறு பிராம்மணர்கள் சாப்பிட்டிருப்பார்கள்.

**கல்யாணி**: நம்முடைய வேலை ஏதாவது முடிந்ததா? அல்லது வீண் நடைதானா?

**மோடேராம்**: வேலை ஏன் முடியாது? அப்படிக்கூட நடக்குமா? ஐந்து இடங்களில் பேசி வந்திருக்கிறேன். குறிப்புக்களும் குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன். உங்களுக்கு எது சம்மதமோ சொல்லுங்கள். இதோ, இந்தப் பிள்ளையின் தகப்பனாருக்குத் தபால் இலாகாவில் உத்தியோகம். மாதம் நூறு ரூபாய் சம்பளம். பையன் காலேஜில் படித்துக்கொண்டிருக்கிறான். ஆனால் உத்தியோகத்தைத்தான் நம்பவேண்டும்; சொத்து சுதந்திரம் ஒன்றும் இல்லை. பிள்ளை முன்னுக்கு வரக்கூடியவன். நல்ல குலம். இரண்டாயிரம் ரூபாயில் பேச்சு முடியும். அவர்கள் மூவாயிரம் கேட்கிறார்கள்.

**கல்யாணி**: பிள்ளைக்கு இன்னும் தம்பி தமையன்மார் இல்லையா?

**மோடேராம்**: அதெல்லாம் இல்லை. மூன்று தங்கைகள் இருக்கிறார்கள்; எல்லாரும் கன்னியாப்பெண்கள். தாய் உயிரோடிருக்கிறாள். சரி; இதைப் பாருங்கள்: இந்தப் பையன் ரெயில்வேயில் மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதிக்கிறான்; தாய் தகப்பன் இல்லை. பையன் பார்வைக்கு அழகாயிருக்கிறான். நல்ல ஒழுக்கம். உடம்பு மதமதவென்று பயில்வான் போலிருக்கிறான். ஆனால் குலம் நன்றாயில்லை. அவனுடைய தாய் அம்பட்டச்சி என்கிறான் ஒருவன்; கோமுட்டிச்சி என்கிறான் மற்றொருவன். தகப்பன் ஏதோ ஒரு ஸம்ஸ்தானத்தில் அதிகாரியா யிருந்தானாம். ஏதோ கொஞ்சம் நிலம் நீச்சு இருக்கி

# ஆரம்ப பாடசாலைக்குரிய

## எமது தமிழ்ப் பிரசுரங்கள்

### முதல் வகுப்பு

| | அணா. |
|---|---|
| நமது தாய்மொழி வாசகம் I | $2\frac{1}{2}$ |
| கோபால் புதிய தமிழ்வாசகம் I | $2\frac{1}{2}$ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) (each) | 1 |

### இரண்டாம் வகுப்பு

| | |
|---|---|
| நமது தாய்மொழி வாசகம் II | $3\frac{1}{2}$ |
| கோபால் புதிய தமிழ் வாசகம் II | 3 |
| கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு—பாகம் II | $3\frac{1}{2}$ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) (each) | 1 |

### மூன்றாம் வகுப்பு

| | |
|---|---|
| நமது தாய்மொழி வாசகம் III | $4\frac{1}{2}$ |
| கோபால் புதிய தமிழ் வாசகம் III | 4 |
| இயற்கை அற்புதங்கள்—முதல் புத்தகம் | 3 |
| நூதனமுறை கிண்டர்கார்டன் தினசரிக்கணக்கு I | 6 |
| இந்துதேச சரித்திரக்கதைகள் I | 3 |

### நான்காம் வகுப்பு

| | |
|---|---|
| நமது தாய்மொழி வாசகம் IV | 5 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் IV | $4\frac{1}{2}$ |
| இயற்கை அற்புதங்கள்—இரண்டாம் புத்தகம் | 4 |
| நூதனமுறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு II | [illegible] |
| இந்துதேசசரித்திரக்கதைகள் II | $4\frac{1}{2}$ |
| துரைத்தன விளக்கம்—I | 5 |
| The Coronation English Readers, Primer (I & II) | 6 |

### ஐந்தாம் வகுப்பு

| | |
|---|---|
| நமது தாய்மொழி வாசகம் V | 6 |
| கோபால் புதிய தமிழ்வாசகம் V | 6 |
| இயற்கை அற்புதங்கள்—மூன்றாம் புத்தகம் | 5 |
| கம்பர் அல்லது கவியரசர் | 5 |
| | அணா. |
| நூதனமுறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு III | 10 |
| இந்துதேச சரித்திரக் கதைகள்—III | 6 |
| துரைத்தன விளக்கம்—II | 6 |
| The Coronation English Readers, Book I | 6 |

### ஆறாம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்-VI | 7 |
| The Coronation English Readers, Book II | 8 |
| The New Era Story Books, Book I | 3 |
| The Coronation English Grammar & Composition Book I | 6 |

### ஏழாம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—VII | 8 |
| பகீரதன் | 6 |
| The Coronation English Readers, Book III | 10 |
| The New Era Story Books, Book II | 4 |
| The Coronation English Grammar & Composition Book II | 9 |

### எட்டாம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—VIII | 9 |
| The Coronation English Readers, Book IV | 12 |
| The Coronation English Grammar & Composition Book III | 12 |
| The New Era Story Books, Book III | 6 |
| Chandrahasa | 6 |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

4, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு, சென்னை.




Retail Branch 285, China Bazaar

**23 வருஷமாக**



சென்னையில்
பிரபலமானவர்.
எதிர்கால பல
நிபுணர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி வருஷப்பலன் ரூ. 3. எதிர்காலக்கேள்வி 6-க்கு ரூ. 1. பொதுப்பலன் ரூ. 10. ஆயுள் வரை புக்திவாரிபலன் எழுத ரூ. 25 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை).

ஜோதிஷரத்னம்
பண்டிட் M. R. K. மூர்த்தி.
38, தேவராஜ முதலித் தெரு,
பி. டி. மதராஸ்.
கிளை ஆபீஸ்: 1, ஆடம் தெரு,
மயிலாப்பூர்.

## கலைமகள் சித்திரப் படங்கள்

**ஆரம்பப் பாடசாலைகளுக்கு இன்றியமையாதவை**

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன.

ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை.)
2. பானையின் கதை.
3. ஈயின் கதை.
4. வாகனங்கள் (தரை மார்க்கம்.)
5. வாகனங்கள் (ஜல மார்க்கம், ஆகாய மார்க்கம்.)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

இவை கதை சொல்லுதல், படங்களை ஒட்டின சம்பாஷணை செய்தல், பொது அறிவு, வாசிப்பு இவைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளன.

படம் ஒன்று 9 பை; ஒரு செட் 0-6-0; தபால் செலவு 0-3-0

மானேஜர், கலைமகள் ஆபீஸ் மயிலாப்பூர்

றது; ஆனால் அதன் மேலே எத்தனையோ ஆயிரம் கடன். இந்த இடத்தில் கொடுக்கல் வாங்கல் பேச்சு ஒன்றும் இல்லை. பையனுடைய வயது சுமார் இருபதிருக்கும்.

**கல்யாணி:** குலத்தில் கறையில்லாமல் இருந்தால் ஒப்புக் கொண்டு விடுவேன். தெரிந்திருந்தும் நாம் அப்படிச் செய்யலாமா?

**மோடேராம்:** மூன்றாவது குறிப்புப் பாருங்கள்: இவன் ஒரு மிராசுதாரின் மகன். வருஷத்துக்குச் சுமார் ஆயிரம் ரூபாய் லாபம் வரும். நிலபுலன்களும் கொஞ்சம் இருக்கின்றன. பையனுக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும்; ஆனால் கச்சேரி வியவகாரங்களில் நிபுணன். இரண்டாம் தாரம். முதல் மனைவி இறந்து இரண்டு வருஷங்களாகின்றன. அவளுக்குக் குழந்தை இல்லை. ஆனால் வீட்டுவேலைகள் மிகக் கடினமானவை. அரைப்பது, இடிப்பது எல்லாம் வீட்டுக்காரிதான் செய்யவேண்டும்.

**கல்யாணி:** வரதக்ஷிணை ஒன்றும் கேட்கவில்லையா?

**மோடேராம்:** அதைப் பற்றிச் சொல்லவேண்டுமா? நாலாயிரம் கேட்கிறார்கள். சரி; இந்த நாலாவது குறிப்பைப் பாருங்கள்: வரன் ஒரு வக்கீல். வயது முப்பத்தைந்து இருக்கும். முந்நூறு நானூறு ரூபாய் வரும்படி வரும். முதல் மனைவி இறந்துவிட்டாள். அவளுக்கு மூன்று பிள்ளைகள். பட்டணத்தில் சொந்த வீடு கட்டியிருக்கிறான். தவிரக் கொஞ்சம் சொத்தும் சேர்த்து வைத்திருக்கிறான். இங்கும் கொடுக்கல் வாங்கல்களைப்பற்றிய சிக்கல் இல்லை.

**கல்யாணி:** குலம் எப்படி?

**மோடேராம்:** உயர்ந்த குலம். பழையகாலத்துப் பிரபுக்கள். சரி, இந்த ஐந்தாவது குறிப்பையும் பார்த்துக்கொள்ளுங்கள்: பிள்ளையின் தகப்பனார் ஓர் அச்சாபீஸ் வைத்திருக்கிறார். பையன் பி.ஏ., வரையில் படித்திருக்கிறான். ஆனால் அதே அச்சாபீஸில்தான் வேலை செய்கிறான். வயது பதினெட்டு இருக்கும். அச்சுக்கூடத்தைத் தவிர வேறு சொத்துக் கிடையாது; கடனும் இல்லை. அப்படி உயர்ந்ததுமல்ல, தாழ்ந்ததுமல்ல. பையன் ரொம்ப அழகாய் நல்லொழுக்கம் குலம் உடையவனாய்க் காண்கிறான். ஆனால் ஆயிரத்துக்குக் குறைந்து பேச்சு முடியாது; அவர்கள் மூவாயிரம் கேட்கிறார்கள். தங்களுக்கு எந்த இடம் இஷ்டமோ? சொல்லுங்கள்.

**கல்யாணி:** தங்களுக்கு எல்லாவற்றிலும் எது உயர்ந்ததாகத் தோன்றுகிறது?

**மோடேராம்:** இரண்டு வரன்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன; ரெயில்வேயில் வேலை செய்பவன் ஒருவன்; மற்றொருவன் அச்சாபீஸில் வேலை செய்பவன்.

**கல்யாணி**: ஆனால் முதல் வரனுடைய குலத்தில் தோஷம் கூறுகிறீர்களே?

**மோடேராம்**: குலம் நன்றாயில்லைதான்! அப்படியானால் இந்த அச்சாபீஸ் பையனைத்தான் எடுத்துக்கொள்ளலாமே!

**கல்யாணி**: ஆயிரம் ரூபாய் எங்கிருந்து கொடுப்பது? ஓர் ஆயிரம் என்பது உங்களுடைய அனுமானம்; அவர்கள் ஒருகால் இன்னும் அதிகமும் கேட்கலாம். உங்களுக்குத்தான் வீட்டின் நிலை தெரியுமே? சாப்பாடு கிடைத்தாலே போதுமென்றிருக்கிறது. ரூபாய் எங்கிருந்து வரும்? மிராசுதார் நாலாயிரம் கேட்கிறார்; போஸ்டாபீசுக்காரர் இண்டாயிரம் கேட்கிறார். இவர்களை விட்டு விடுங்கள். சரி, இப்போது அந்த வக்கீல் மிஞ்சுகிறார். முப்பத்தைந்து வயது, அப்படி ஒன்றும் அதிகமில்லை. அவரைத்தான் நிச்சயம் செய்தால் என்ன?

**மோடேராம்**: நீங்கள் நன்றாய் யோசனை செய்துகொள்ளுங்கள். நான் உங்கள் சொற்படி நடப்பவன். எங்கே சொன்னாலும் நிச்சயம் செய்துகொண்டு வருகிறேன். ஆனால் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு ரூபாயைப் பார்க்கவேண்டாம். அந்த அச்சாபீசுப் பையன் ரத்தினம். அவனுடன் உங்கள் பெண்ணின் வாழ்க்கை பூவும் மணமும்போல் ஸபலமாகிவிடும். இவளுடைய எழிலுக்கும் குணத்துக்கும் ஒத்தனவாகவே அவனுடைய அழகும் ஒழுக்கமும் அமைந்திருக்கின்றன.

**கல்யாணி**: எனக்கும் அது சம்மதந்தான், பண்டிதரே! ஆனால் ரூபாய் எங்கிருந்து வரும்? யார் கொடுப்பார்கள்? அப்படி, தானம் கொடுப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா? புசித்தவர்களெல்லாம் ஏப்பம் இட்டுவிட்டுக் கம்பி நீட்டினார்கள். இப்பொழுது யாரும் எட்டிப் பார்ப்பதில்லை. போதாக்குறைக்கு நான்தான் அவர்களை வீட்டை விட்டு நீக்கிவிட்டேனென்றும் குறை கூறுகிறார்கள். என் வசத்தில் இல்லாத விஷயத்தை நான் எப்படி ஒப்புக்கொள்வது? யாருக்குத்தான் தன் மக்களிடம் அன்பு இராது? தன் குழந்தை சுகமாக வாழவேண்டுமென்று யார்தான் விரும்பமாட்டார்கள்? ஆனால் எல்லாம் நம் வசத்தில் இருந்தால்தானே? தாங்கள் கடவுள் பெயரைச் சொல்லி, அந்த வக்கீலையே நிச்சயம் செய்துவிடுங்கள். வயது கொஞ்சம் அதிகந்தான். ஆனால் சாவதும் பிழைப்பதும் விதியின் கையில் இருக்கின்றன. முப்பத்தைந்து வயது மனிதனைக் கிழவனென்று சொல்லமுடியாது. பெண்ணின் விதியில் சுகம் அனுபவிக்கவேண்டுமென்றிருந்தால், அவள் எங்கே சென்றாலும் சுகமாகவே வசிப்பாள்; துன்பம் அனுபவிக்கவேண்டுமாயின் எங்கே போனாலும் துன்பந்தான் அனுபவிப்பாள். நம் நிர்மலாவுக்குக்

குழந்தைகளிடம் பிரேமை அதிகம். அவருடைய குழந்தைகளைத் தன் குழந்தைகளாகவே பாராட்டுவாள். நீங்கள் நல்ல முகூர்த்தத்தில் நிச்சயம் செய்துகொண்டு வாருங்கள்.

---

## அத்தியாயம் 5
## நிர்மலாவின் மனவேதனை

நிர்மலாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. அவள் புக்ககம் வந்து சேர்ந்தாள். வக்கீலின் பெயர் முன்ஷீ தோதாராம். மாநிறம்; நல்ல வலுவான கொழுத்த ஆசாமி. வயது நாற்பதுக்கு மேல் ஆகவில்லையெனினும், கடும் உழைப்பினால் அவர் மயிர் நரைத்துவிட்டது. தேகாப்பியாசம் செய்வதற்கு அவருக்கு ஓய்வே கிடைப்பதில்லை. வெளியே உலாவப் போவதற்குக் கூடப் பொழுதில்லை யென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஆகையால் அவருடைய வயிறும் முன்னுக்கு வந்திருந்தது. உடல் பருத்திருந்துங்கூட ஏதாவது ஒரு நோய் அவரிடம் இருந்துகொண்டே இருந்தது. மலச்சிக்கல், மூலவியாதி இரண்டும் அவரை விட்டு நீங்கா உறவினர்கள். ஆதலால் அவர் தம் உடலைப் பாதுகாத்துக்கொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் மன்ஸாராமுக்கு வயது பதினாறு; இளையவன் ஜியாராமுக்கு வயது பன்னிரண்டு; கடைசி மகன் ஸியாராமுக்கு வயது ஏழு. மூவரும் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ் படித்து வந்தனர். வீட்டில் வக்கீலின் விதவை அக்காவைத் தவிர வேறு யாரும் இல்லை. அவள்தான் வீட்டுக்கு யஜமானி. அவள் பெயர் ருக்மிணி. வயது ஐம்பதுக்குமேல் இருக்கும். அவளுக்குப் புக்ககத்தில் யாருமே இல்லாததால் ஸ்திரமாக இங்கேயே வசித்து வந்தாள்.

தோதாராம் தம்பதி சாஸ்திரத்தில் வல்லவர். நிர்மலாவைச் சந்தோஷப்படுத்த இயலாத தம் இயற்கையான குறையை அவர் பரிசுகள் தந்து நிவர்த்திக்க நினைத்தார். அவர் மிதமாகவே செலவழிப்பவராயினும், நிர்மலாவுக்குத் தினந்தோறும் ஏதாவது வாங்கிக் கொடுத்துவந்தார். சில சமயங்களில் பணத்தைக் கூடப் பொருட்படுத்த மாட்டார். தாம் சிற்றுண்டி அருந்த மாட்டார்; பிள்ளைகளுக்குப் பால் கொஞ்சமாகக் கிடைக்கும். ஆனால் நிர்மலாவுக்கோ பழங்கள், டிபன், 'ஸ்வீட்' ஒன்றுக்கும் குறைவில்லை. அவர் தமது வாழ்நாளில் என்றும் வேடிக்கை விளையாட்டுக்கள் பார்க்கப்போனதே இல்லை. ஆனால் இப்

போதோ விடுமுறை நாட்களில் நிர்மலாவை ஸினிமா, ஸர்க்கஸ், நாடகம் முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்வார். அவர் தம்விலையுயர்ந்த பொழுதின் ஒரு பகுதியை அவளுடன் உட்கார்ந்து கிராமொபோன் வைப்பதிலும் செலவழித்து வந்தார்.

ஆனால், என்ன காரணத்தினாலோ, நிர்மலாவுக்குத் தோதாராமிடம் உட்காருவதும் அவருடன் சிரிப்பதும் பேசுவதும் அருவருப்பைத் தந்தன. இதற்குக் காரணம் ஒருகால் இதுவாகத் தான் இருக்கவேண்டும்: இதுவரையில் அவரைப்போன்ற ஒரு மனிதனை அவளுக்குத் தகப்பனாக இருந்தான்; அவன் முன்பு அவள் தலைவணங்கி உடலை வளைத்துக்கொண்டு போய்விடுவாள். இப்போதோ அதே வயதுள்ள ஒருவர் அவளுக்குக் கணவராயிருந்தார். அவள் அவரைக் காதலுக்குரிய பொருளாகக் கருதவில்லை; மரியாதைக்குரிய பொருளாகவே எண்ணினாள். அவரைக் கண்டாலே அவள் ஓடிமறைவாள்; அவரைக் கண்டவுடனே அவளுடைய மகிழ்ச்சியெல்லாம் பறந்துவிடும்.

'இளம் பெண்ணிடம் நிறையக் காதற்பேச்சுக்கள் பேசவேண்டும். இருதயத்தைத் திறந்து அவள் முன்பு வைத்துவிடவேண்டும். இதுதான் அவளை வசீகரிப்பதற்கு முக்கியமான மந்திரம்' என்பது தான் வக்கீலுக்குத் தம்பதி சாஸ்திரம் கற்றுக்கொடுத்த விஷயம். ஆகவே அவர் தம் காதலைக் காட்டிக்கொள்வதில் ஒன்றும் குறை வைக்கவில்லை. ஆனால் நிர்மலாவுக்கு அவ் வார்த்தைகள் வெறுப்பைத் தந்தன. எந்த வார்த்தைகள் ஓர் இளைஞனின் வாயிலிருந்து வெளிவந்திருக்குமாயின் அவளது உள்ளம் காதலினால் கிளர்ந்தெழுமோ, அந்த வார்த்தைகளே வக்கீலின் வாயிலிருந்து வெளிப்போந்து அவளது இருதயத்தை அம்புகளைப்போல் பிளந்தன. அச்சொற்களில் சுவையில்லை; மகிழ்ச்சியில்லை; போதையில்லை; இருதயமில்லை. செயற்கையும் ஏமாற்றமும் உலர்ந்த சுவையற்ற சொற்களின் வெறும் ஆடம்பரமுந்தான் அவைகளில் இருந்தன. அவளுக்கு அத்தரும் வாசனைத்தைலமும் பிடிக்காமல் இல்லை; வேடிக்கை விளையாட்டுக்கள் பிடிக்காமல் இல்லை; செயற்கைச் சிங்காரங்களும் பிடிக்காமல் இல்லை. ஆனால், தோதாராமிடம் உட்காருவது மாத்திரம் அவளுக்குப் பிடிக்கவே இல்லை. அவள் தன் எழிலையும் யௌவனத்தையும் அவருக்குக் காட்ட விரும்பவில்லை; ஏனெனில் அங்கு அவைகளைக் காணும் கண்களில்லை. அவள் அவரை இச்சுவைகளை அனுபவிக்க உரியவராகவே மதிக்கவில்லை. மொட்டானது புலரிக்காற்றின் ஸ்பரிசத்தினால்தான் மலரும். இரண்டிலும் சமமான சுவையே உள்ளது. நிர்மலாவுக்கு அந்தப் புலரிக் காற்று ஏது?

முதல் மாதம் கழிந்தது; தோதாராம் நிர்மலாவைத் தன் 'காஷிய'ராக்கிக் கொண்டார். கச்சேரியிலிருந்து வந்தவுடனே அன்றை வருமானத்தை அவளிடம் கொடுத்துவிடுவார். நிர்மலா அந்த ரூபாய்களைக் கண்டதும் ஆனந்தத்தினால் பூரித்துப் போவாளென்று அவர் நினைத்தார். நிர்மலா மிக்க ஆவலுடன் அவ் வேலையை நிர்வகித்து வந்தாள். அவள் ஒவ்வொரு தம்பிடிக்கும் கணக்கு எழுதி வைப்பாள். வருமானம் என்றைக்காவது குறைவாயிருந்தால், "இன்று ஏன் குறைவாக இருக்கிறது?" என்று அவரைக் கேட்பாள். வீட்டு விஷயங்களைப் பற்றிச் சதா அவரிடம் பேசுவாள். இதற்குத்தான் அவர் லாயக்கென்பது அவள் எண்ணம். அவருடைய வாயிலிருந்து ஏதாவது விளையாட்டுப் பேச்சு வந்துவிட்டதோ, அவள் முகம் வாடிவிடும்.

தன்னை வஸ்திராபரணங்களினால் அலங்கரித்துக்கொண்டு, நிலைக்கண்ணாடியின் முன்பு நின்று, தன் அழகின் எழில் நிறைந்த காந்தியைக் காணும்போதெல்லாம், நிர்மலாவின் உள்ளம் ஓர் அவா நிறைந்த எண்ணத்தால் துடிதுடிக்கும். அப்போது அவளுடைய இருதயத்தில் ஒரு ஜ்வாலை கிளர்ந்தெழும். 'இவ்வீட்டுக்குத் தீ வைத்துவிடலாமா' என்று அவள் எண்ணுவாள். தன் தாயின் மீதும், தந்தையின் மீதும், விதியின் மீதும், எல்லோரையும் விட அதிகமாக நிரபராதியான எளிய தோதாராமின் மீதும் அவளுக்குச் சினம் பொங்கியெழும். அவள் எப்போதும் இந்தத் தீயினால் எரிந்துவந்தாள். மிடுக்குள்ள படைவீரன் நடந்து சென்றாலும் செல்வானே யொழிய ஒரு கிழக்குதிரைமீது ஏற விரும்பமாட்டான். நிர்மலாவின் நிலையும் அப்படைவீரனை யொத்திருந்தது. அவள் அக்குதிரைமீதேறிப் பறக்க விரும்பினாள்; அதன் உல்லாசம் நிறைந்த மின்னல் வேகத்தைக் கண்டு ஆனந்திக்க விரும்பினாள். அது கனைப்பதனாலும், காதுகளை ஆட்டுவதனாலும் அவளுக்கு ஆனந்தம் உண்டாகுமா? குழந்தைகளுடன் சிரித்து விளையாடிப் பொழுதுபோக்கி யிருப்பாளாயின், அவள் தன் நிலைமையைச் சிறிதுநேரமாவது மறந்திருப்பாள்; அவள் மனம் சற்றுச் சாந்தம் அடைந்திருக்கும்.

ஆனால் ருக்மிணியா அவளிடம் பையன்களை அணுக விடுபவள்? அவள் ஒரு பிசாசென்றும், குழந்தைகளை விழுங்கி விடுவாளென்றும் அவள் கருதினாள்போலும்! ருக்மிணியின் சுபாவம் உலகத்துக்கே மாறானது. அவள் எதனால் சந்தோஷம் அடைகிறாள், எதனால் கோபம் கொள்ளுகிறாள் என்பதைக் கண்டு பிடிப்பது கஷ்டம். எந்த விஷயத்தைக் கண்டு அவள் ஒரு தடவை மகிழ்வாளோ, அதையே மறுமுறை காணும்போது சீறி விழுவாள்.

நிர்மலா தன் அறையில் உட்கார்ந்திருந்தால், "எங்கிருந்து வந்தாளோ மூதேவி!" என்பாள். அவள் மாடிக்குச் சென்றாலும் வேலைக்காரிகளிடம் பேச்சுக்கொடுத்தாலும் வயிற்றில் அடித்துக் கொண்டு, "கொஞ்சங்கூட மானமே இல்லையே இவளுக்கு! மான மாவது ஆகாசமாவது! இனி இவள் நடுத்தெருவில் கூத்தாடும் போதல்லவா இருக்கிறது!" என்பாள். வக்கீல் நிர்மலாவிடம் பணம் கொடுக்க ஆரம்பித்தது முதல், ருக்மிணி அவளைப்பற்றிக் குறைகள் கூறுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தாள். இனிப் பிரளய காலம் வர வெகு நாட்கள் இல்லையென்பது அவள் தீர்மானம். பையன்களுக்கு அடிக்கடி பணம் வேண்டியிருக்கும். தான் யஜமானி யாய் இருந்தவரையில் அவர்களைச் சாக்குப் போக்குகள் சொல்லி அனுப்பிவிடுவாள். ஆனால் இப்போதோ அவர்களை நேரே நிர்மலா விடம் அனுப்பிவந்தாள். பையன்களின் இந்தப் பணப் பைத்தியம் நிர்மலாவுக்குப் பிடிக்கவில்லை. சில சமயங்களில் பணம் கொடுக்க மாட்டேனென்று சொல்லிவிடுவாள். ருக்மிணிக்குத் தன் சொல் லம்புகளைத் தொடுக்கத் தருணம் வாய்த்துவிடும். "அவள் யஜமானி ஆகிவிட்டாளல்லவா? இனி இந்தப் பையன்கள் பிழைப்பதேது? தாயில்லாப் பிள்ளைகளைக் கேட்பாரார்? ரூபாய்க்கணக்காக மிட்டாய்கள் சாப்பிட்டுவந்தவர்கள் இன்று ஒரு தம்பிடிக்கும் வழியில்லாமல் அலைகிறார்கள், பாவம்!" என்பாள். என்றைக்காவது நிர்மலா கோபத்துடன் அவளைக் கேட்காமலே பணம் கொடுத்து விட்டாலோ, வேறு விதமான மதிப்புரை வெளிவரும். "இவளுக் கென்ன? பிள்ளைகள் பிழைத்தாலென்ன, செத்தாலென்ன? அதைப் பற்றி இவளுக்கு என்ன அக்கரை? 'அப்பா! மிட்டாய் நிறையச் சாப்பிடக்கூடாது' என்று தாயைத் தவிர வேறு யார்தான் பையன்களுக்குச் சொல்வார்கள்? ஏதாவது வந்தால் நாளைக்கு என் தலையில்தான் விடியும்! அவளை யார் கேட்கப் போகிறார்கள்?" என்பதே அம்மதிப்புரை.

இவ்வளவுடன் இருந்திருந்தாலும், நிர்மலா பொறுத்திருப் பாள். ஆனால் இதுவும் தவிர, ருக்மிணி ஸி. ஐ. டி. போலீஸ்கார னைப்போல் எப்போதும் தன்னைக் கண்காணித்து வருவதை அவ ளால் பொறுக்கமுடியவில்லை. நிர்மலா மாடியிலிருந்தால் 'கட்டா யம் யாரையோ பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாள்' என்றும், வேலைக்காரியிடம் பேசினால் 'என்னைப்பற்றித்தான் ஏதோ அவதூறு கள் பேசிக்கொண்டிருக்கிறாள்' என்றும் கடையிலிருந்து ஏதாவது வரவழைத்தால் 'அது அவளுக்கு வேண்டிய ஏதோ சிங்காரப் பொரு ளாகத்தான் இருக்கும்' என்றும் ருக்மிணி நினைப்பாள். நிர்மலா வுக்கு வரும் கடிதங்களைப் படிக்க முயலுவாள். அவள் பேச்சுக்

களை ஒளிந்து கேட்டுக்கொண்டிருப்பாள். நிர்மலா இவ்விருதலைப் பாம்பைக் கண்டு மிகவும் நடுங்கினாள்.

ஒரு நாள் அவள் தன் கணவனிடம், "தாங்கள் அக்காவுக்குச் சற்றுப் போதிக்கக்கூடாதா? அவர் ஏன் சதா என்னையே தொடர்ந்து கொண்டிருக்கவேண்டும்?" என்று கூறியும் விட்டாள்.

தோதாராம் கோபத்துடன், "ஏன்? உன்னை ஏதாவது சொன்னாளா?" என்று கேட்டார்.

"தினமுந்தான் சொல்லுகிறார். வாயைத் திறப்பதே ஆபத்தாய் முடிகிறது. இவள் ஏன் யஜமானியா யிருக்கவேண்டுமென்ற எரிச்சல் அவருக்கிருந்தால், நீங்கள் பணத்தை அவரிடமே கொடுத்துவிடுங்கள். எனக்கு இந்தப் பணமே வேண்டாம். அவரே யஜமானியாய் இருக்கட்டும். என்னை யாரும் ஒன்றும் வையாமல் திட்டாமல் இருந்தால் போதும்."

இதைச் சொல்லும்போதே நிர்மலாவின் கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாகப் பெருகியது. தோதாராமுக்குத் தம் காதலைக் காட்ட இது மிக்க நல்ல தருணமாயிருந்தது. "நான் இன்றே அவளை விசாரிக்கிறேன். 'வாயை மூடிக்கொண்டு இருப்பதானால் இரு; இல்லாவிட்டால் வீட்டைவிட்டு நட' என்று தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். வீட்டுக்கு யஜமானி அவளல்ல; நீதான். அவள் உனக்கு உதவி செய்யத்தான் இருக்கிறாள். உதவி செய்வதற்குப்பதிலாக உனக்கு உபத்திரவம் விளைவிப்பதாயிருந்தால், அவள் இங்கே இருக்கவேண்டிய அவசியமே யில்லை. 'ஐயோ பாவம்! விதவை, அனாதை! ஆழாக்கு அரிசி சாப்பிட்டுவிட்டு விழுந்து கிடப்பாள். வேலைக்காரர்களெல்லாம் சாப்பிட்டுவிட்டுப் போகும்போது, நம் அக்கா, இவள் தானா சாப்பிடக்கூடாது? பையன்களைச் சம்ரக்ஷணை செய்வதற்கும் ஒருவர் வேண்டியிருக்கிறதே' என்று யோசித்து அவளை இங்கு இருக்கச் செய்தேன். ஆனால் அவள் உன்மீது அதிகாரம் செலுத்தவேண்டுமென்பது அதன் அர்த்தமல்ல" என்றார் அவர்.

நிர்மலா மீண்டும், "சிற்றன்னையிடம் போய்ப் பணம் கேளுங்கள், இது, அது என்று எத்தனையோ விஷயங்கள் பையன்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறார். அவர்கள் வந்து என் பிராணனை வாங்குகிறார்கள். ஒரு மணிகாலம் படுத்திருக்கக்கூட முடிவதில்லை. அவர்களை மிரட்டினாலோ, அவர் ரௌத்திராகாரமாய் ஓடிவருகிறார். நான் குழந்தைகளைக் கண்டு பொறாமைப்படுவதாக நினைக்கிறார். எனக்கு அவர்கள் மீது இருக்கும் அன்பு கடவுளுக்குத்தான் தெரியும். அவர்களும் என் குழந்தைகள் தாமே? அவர்களைக் கண்டு எனக்கு ஏன் எரிச்சலுண்டாகப்போகிறது?" என்றாள்.

தோதாராம் சினத்தினால் துடித்தார்; "உன்னை எந்தப் பையன் தொந்தரவு படுத்தினாலும் அவனை நன்றாய் அடித்துவிடு. பையன்களெல்லாம் வரவரச் சோதாக்கள் ஆகிவருவதை நானுந் தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். மன்ஸாராமை நான் 'போர்டிங் ஹவுஸ்'க்கு அனுப்பிவிடுகிறேன். மற்ற இருவரையும் இன்றே சரிப்படுத்திவிடுகிறேன்" என மொழிந்தார் அவர்.

அப்போது தோதாராமுக்குக் கச்சேரிக்குச் செல்லும் நேரமாகிவிட்டது. பையன்களை மிரட்ட ஒழிவில்லை. ஆனால் அவர் கோர்ட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவந்தவுடனே ருக்மிணியைப் பார்த்து, "என்ன அக்கா, உனக்கு இந்த வீட்டில் இருக்க இஷ்டமா, இல்லையா? இருப்பதானால் சாந்தமாய் இரு. மற்றொருவர் வசிப்பது கஷ்டமாயிருக்கும்படி இதென்ன உபத்திரவம் செய்கிறாய்?" என்றார்.

இது யாருடைய வேலைத்தனமென்பது ருக்மிணிக்குத் தெரியும். ஆனால் அவள் இதற்கெல்லாம் பயப்படுபவளல்ல. அவள் வயதில் பெரியவள்; அதுவுமல்லாமல் அந்த வீட்டில் வேலை செய்தே தன் வாழ்நாளைக் கழித்துவிட்டவள். அவளுடைய அதிகாரத்தில் குறுக்கிட யாருக்குத்தான் உரிமையுண்டு? தம்பியின் இந்த அற்பத்தனத்தைக் கண்டு அவளுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. "அப்படியானால் என்னை என்ன வேலைக்காரியாக இருக்கச் சொல்லுகிறாயா? வேலைக்காரியாக இருக்கவேண்டி வந்தாலும், இந்த வீட்டு வேலைக்காரியாய் இருக்கமாட்டேன். 'வீட்டுக்கு யாராவது நெருப்பு வைத்தாலும் நான் சும்மா நின்றுகொண்டு பார்க்கவேண்டும்; யாராவது வழியல்லாத வழியிற் சென்றாலும் நான் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்' என்று நீ விரும்பினையானால், அது முடியாத சமாசாரம். அப்படி என்ன நடந்துவிட்டது, நீ உன்னையும் மீறிப் பேசும்படி? எங்கேதான் போயிற்றோ உன் புத்தி? நேற்றைச் சிறுக்கி, உன் குடுமியைப் பிடித்து ஆட்டிவைக்கிறாள். ஒன்றும் கேட்பதா, புடைப்பதா வேண்டாம். அவள் ஒரு கம்பி இழுத்துவிட்டால் போதும்; நீ மரச் சிப்பாய்மாதிரி கத்தியை உருவிக்கொண்டு வந்துவிடுவாய்!" என்றாள் அவள்.

**தோதாராம்:** நீ எப்போதும் ஏதாவது குற்றங்குறைகள் கூறிக்கொண்டே இருக்கிறாயாம். ஒவ்வொன்றுக்கும் ஏதாவது சொல்லுகிறாயாம். ஏதாவது கற்றுக்கொடுக்கவேண்டியிருந்தால் அன்புடன் இனிய சொற்களில் பேசக்கூடாதோ? வீணைகப் பழித்தால் பயிற்சி உண்டாவதற்குப் பதிலாக மனம் எரியத்தான் எரியும்.

**ருக்மிணி:** அப்படியானால் நான் எதற்கும் பேசக்கூடாதென்பது உன் எண்ணம்போல் இருக்கிறது! சரி, அப்படித்தான்

இருக்கட்டுமே! ஆனால், 'நீ வீட்டிலேயே இருந்தாயே; ஏதாவது புத்திமதி சொல்லக்கூடாதா?' என்று நீ மறுபடியும் கேட்கக் கூடாது. என் வார்த்தைகள் விஷமாகப் படும்போது எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது, அவளுடன் பேச? நானுந்தான் பார்க்கிறேனே, உன் மனைவி எவ்வளவு நன்றாகக் குடித்தனம் செய்கிறாளென்பதை!

இதற்குள் ஸியாராமும் ஜியாராமும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட்டார்கள். வந்தவுடனே இருவரும் நேராக அத்தையிடம் சென்று சாப்பிடக் கேட்டார்கள். "போய் உங்கள் புது அம்மா வைக் கேளுங்கள். ஒன்றுமே பேசக்கூடாதென்று எனக்கு உத்தரவு" என்று பதிலுரைத்தாள் ருக்மிணி.

தோதாராம்: நீங்கள் அவள் அறையில் காலை வைத்தால், இனி உங்கள் காலை ஒடித்துவிடுவேன். துஷ்டத்தனத்தில் இறங்கிவிட்டீர் கள் போலிருக்கிறது!

ஜியாராம் சற்றுத் துடுக்கான பையன்; "அப்பா, நீங்கள் சிற்றன்னையை ஒன்றும் சொல்வதில்லை. எங்களைத்தான் மிரட்டு வீர்கள். எப்போதும் அவள் எங்களுக்குப் பணமே கொடுப்ப தில்லை" என்றான் அவன்.

ஸியாராம் இந்தப் பேச்சை ஆமோதித்துக்கொண்டே, "உபத்திரவப்படுத்தினால் காதை அறுத்துவிடுவேன் என்கிறாள் சிற் றன்னை. இல்லையா ஜியா?" என்றான்.

நிர்மலா தன் அறையிலிருந்தே, "நான் எப்போதடா உன் காதை அறுத்துவிடுவதாகச் சொன்னேன்? இப்போதிருந்தே புளுக ஆரம்பித்துவிட்டாயா?" என்றாள்.

இதைக் கேட்டதுதான் தாமதம்; தோதாராம் ஸியாராமின் இரு காதுகளையும் பிடித்து அவனை உயரத் தூக்கினார். பையன் வீரிட்டு உரக்கக் கத்தி அழ ஆரம்பித்தான்.

ருக்மிணி ஓடிப்போய்ப் பையனை முன்ஷீயின் கைகளிலிருந்து விடுவித்து, "போதும், நிறுத்து! பையனைக் கொன்று விடுகிறாயா? ஐயையோ! காதுகள் சிவந்து போய்விட்டனவே! இல்லாமலா பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள்: புதுப் பெண்டாட்டியை மணந்தவுடனே மனிதன் குருடனாகி விடுவானென்று? இப்போதே இவ்வளவு ரகளை யானால், இனி என்ன நடக்குமோ, ஈசனுக்குத் தான் வெளிச்சம்!" என்றாள்.

நிர்மலா தன் வெற்றியைக் கண்டு மனத்திலேயே சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் முன்ஷீஜீ பையன் காதைப் பிடித்துத் தூக்கியபோது அவளால் சகிக்க முடியவில்லை. அவனை

விடுவிக்க ஓடினாள். அவளுக்கு முன்பே ருக்மிணி அங்கே போய்ச் சேர்ந்துவிட்டாள். அவள் நிர்மலாவைப் பார்த்து, "முதலில் தீ வைத்துவிட்டு இப்போது அணைக்க ஓடி வருகிறாயே? உன் பிள்ளைகளாயிருந்தால் உனக்குப் பரிவு இருக்கும். அயலாருடைய கஷ்டம் உனக்கு எப்படித் தெரியப் போகிறது?" என்றாள்.

நிர்மலா: அவர்கள்தான் இதோ நின்று கொண்டிருக்கிறார்களே? கேட்டுக்கொள்ளுங்கள், நான் என்ன தீ வைத்தேனென்று? 'பையன்கள் அடிக்கடி என்னைப் பணத்துக்காகத் தொந்தரவு செய்கிறார்கள்' என்றுதான் நான் சொன்னேன். இது தவிர நான் ஏதாவது சொல்லியிருந்தால், என் கண்கள் அவிந்து போகட்டும்.

தோதாராம்: நானேதான் இந்தப் பையன்களின் துஷ்டத்தனத்தைப் பார்த்து வருகிறேனே! நான் என்ன குருடனா? மூவருக்கும் பிடிவாதமும் துஷ்டத்தனமும் படிந்து விட்டன. பெரியவனை இன்றே 'ஹாஸ்டல்'லுக்கு அனுப்பிவிடுகிறேன்.

ருக்மிணி: இதுவரையில் இவர்களுடைய ஒரு துஷ்டத்தனமும் உன் கண்களில் படவில்லை. இன்று திடீரென்று உன் கண்கள் இவ்வளவு கூர்மையாகி விடுவானேன்?

தோதாராம்: நீ இடம் கொடுத்துத்தான் இவர்களுக்கு இத்தனை துடுக்குத்தனம் வந்துவிட்டது!

ருக்மிணி: ஆமாம்; நான்தான் விஷப்பூண்டு. என்னால்தான் உன் வீடு நாசமாய் விட்டது. சரி, இதோ நான் போகிறேன். உன் பிள்ளைகளை நீ கொன்றால் கொல்லு, அடித்தால் அடி; நான் ஒன்றும் பேசவில்லை.

இவ்விதம் சொல்லிவிட்டு அவள் அங்கிருந்து போய்விட்டாள். குழந்தை அழுவதைக் கண்டு நிர்மலாவின் மனம் கரைந்துவிட்டது. அவள் அவனை மார்போடணைத்து மடியில் எடுத்துக்கொண்டு, அறையில் வந்து முத்தமிடத் தொடங்கினாள். பையனோ பின்னும் அதிகமாகத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். அவனது பேதை யுள்ளத்துக்கு இந்த அன்பிலே, தெய்வமே வஞ்சித்துவிட்ட அந்தத் தாயின் அன்பு கிடைக்கவில்லை. இது தாயின் வாத்ஸல்யமல்ல; வெறும் தயை. இந்தப் பொருளின்மீது அவனுக்கு ஓர் உரிமையும் இல்லை. இது அவனுக்கு இடப்பட்ட வெறும் பிச்சை. அவன் தாய் உயிருடன் இருந்தபோது, இதற்கு முன்புகூட இரண்டொரு தடவை அவன் தந்தையிடம் அடி பட்டிருக்கிறான். ஆனால் அப்போது அவனுடைய தாய் அவனை மார்புடன் அணைத்துக்கொண்டு அழவில்லை. அவள் அதிருப்தியடைந்து அவனுடன் பேசுவதை நிறுத்தி விடுவாள். பிறகு கொஞ்ச நேரம்

பொறுத்து எல்லாவற்றையும் மறந்து அவன் மீண்டும் அவளிடம் ஓடிப்போவான். துஷ்டத்தனத்துக்குத் தண்டனை கிடைக்குமென்பது அவனுக்குத் தெரியும்; அடிபட்ட பின்பு முத்தமிடப் பெறுவதை அவன் அறியான். தாயின் அன்பில் கடுமை உண்டு; அது மென்மை கலந்தது. இந்த அன்பில் கருணை இருந்தது; ஆனால் பரிவின் ரகசியச் செய்தியாகிய அந்தக் கடுமை இல்லை. ஆரோக்கியமுள்ள அவயவத்தைப் பற்றி யார்தான் கவலைப் படுவார்கள்? ஆனால் அதே அங்கம் வேதனையினால் துடிக்கும் போது அதன்மீது அடியும் மோதுதலும் படாவண்ணம் காக்க முயலுகிறார்களல்லவா?

நிர்மலாவின் கருணை நிரம்பிய அழுகை, தான் அனாதை யென்பதை அந்தப் பாலகனுக்கு அறிவித்தது. அவன் வெகு நேரம் வரையில் நிர்மலாவின் மடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான்; பிறகு அப்படியே தூங்கிப்போய் விட்டான். நிர்மலா அவனைக் கட்டிலில் விட விரும்பியபோது, அவன் விழித்துக்கொண்டு தன் இரு தாமரைக் கைகளையும் அவள் கழுத்தில் போட்டுக்கொண்டு, கீழே ஏதோ ஒரு பள்ளமிருப்பது போல, அவளோடு ஒட்டிக்கொண்டுவிட்டான். சங்கையினாலும் பயத்தினாலும் அவன் முகம் மாறிவிட்டது. நிர்மலா மறுபடியும் அவனை மடியில் விட்டுக்கொண்டாள்; கட்டிலில் விட அவளால் முடியவில்லை. பாலகனைத் தன் மடியில் கிடத்திக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவளுக்கு என்றுமில்லா ஆனந்தம் உண்டாயிற்று. அன்றுதான் முதல் தடவையாகக் கண்களைத் திறப்பதற்கும், கடமையின் வழியைக் காட்டுவதற்கும் இன்றியமையாததான ஓர் ஆத்மவேதனை அவளுக்கு உண்டாயிற்று; அந்த வழி அப்போது தான் அவளுக்குப் புலப்பட்டது.

---

## அத்தியாயம் 6
## பெண்மையின் தவிப்பு

அன்று தன் அளவிலாக் காதலை நிரூபித்துவிட்டபின்பு, முன்ஷீ தோதாராமுக்கு, நிர்மலாவின் அந்தரங்கத்தில் இனி நமது அதிகாரம் செல்லுமென்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அது சற்றும் நிறைவேறவில்லை. இதற்கு முன்பு அவள் சிறிது நேரமாவது அவருடன் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பாள்; இப்போதோ குழந்தைகளைப் பராமரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் விட்டாள். அவர் வீட்டிற்குள் போகும்போதெல்லாம் நிர்மலா குழந்தைகளிடம் உட்கார்ந்திருப்பதைக் காண்பார். சில சமயங்

களில் அவள் அவர்களுக்கு உணவு ஊட்டிக்கொண்டிருப்பாள்; சில சமயம் துணி உடுத்துவாள்; சில சமயம் அவர்களோடு விளையாடிக் கொண்டிருப்பாள்; பின்னும் சில சமயம் அவர்களுக்குக் கதைகள் சொல்லிக்கொண்டிருப்பாள். நிர்மலாவின் வேட்கை மிகுந்த உள்ளம் காதலினால் ஏமாற்றமடைந்து இந்தப் பிடிப்பையே பெரிதாக எண்ணியது. குழந்தைகளோடு சிரித்து விளையாடும்போது அவள் தாயாகப் பாவித்துக்கொண்டு மகிழ்ச்சியுறுவாள். கணவனுடன் சிரிப்பதிலும் பேசுவதிலும் அவளுக்குச் சங்கோசமும், வெறுப்பும், விருப்பமின்மையும் ஏற்பட்டிருந்தன. ஒவ்வொரு சமயம் அவள் அங்கிருந்து ஓடிவிடலாமென்று கூடக் கருதினாள். அதற்குப் பதிலாகக் குழந்தைகளின் உண்மையான எளிய அன்பு அவளுடைய மனத்துக்குத் திருப்தியளித்தது.

முன்பு மன்ஸாராம் அவளிடம் வரச் சங்கோசப்பட்டான். இப்போதோ அவன்கூட எப்போதாவது வந்து உட்காருவான். நிர்மலாவின் வயதுதான் அவனுக்கும்; ஆனால் மனமலர்ச்சியில் அவன் ஐந்து வயது சிறியவன். ஹாக்கியும் புட்பாலுந்தான் அவனுடைய உலகம்; அவனுடைய எண்ணங்களின் பச்சைப் பசேலென்ற தோட்டம். அவன் ஒற்றைநாடியானவன்; மேனி மினுப்புள்ளவன்; அழகிய சிரித்த முகமும், வெட்கப்படும் சுபாவமும் வாய்ந்த பையன். வீட்டுச்கும் அவனுக்கும் வெறும் சோற்றுச் சம்பந்தந்தான். மீதி நாள் முழுதும் எங்கே திரிவானோ, யாருக்குத் தெரியும்? நிர்மலா அவனுடைய விளையாட்டுவார்த்தைகளைக் கேட்டவுடனே தன் கவலைகளை மறந்து விடுவாள். தான் பொம்மை விளையாட்டு ஆடிக்கொண்டு, அவைகளுக்குக் கல்யாணம் செய்துவந்த அந்தத் தினம் மறுபடியும் வந்து விடாதா என்று அவள் நினைப்பாள். அந்தத் தினம் போய், ஆஹா, கொஞ்ச நாட்கள்தானே கடந்திருக்கின்றன!

முன்ஷீ தோதாராம் மற்ற ஏகாந்த வாசிகளைப் போலவே சிற்றின்பப் பிரியரான ஆசாமி. சில நாட்கள் வரையில் அவர் நிர்மலாவுக்கு வேடிக்கை விளையாட்டுக்கள் காட்டிவந்தார். ஆனால் அதனால் ஒன்றும் பயன் கிடைக்காமற் போகவே, மறுபடியும் ஏகாந்தத்தில் புலன்களை அடக்க ஆரம்பித்தார். நாள் முழுதும் கடினமான மன உழைப்புக்குப் பின்பு, அவர் மனம் இன்பமுற ஏங்கியது. ஆனால் தமது சிங்காரச் சோலையிற் புகுந்தவுடனே, அதன் மலர்கள் வாடியதையும், செடிகள் உலர்ந்ததையும், பாத்திகளில் தூசு பறப்பதையும் கண்டு அவர் மனம், 'இந்தச் சோலையை ஏன் பாழாக்கிவிடலாகாது?' என்று வினவும். நிர்மலா ஏன் தம்மிடம் வெறுப்புற்று இருக்கிறாள் என்னும் ரகசியம் அவருக்குப் புரிய

வில்லை. தம்பதி சாஸ்திரங்களின் எல்லா மந்திரங்களையும் பரீக்ஷை செய்து பார்த்தபின்பும் அவரது மனோரதம் ஈடேறவில்லை. இனி என்ன செய்யவேண்டுமென்று அவருக்குத் தோன்றவில்லை.

ஒரு நாள் அவர் இதே கவலையாக உட்கார்ந்திருந்தபோது அவருடைய சினேகிதர் நயனஸுகராம் அங்கு வந்து சேர்ந்தார். குசலப் பிரச்னத்துக்குப் பின், அவர் சிரித்துக் கொண்டே, "இப்போதெல்லாம் உன் பாடு யோகந்தான்! புதிய மனைவியின் ஆலிங்கனத்தில் உனக்கு யௌவனசுகம் கிடைத்துக் கொண்டிருக்கும். நீ பெரிய பாக்கியசாலி! இழந்த இளமையைத் திரும்பப் பெறுவதற்கு, தம்பி, மறுமணத்தைத் தவிர வேறு உபாயம் இல்லை. இங்கே எனக்கோ வாழ்க்கையே விபத்தாய் இருக்கிறது. என் மனைவியோ என்னோடு நன்றாக ஒட்டிக்கொண்டு என்னை விட்டுத் தொலைக்கமாட்டாள் போலிருக்கிறது! நானும் மறுமணம் புரிந்துகொள்ள யோசனை செய்துகொண்டிருக்கிறேன். ஏதாவது இடமிருந்தால் நிச்சயம் செய்துவிடு. பதிலுக்கு ஒரு நாளைக்கு அவள் கையால் மடித்த வெற்றிலையை உனக்குப் பரிசாகக் கொடுத்துவிடுகிறேன்" என்றார்.

தோதாராம் கம்பீரமாகச் சொல்லத் தொடங்கினர்: "அந்த மாதிரி முட்டாள்தனமான காரியம் செய்துவிடாதே. பின்பு பச்சாத்தாபப்படுவாய். இந்தச் சிறுக்கிகள் சில சிறுவர்களிடந் தான் திருப்தியடைகிறார்கள். நீயும் நானும் அதற்கு லாயக்கல்ல. நான் உண்மையைச் சொல்லுகிறேன்: கல்யாணம் செய்துகொண்டு இப்போது நான் வருத்தப்படுகிறேன். இல்லாத சங்கடமெல்லாம் எனக்கு வந்து சேர்ந்தது. இன்னும் இரண்டு மூன்று வருஷங்கள் வாழ்க்கையின் சுகத்தை அனுபவிக்கலாமென்று எண்ணியிருந்தேன். ஆனால், நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது!"

நயனஸுகராம்: இதென்ன இப்படிப் பேசுகிறாயே? சிறுக்கிகளை வசப்படுத்துவது பிரமாதமான காரியமா? கொஞ்சம் வேடிக்கை விளையாட்டுக்கள் காண்பித்துவிட்டால், அவர்களது வடிவையும் அழகையும் புகழ்ந்துவிட்டால் போதுமே. அப்புறம் நீ இட்டது தான் சட்டம்!

தோதாராம்: அதெல்லாம் செய்து தோற்றாயிற்று.

நயனஸுகராம்: அப்படியா! கொஞ்சம் அத்தர், வாசனைத் தைலம், பூ, தின்பண்டங்கள் முதலியனவெல்லாம் கொடுத்துப் பார்த்தாயா?

தோதாராம்: என்ன ஐயா! அதெல்லாம் பார்த்தாகி விட்டது. தம்பதி சாஸ்திரத்தின் எல்லா மந்திரங்களையும் பரீட்சை பார்த்தாகிவிட்டது. எல்லாம் வெறும் 'ஹம்பக்.'

நயனஸுகராம்: சரி, அப்போது நான் சொல்வதைக் கேள். சற்று உன் வடிவத்தை மாற்றிக்கொள். கொஞ்ச நாட்களாய் இங்கு ஒரு மின்சார டாக்டர் வந்திருக்கிறார். அவர் முன்பின் அடையாளங்கள் முழுவதையும் போக்கிவிடுகிறார். முகத்தில் ஒரு சுருங்கலோ, தலையில் ஒரு நரைமயிரோ பின்பு இருந்தால் பார்! அவர் அப்படி என்னதான் செய்கிறாரோ, மனிதனின் உருவே மாறிவிடுகிறது!

தோதாராம்: பீஸ் எவ்வளவு வாங்குகிறார்?

நயனஸுகராம்: பீஸ் நிறைய வாங்குகிறாரென்று கேள்வி; ஐந்நூறு ரூபாயோ என்னவோ வாங்குவதாகத் தெரிகிறது.

தோதாராம்: அடே, எவனாவது ஏமாற்றும் பேர்வழியாயிருப் பான்; முட்டாள்களைக் கொள்ளையடிப்பவனாயிருப்பான். ஏதாவது பாலிஷ் போட்டு மூன்று நாளைக்கு முகத்தை வசீகர மாக்கிவிடு வான். விளம்பர டாக்டர்களையெல்லாம் நான் நம்புவதே இல்லை. ஐந்து அல்லது பத்து ரூபாயானாலும் போனால் போகிறதென்னலாம். ஐந்நூறு ரூபாய் என்ன சாமானியமா?

நயனஸுகராம்: அடே, உனக்கு ஐந்நூறு ரூபாய் என்னடா பிரமாதம்? ஒரு மாதத்து வரும்படி. என்னிடம் ஐந்நூறு ரூபாய் இருக்குமானால், தம்பீ, நான் முதல் வேலையாக இதைத்தான் செய்வேன். இளமையின் ஒரு மணிகாலத்துக்குள்ள விலை ஐந்நூற்றைவிட எவ்வளவோ அதிகமாயிற்றே!

தோதாராம்: அது போகட்டுமடா! ஏதாவது மலிவான உபாயம் சொல்லு. செலவும் குறைவாயிருக்கவேண்டும்; நல்ல பயனும் கிடைக்கவேண்டும். மின்சாரமும் ரேடியமும் பெரிய மனிதர்களுக்கே இருக்கட்டும்! அவர்களுக்குத்தான் அது தகும்!

நயனஸுகராம்: அப்படியானால் நீ கொஞ்சம் ஷோக் பேர்வழி யாக வேஷம் போடு. இந்தத் தளர்ந்த கோட்டைத் தூர வீசி யெறி. பிடிப்பான வில்க் ஷர்ட்டும், கெட்டியான நிஜாரும், கழுத்தில் தங்கச் சங்கிலியும், தலையில் ஜயப்பூர்ப் பாகையும் அணிந்துகொண்டு, கண்களில் 'ஸுர்மா' (குளிர்ந்த மை)வும், கூந்தலில் 'ஹினு'த்தைலமும் போட்டுக்கொள். வயிறும் கரைய வேண்டியது அவசியம். இரட்டை பெல்ட்டை இறக்கிக் கட்டு. கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் அதுதான் உன்னை அழகுபடுத்தும். நரைமயிர் கறுக்கும் தைலம் நான் உனக்குக் கொண்டுவந்து தருகிறேன். ஐம்பது நூறு 'கஜல்'கள் உருப் போட்டுவிடு. தருணம் வாய்த்தபோதெல்லாம் பாட்டுக்கள் பாடு. உன் பேச்சுக்களில் சுவை நிரம்பியிருக்கவேண்டும். உனக்கு

உலகத்தைப்பற்றியும் மதவிஷயங்களைப்பற்றியும் கவலையே இல்லை யென்றும், உனக்கு இருப்பதெல்லாம் உன் காதலி ஒருத்திதா னென்றும் தோன்றவேண்டும். ஆண்மையும் சாகசமும் நிறைந்த வேலைகள் செய்யத் தருணம் கிட்டுமாவென்று தேடிக்கொண்டே இரு. இரவில் சும்மாவாவது, 'திருடன்! திருடன்!' என்று கூச்சலிட்டுவிட்டுக் கத்தியை எடுத்துக்கொண்டு தன்னந்தனியாக ஓடு. ஆம்! சமயம் பார்த்துச் செல். உண்மையாகவே திருடன் வந்துவிடும் சமயத்தில் நீ அந்தமாதிரிக் கிளம்பிவிடப் போகிறாய்! ஜாக்கிரதை! இல்லையெனில், உன் ரகசியமெல்லாம் அம்பலமாகி விடும். அந்த மாதிரியான சமயம் வாய்த்தாலும், திருடன் வந்ததே உனக்குத் தெரியாததுபோலச் சும்மா நின்றுகொண் டிருப்பதில்தான் உன் ஆண்மை இருக்கிறது. ஆனால் அவன் ஓடிப்போனதும், நீ எழும்பிக் குதித்துக் கத்தியைக் கையிலேந்திக் கொண்டு வெளிக்கிளம்பி, 'எங்கே? எங்கே?' என்று கூவிக் கொண்டே ஓடவேண்டும். அதிகம் வேண்டாம்; ஒருமாதகாலம் நான் சொல்லுவதைப் பரீட்சை செய்து பார். நீ வெற்றி பெறு விட்டால், என்னை எவ்வளவு அபராதம் கொடுக்கச் சொன்னாலும், கொடுக்கத் தயார்!

வியவகார நிபுணனை ஒரு மனிதன் செய்யவேண்டியது போலவே, தோதாராம் அச்சமயம் அவ்வார்த்தைகளை ஒரு மழுப் புச் சிரிப்பில் தட்டிவிட்டார். ஆனால் அவைகளிற் சில விஷயங்கள் அவர் மனத்தில் பதிந்துவிட்டன. அவை பயன்படுமென்பதில் அவருக்குக் கொஞ்சமும் சந்தேகமேயில்லை. யாவரும் சந்தேகிக்க இடமில்லாதபடி நாளடைவில் அவர் தம் பழக்க வழக்கங்களை மாற்ற ஆரம்பித்தார். முதலில் தலைமயிரில் ஆரம்பித்தார்; பிறகு 'மையி'ன் முறை வந்தது. இப்படியாக ஒரு மாதத்துக்குள் அவருடைய மேனியே மாறிவிட்டது. 'கஜல்'களை உருப்போடுவது சம்பந்தமான யோசனை நகைப்புக்கிடமானதாயிருந்ததால் அதை விடவேண்டியதாயிற்று. ஆனாலும் தமது வீரத்தன்மையைப் பற்றி வீறுப்புப் பேசிக்கொள்வதில் அவருக்கு ஒன்றும் நஷ்டம் இருப்பதாகத் தோன்றவில்லை.

அன்றைத்தினத்திலிருந்து அவர் தினந்தோறும் தமது ஆண் மையை அறிவிக்கும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியை வர்ணிக்கலானார். ஒரு வேளை அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று கூட நிர்மலாவுக்கு ஐயமுண்டாயிற்று. கொஞ்சம் பயற்றம் பருப்பும், இரண்டு பருமனான ரொட்டிகளும் தின்னும் ஒரு மனிதன், 'என் முன் வீராதிவீரனான ஸுலேமான் எம்மாத்திரம்?' என்று கூறுவா னானால் அவனுடைய ஆண்மை பைத்தியத்தனத்தைத் தவிர

வேறில்லையென்று சங்கிப்பதில் ஆச்சரியம் என்ன? இந்தப் பைத்தியத்தினால் நிர்மலாவிடம் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் அதன் பயனாக அவளுக்கு அவர்மீது இரக்கம் பிறந்தது; சினமும் வெறுப்பும் பறந்துபோயின. சுயபுத்தியோடிருப்பவன் மீதல்லவா சினமும் வெறுப்பும் தோன்றும்? பைத்தியக்காரன் இரக்கத்துக்குத் தான் பாத்திரனாவான். ஜனங்கள் பைத்தியங்களிடம் நடந்துகொள்வது போலவே, அவள் அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் வேடிக்கையாகப் பதில் சொல்லுவாள்; அவரைப் பரிகாசம் செய்வாள். ஆனால் அது அவருக்கு விளங்காதபடி அவள் நடந்துகொண்டாள். 'ஐயோ பாவம்! தமது பாவத்துக்கு இவர் இப்படிப் பிராயச்சித்தம் செய்கிறார். நான் என் துன்பத்தை மறந்துவிடவேண்டுமென்பதற்காகத்தானே இந்த வேஷமெல்லாம்? இனி என் தலைவிதி என்னவோ மாறப்போவதில்லை. பாவம்! இவர்மீது ஏன் கோபித்துக் கொள்ளவேண்டும்?' என்று அவள் நினைப்பாள்.

ஒருநாள் இரவு ஒன்பது மணிச்கு, தோதாராம் பெரிய பயில்வான் மாதிரி ஊர் சுற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்தார். வந்தவுடனே அவர் நிர்மலாவை நோக்கிப் பின்வருமாறு சொல்லிக்கொண்டே போனார்:—

"இன்று மூன்று திருடர்களை எதிர்க்கவேண்டியதாயிற்று. சற்றுத் தொலைவில் சிவபூர்ப் பக்கமாகப் போய்விட்டேன். இருட்டிவிட்டது. ரெயில் ரோட்டுக்குப் பக்கத்தில் போய்க்கொண்டிருந்த போது, எங்கிருந்தோ மூன்றுபேர் கையில் கத்தியுடன் வந்து நின்றார்கள். நீ என்னை நம்பினால் நம்பு; இல்லாவிட்டால் போ. மூவரும் சாக்ஷாத் யமதேவர்கள்தாம். நானோ தன்னந்தனியன்; என் கையில் இந்தப் பிரம்பு ஒன்றுதான் ஆயுதம். எதிரே மூன்று தடியர்கள் உருவிய கத்திகளுடன் நிற்கிறார்கள். ஒரு க்ஷணம் பிரமித்துப்போய்விட்டேன். 'அவ்வளவுதான் உலகில் வாழக்கொடுத்து வைத்தது!' என்று நினைத்தேன். ஆனாலும் சாகுந் தறுவாயில் ஏன் வீரச்சாவாகச் சாகலாகாது என்று துணிந்து விட்டேன். இதற்குள் ஒருவன், 'உன்னிடம் இருப்பதை வாயைத் திறக்காமல் வைத்துவிட்டு ஓடிப்போ!' என்று கர்ஜித்தான்.

"நான் பிரம்பைச் சமாளித்துக்கொண்டு, 'என்னிடம் இருப்பது இந்தப் பிரம்பு ஒன்றுதான். இதுவும் சரி, ஓர் ஆளின் தலையும் சரி' என்றேன்.

"நான் இவ்வளவு தான் சொன்னேன்; மூவரும் கத்திகளை வீசிக்கொண்டு என்மீது பாய்ந்தனர். அவர்களின் கத்திவீச்சுக்களை நான் என் பிரம்பால் தடுத்துவந்தேன். மூவரும் கோபத்

துடன் கத்திகளை வீசுவார்கள்; சடக்கென்ற ஓசையுண்டாகும். நான் மின்னலைப்போலப் பாய்ந்து அவர்களின் தாக்குதல்களைத் தடுத்துவிடுவேன். இவ்வாறு பத்து நிமிஷங்கள்வரை அவர்கள் தமது கத்திவலிமையைக் காண்பித்தார்கள். ஆனால் நான் கொஞ்சங்கூட அசையவில்லை. இத்தனைக்கும் பார்க்கப்போனால் என் கையில் கத்தியில்லை. கத்தி இருந்திருந்தால் ஒருவனைக்கூட உயிரோடு விட்டிருக்கமாட்டேன். சரி, கதையைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். அந்தச் சமயம் என் கைத்திறமை பார்க்கத் தக்கதாகவே இருந்தது. இவ்வளவு சுறுசுறுப்பு நமக்கு எங்கிருந்து வந்ததென்று எனக்கே வியப்பாயிருந்தது. தமது ஜம்பம் இங்கே சாயாதென்பதைக் கண்டு மூவரும் கத்திகளை உறையிட்டு, என்னைத் தட்டிக்கொடுத்து, 'இளைஞனே! உன்போன்ற வீரனை நாங்கள் இன்றுவரையில் கண்டதேயில்லை. முந்நூறுபேர் திரண்டு வந்தால்கூட எங்கள் மூவரையும் எதிர்க்கமுடியாது. நாங்கள் பறையடித்துக்கொண்டு ஊரூராகச் சென்று கொள்ளையடிப்பவர்கள். ஆனால் இன்று நீ எங்களைத் தோல்வியுறச் செய்தாய். உனது வீரத்தை நாங்கள் மெச்சுகிறோம்' என்று கூறி மறைந்து விட்டார்கள்."

நிர்மலா வெகு கம்பீரத்துடன் சிரித்துக்கொண்டே, "இந்தப் பிரம்பில் கத்தி விழுந்த அடையாளங்கள் அப்படியானால் நிறைய இருக்குமே!" என்றாள்.

முன்ஷிஜீ இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. ஆயினும் ஏதாவது பதில் சொல்லித் தீரவேண்டுமே! "நான் கத்திவீச்சுக்களை நேராகவே தடுத்துவந்தேன். ஒன்றிரண்டு அடிகளே பிரம்பின் மேல் விழுந்தன; அவையும் நேராக விழுந்தபடியால் அதில் அடையாளம் உண்டாக ஏதுவில்லை" என்றார்.

அவர் இவ்விதம் சொல்லி வாய் மூடுவதற்குள், ருக்மிணி உள்ளேயிருந்து தெறிக்கத் தெறிக்க ஓடிவந்து பெருமூச்சு விட்டுக் கொண்டே, "தோதா! தோதா! இங்கிருக்கிறானா இல்லையா அவன்? என் அறையில் ஒரு பாம்பு வந்திருக்கிறது. என் பாயின் கீழே இருக்கிறது. நான் எழுந்து ஓடிவந்தேன். பாழாய்ப்போன பாம்பு, சுமார் இரண்டு கஜ நீளமிருக்கும். படமெடுத்துச் சீறு கிறது. சற்று வா, தடியை எடுத்துக்கொண்டு" என்றாள்.

தோதாராமின் முகக்களை பறந்துபோயிற்று; முகம் விகார மடைந்தது. ஆனால் தம் மனத்திலுள்ள எண்ணங்களை மறைத்துக் கொண்டே, "பாம்பு இங்கே எப்படி வரும்? பிரமையா உனக்கு? ஏதாவது பழுதைக் கயிறாயிருக்கும்!" என்றார் அவர்.

ருக்மிணி: அடே, நான் என் கண்ணால் பார்த்தேன்! சற்று வந்துதான் பாரேன். ஐயையே! புருஷனாய்ப் பிறந்து இப்படி நடுங்குகிறாயே.

முன்ஷிஜீ அந்த அறையை விட்டுக் கிளம்பினாரேயொழிய, தாழ்வாரத்தில் சென்றதும் மறுபடியும் தயங்கி நின்றார். அவ

ருடைய கால்கள் எழும்பவேயில்லை. மார்பு திக்குத்திக்கென்று அடித்துக்கொண்டது. பாம்பு கோபமுள்ள ஜந்து. ஒரு வேளை அது கடித்துவிட்டால் வீணாகவல்லவா பிராணனைவிட நேரிடும்! "நான் அதற்குப் பயப்படவில்லை. போயும் போயும் பாம்பு தானே! புலியா, சிங்கமா? ஆனால் பாம்பைத் தடியாலடிப்பதில் பிரயோஜனம் இல்லை. போய் யாரையாவது அனுப்புகிறேன். யார் வீட்டிலிருந்தாவது ஈட்டி கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்று கூறி விட்டு அவர் வெளியே பாய்ந்தோடினார்.

மன்ஸாராம் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தான். முன்ஷீஜீ வெளியே போய்விடவே, அவன் புசிப்பதை நிறுத்தி விட்டுத் தன் 'ஹாக்கி'த்தடியை எடுத்துக்கொண்டு அறையில் நுழைந்தான். உடனே பாயை இழுத்தான். சினம் கொண்ட பாம்பு ஓடுவதற்குப் பதிலாகச் சீறிப் படமெடுத்தது. மன்ஸாராம் சட்டென்று பாயின் மீதிருந்த துப்பட்டியை அதன்மேல் போட்டு உடனே படபடவென்று தடியால் ஓங்கி நாலைந்து தடவை அடித் தான். பாம்பு துப்பட்டிக்குள்ளேயே துடித்து இறந்துவிட்டது. அவன் அதைத் தடியிலேயே மாட்டிக்கொண்டு வெளியே தூக்கிச் சென்றான். முன்ஷீஜீ அப்போதுதான் வெளியிலிருந்து அநேகம் பேர்களை அழைத்துக்கொண்டு வந்தவர், மன்ஸாராம் பாம்பைத் தொங்கவிட்டுக்கொண்டு வருவது கண்டு கீச்சென்று கத்தினார். உடனே சமாளித்துக்கொண்டு, "நான்தான் வந்துகொண் டிருக்கிறேனே? என்ன அவ்வளவு அவசரம்? யாரிடமாவது கொடு. எறிந்துவிட்டு வருவார்கள்" என்றார்.

இதைச் சொல்லிவிட்டு அவர் மிக்க வீரத்துடன் ருக்மிணி யின் அறையின் வாயிலில் நின்றுகொண்டு அறை முழுவதையும் ஒரு முறை நோக்கினார். பிறகு மீசையை முறுக்கிக்கொண்டே நிர்மலாவைப் பார்த்து, "நான் வந்துகொண்டேயிருக்கிறேன்; அதற்குள் மன்ஸாராம் அதை அடித்துவிட்டான். அறியாத பையன், தடியை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். பாம்பை எப்போதும் ஈட்டியால்தான் குத்தவேண்டும். இதுதானே பையன் களிடமுள்ள துர்க்குணம்! நான் இப்படிப்பட்ட பாம்புகள் எத்தனையோ அடித்துப்போட்டிருக்கிறேன். எத்தனையோ பாம்பு களைக் கையாலேயே நசுக்கிவிட்டிருக்கிறேன்" என்றார்.

"போதுமே! இப்போதுதானே பார்க்கிறேன் உன் ஆண் மையை!" என்றாள் ருக்மிணி.

"சரி, சரி; நான் பயங்கொள்ளிதான். உன்னிடம் ஒன்றும் இனாம் கேட்கவில்லையே? போய்ப் பரிசாரகனை எனக்குச் சாப்பாடு கொண்டுவரச் சொல்" என்று வெட்கத்துடன் சொன்னார் அவர்.

முன்ஷீஜீ சாப்பிடச் சென்றார். நிர்மலாவோ வாயிலில் நின்றபடியே, 'ஈசுவரா! இவருக்கு என்ன நிஜமாகவே ஏதாவது பயங்கரமான நோய் வந்துவிட்டதா? ஏன் என் நிலைமையை இன்னும் கொடிதாக்க விரும்புகிறாய்? நான் இவருக்குப் பணி விடை செய்யமுடியும்; என் வாழ்க்கையை இவர் அடிகளிலே அர்ப்

பிக்கமுடியும்; ஆனால் என்னால் முடியாததை நான் எப்படிச் செய்வது? வயதை மாற்றிக்கொள்வது என் வசத்திலா இருக்கிறது? கடைசியில் இவர் என்னிடமிருந்து வேண்டுவதுதான்



என்ன? ஓஹோ! தெரிந்துவிட்டது! இது முதலிலேயே தெரியாமற் போயிற்றே! தெரிந்திருந்தால் இவர் இவ்வளவு தவம் புரியநேரிடுமா? இவ்வளவு வேஷந்தான் போட நேர்ந்திருக்குமா?' என்று எண்ணமிடலானாள்.

(தொடரும்)

——

## : அதிர்ஷ்டம் .

: "ராகோ" :

### 1

பராங்குசம் நாயுடு வெண்ட்வொர்த் அண்டு பிரதர்ஸ் என்ற வெள்ளைக்காரக் கம்பெனியில் தலைமைக் குமாஸ்தா. இருபது வருஷம் 'சர்விஸ்'. மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம். ஓர் இந்தியனுக்கு அந்தக் கம்பெனியில் கிடைக்கக்கூடிய உயர்ந்த உத்தியோகம் அதுதான். நாயுடு வேலையைச் சுறுசுறுப்பாயும் பொறுப்புடனும் செய்து முடிப்பார். பெரிய துரையின் நோக்கம் அறிந்து, அதன்படி நடந்து வருவார். ஆகையால் பெரிய துரைக்கு நாயுடுவின்மேல் மிகுந்த பிரியம்.

ஒருநாள் சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும், நாயுடு வெகு குதூகலத்துடன் இருப்பதை அவர் மனைவி அறிந்து கொண்டாள். தான் வெகு நாட்களாகக் கேட்டு வந்த வைரக்கம்மல்களை வாங்கித்தரச் சொல்ல அதுதான் நல்ல சமயம் என்று எண்ணினாள்.

"அடி! உனக்கு வைரக்கம்மல்கள் அடுத்த மாதம் வாங்கித் தருகிறேன்" என்று தாமாகவே சொன்னார் நாயுடு. அதைக் கேட்க அவளுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. சந்தோஷத்தினால் முகம் புன்முறுவல் பூத்தது. நாயுடு மேலே ஆரம்பித்தார்: "இப்பொழுது இருக்கும் பெரிய துரை என்னிடம் மிகவும் பிரியமாய் இருக்கிறார் என்று உனக்கு முன்னமேயே சொல்லியிருக்கிறேன். தாம் இந்த ஊரைவிட்டு மாற்றப்பட்டுப்போவதற்குள் என்னை உதவி மானேஜராகச் செய்துவிட்டுப்போவதாகச் சொல்லியிருக்கிறார்."

"வெள்ளைக்காரர்களைத்தான் அந்த வேலையில் நியமிப்பார்கள்; இந்தியர்களுக்கு அது கிடைக்காது என்று சொல்லியிருக்கிறீர்களே!"

"ஆமாம். ஆனால், இந்தியர்களையும் கம்பெனி நிர்வாகத்தில் சேர்த்துக்கொண்டால் பல நன்மைகள் உண்டு என்றும், அந்த அந்த ஆபீஸில் இருக்கும் அநுபவமும் திறமையும் வாய்ந்தவர்களை 'ஆபீஸர்' பதவிக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், பம்பாய்த் தலைமை ஆபீஸுக்குத் துரை எழுதியிருக்கிறார். அதை அவர்கள் அநேகமாக ஒப்புக்கொள்வார்கள். அப்படிச் செய்தால், என்னையே முதன்முதலில் அந்த வேலையில் நியமிப்பதாகத் துரை வாக்களித்திருக்கிறார்" என்றார் நாயுடு.

## 2

துரை எழுதின கடிதத்துக்குத் திருப்திகரமான பதில் கிடைக்கவேண்டுமே என்று நாயுடு கவலைப்பட்டார். "இந்தத் துரைக்குப் பம்பாய்த் தலைமை ஆபீஸில் நல்ல செல்வாக்கு உண்டு. இவர் சொன்னதற்கு மாறு இதுவரையில் ஒன்றும் சொன்னதில்லை. என் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதோ, பார்ப்போம்" என்று தமக்குள்ளே சொல்லிக்கொள்வார்.

முதன் முதலில் துரை எழுதின கடிதத்துக்குத் தலைமை ஆபீஸி லிருந்து சரியான பதில் வரவில்லை. ஆனால் துரையா விடுகிறவர்! "இந்தியர்களை ஆபீஸர்களாக நியமித்தால், இந்த நாட்டு ஜனங்களி டையே நம்முடைய கம்பெனியைப்பற்றி ஒரு நல்ல மதிப்பு உண் டாகும். அதனால் நம்முடைய வியாபாரமும் வலுக்கும். மேலும், ஆபீஸ் குமாஸ்தாக்களுக்குள், ஒரு நல்ல மாறுதலை உண்டுபண்ணும். 'எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக வேலை செய்தாலும் குமாஸ்தா வாகத்தான் ரிடையர் ஆகவேண்டும்' என்ற எண்ணம் மாறி, 'ஊக்கத்துடனும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் வேலை செய்தால் ஒருநாள் ஆபீஸர் பதவிக்கு வரலாம்' என்று நினைத்துச் சிரத் தையுடனும் ஊக்கம் குன்றாமலும் அவர்கள் வேலை பார்ப்பார்கள்" என்று தாம் வகுத்த புதிய திட்டத்தைப் பலமாக ஆதரித்து, ஒரு பெரிய கடிதம் தலைமை ஆபீஸுக்கு எழுதினார்.

"கம்பெனியின் எதிர்கால நன்மையை உத்தேசித்துத்தான் இவ்வளவு தூரம் எழுதுகிறேன் என்று உங்களிடம் நான் வற்புறுத்த விரும்புகிறேன். இந்தப் பிரதேசத்தில் இந்தியர்களுடைய மனப்பான்மையை அறிய எனக்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இந்தியர்களை அரசாங்க நிர்வாகத்தில் மேன்மேலும் சேர்த்துக் கொள்ளும்பொழுது, என்னுடைய திட்டம் சமய சந்தர்ப்பத்தை எவ்வளவு தூரம் ஒட்டி இருக்கிறது என்பது உங்களுக்குப் புலப் படும். ஆகையால், இந்த விஷயத்தைத் தாங்கள் மறுபடியும் ஆலோ சிக்க வேண்டுகிறேன்" என்று துரை கடிதத்தை முடித்திருந்தார்.

நாயுடு தலைமை ஆபீஸ் கடிதத்தைக் கண்டு முதலில் மன முடைந்து போனார். ஆனால் துரை எழுதின பதில் அவருக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

இரண்டு வாரம் சென்றதும் பம்பாய்த் தலைமை ஆபீஸிலிருந்து பதில் வந்தது. பிரஸ்தாபித்த விஷயத்தை லண்டனில் இருக்கும் டைரக்டர்களுக்குத் தெரிவித்திருப்பதாயும், புதிய திட்டத்தை ஆமோதிக்கச் சிபார்சு செய்திருப்பதாயும், பதில் கிடைத்ததும் மேற்கொண்டு எழுதுவதாயும் அதில் கண்டிருந்தது.

## 3

தமக்கு உதவி மானேஜர் வேலை ஆகிவிட்டதாகவே நாயுடு எண்ணிக்கொண்டார். அந்த உத்தியோகத்திலிருக்கும் வெள்ளைக் காரர்களுக்கு மாதம் நானூறு ரூபாய் கொடுக்கும்பொழுது, தமக்கு முந்நூறு ரூபாயாவது சம்பளம் கொடுப்பார்கள் என்று எண்ணி எண்ணி அவர் மனம் சந்தோஷத்தால் பொங்கியது. சொந்த மோட்டார் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், குடியிருக்கத் தனிப் பங்களா ஒன்றை அமர்த்திக்கொள்ளவேண்டும் என்றும் நிச்சயித்துக்கொண்டார். அவர் மனைவியும் வைரக்கம்மல் வாங்கும் விஷயத்தில் முனைந்தாள். பல வைர வியாபாரிகள் அவர்கள் வீட்டுக்கு வந்து போய்க்கொண்டு இருந்தார்கள்.

துரை தலைமை ஆபீஸ் பதிலை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். வெகு காலமாக வழங்கி வந்த பழக்கத்தை மாற்றி, லண்டனில் உள்ள டைரக்டர்கள், ஒரு கிளை ஆபீஸ் மானேஜரின் யோசனையை ஏற்றுக்கொள்வதென்றால், அதில் பெருமை இராதா!

ஒருநாள் துரை பராங்குசம் நாயுடுவைக் கூப்பிட்டார். நாயுடுவுக்குத் தாம் எதிர்பார்த்த கடிதந்தான் வந்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று. முகத்தில் புன்னகையுடன் துரையின் அறைக்குள் சென்றார். துரை ஒரு கடிதத்தை நாயுடுவினிடம் நீட்டினார்.

அது தலைமை ஆபீஸ் கடிதந்தான்! நாயுடுவுக்கு மார்பு படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. வெகு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்தார்:

"நாங்கள் சிபார்சு செய்தபடி, டைரக்டர்கள் உங்கள் யோசனையை ஏற்றுக்கொண்டார்கள். இந்தத் திட்டத்தை உடனே அமுலுக்குக்கொண்டு வர உத்தரவும் வந்திருக்கிறது. ஆகையால் எங்கள் பம்பாய் ஆபீஸில் இருபத்தைந்து வருஷமாய் வேலை பார்த்து வரும் ராமசந்திரன் என்பவரை உங்கள் ஆபீஸுக்கு உதவி மானேஜராக நியமித்து, அடுத்த வாரத்தில் அங்கு வந்து வேலையை ஒப்புக் கொள்ளும்படி, நாங்கள் இன்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். கம்பெனியின் முன்னேற்றத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்வதற்கு, டைரக்டர்கள் தங்கள் வந்தனத்தை உங்களுக்குத் தெரிவிக்கச்சொல்லுகிறார்கள். நாங்களும் உங்கள் திறமையைப் பாராட்டுகிறோம்."

நாயுடுவுக்குக் கண்கள் இருண்டன. உணர்ச்சியற்றுச் சவம் போல், தம் இடத்தில் வந்து உட்கார்ந்தார்.

---

## : காதலில்லாமல் கதை முடியுமா? :

* கி. சாவித்திரி அம்மாள் *

உலகில் யுத்தமில்லாமல் இருக்க முடியுமா வென்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது? "அதற்கு என்ன பிரமாதம்? யுத்தத்தைக் கிளப்பியவர்கள் நிறுத்திவிட்டால், யுத்தம் தானே நின்று போய்விடுகிறது" என்று உடனே பதில் சொல்லத் தோன்றுகிறதல்லவா? ஆனால் உலக சமாதானத்திற்காகப் பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுதே யுத்த வெறி மீளவும் தலை தூக்கி ஆடுவதைப் பார்த்தால் இந்த யுத்தத்தை ஈசுவரன்தான் பார்த்து நிறுத்தவேண்டுமென்றே எண்ணவேண்டியிருக்கிறது. 'காதலில்லாக் கதைகள் முடியுமா?' என்னும் கேள்வி அம்மாதிரியான கேள்வியல்ல; அவ்வளவு மனம் சோர்ந்துபோய்க் கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிடும்படியான நிலைமையொன்றும் நமக்கு இப்பொழுது ஏற்பட்டுவிடவில்லையென்று நாம் தைரியமாய்ச் சொல்லலாம்.

காதலில்லாமல் கதை முடியுமா? இக்கேள்வியில் 'காதலில்லாமல் கதைகள் எழுத முடியுமா?' என்பதுடன், 'காதலில்லாக் கதைகள் எழுதினால் வாசகர்கள் ரசிப்பார்களா?' என்ற கேள்வியும் சேர்ந்து இருக்கிறது. அது மட்டுமல்ல; 'காதலில்லாமல் கதைகள் இருக்க முடியாதா?' என்றும் ஒரு கேள்வி த்வனிக்கிறது. அத்தகைய சந்தேகம் ஏன் உதிக்கவேண்டும்?

இதற்குப் பதில் கூறுமுன் கதை என்பதைப்பற்றியே சற்று ஆராய்வோம். பகவான் மனிதனைச் சிருஷ்டித்திருக்கிறார். மனிதன் தன் கற்பனா சக்தியினின்றும் கதையைச் சிருஷ்டிக்கிறான். ஆகவே உலகம் தோன்றின நாள்முதல் கதையும் தோன்றிவிட்டது. அவ்வாறே உலகம் இருக்கும் வரையும் கதையும் இருந்துதான் தீரும். "குழந்தைகளாயிருக்கும்பொழுது நாம் பெரியவர்களிடம் கதை கேட்கிறோம். நாம் பெரியவர்களானபிறகு நம் குழந்தைகளுக்குக் கதை சொல்லுகிறோம். நாம் இறந்த பிறகு நாமே கதையாகிவிடுகிறோம்" என்று ஹிந்தியில் ஓர் ஆசிரியர் கூறுகிறார். நம்மைப்போலவே ஆடவர்களையும் பெண்களையும் சிருஷ்டித்து அவர்களுக்கு நம்முடையவைபோன்ற சுக துக்கங்களை அமைத்துப் பார்ப்பதில் நமக்கு ஒரு தனி ஸந்தோஷம் ஏற்படுகிறது.

அவ்வகையான ஒரு ஸந்தோஷம் மிகவும் அவசியம் என்று இராத பக்ஷத்தில், கதை சொல்லுவது, கேட்பது என்ற வழக்கம் உலக மெங்கும் இயற்கைக் குணமாகக் காணப்படாதல்லவா? பண்டைக் காலத்தில் பெரும்பாலும் நீதிக்கதைகளே அவசியமென்று கருதப் பட்டன. ஆயினும் அதற்காகக் காதற்சுவையுள்ள கதைகள் அக் காலத்தில் எழுதப்படவில்லையென்றும் சொல்லுவதற்கில்லை.

காவியங்களில் சிறந்த காவியமாகிய வால்மீகி ராமாயணம் காதற் கதைதான்; தந்தை சொல்லைக் காப்பதற்காக ராஜ்யத்தைத் துறந்து சென்ற தியாகத்தைக் காட்டிலும் ராமரும் சீதையும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த அளவற்ற காதலும் ஒருவரை ஒருவர் பிரிந்து பட்ட ஏக்கமுமே கதையில் நமக்குப் பிரதான மாகத் தோன்றுகின்றன; என்றாலும் வாழ்வையே மேன்மையாகச் செய்யக்கூடிய தெய்விகமான காதல் அது. அத்தகைய பரிசுத்த மான காதலைத்தான் கவிகள் அனைவரும் வாழ்க்கையின் முக்கிய அம்சமாகச் சித்திரித்து அதில் தம் கற்பனைத் திறன் முழுமையும் காட்டியிருக்கிறார்கள்.

"காதல், காதல், காதல்; காதல் போயிற் சாதல். காதலிலே இன்பமெய்திக் களித்து நின்றால் கனமான மன்னவர்போ ரெண்ணு வாரோ? மாதருடன் மனமொன்றி மயங்கி விட்டால் மந்திரிமார் போர்த்தொழிலில் மனங்கொள் வாரோ?" என்று இவ்வாறெல்லாம் பாரதியாரும் பாடியிருக்கிறார்.

மேல் நாட்டில் 'மெடீவல்' (Medieval) என்று சொல்லப்படும் இடைக்காலத்திலும் காதலைத்தான் பெரிதாய்க் கொண்டாடி எழுதி யிருக்கிறார்கள். அக்காலத்தில் ஒரு பெண்மணியின் காதலைப் பெறு வதற்காக வாலிபர்கள் எவ்வளவோ வீரச் செயல்கள் இயற்றுவார் கள். அப்பெண்மணியின் சிறு புன்னகைக்காகத் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்துவிடுவார்கள். காதலை அவ்வளவு போற்றியதனால் தான், 'காதலே இல்லாமலிருப்பதைக் காட்டிலும் காதலித்து இழந் தாலும்மேல்' (It is better to have loved and lost than never to have loved at all) என்ற வசனம் ஏற்பட்டிருக்கிறது.

நம் நாட்டில் ராஜபுத்திரர்களது காலத்தை எடுத்துக்கொள் வோம். மனத்துக்கிசைந்த மங்கையின் காதலுக்காகச் சாகசச் செயல்கள் புரிந்திருக்கும் வீரர்களுடைய கதைகள் எவ்வளவு இருக் கின்றன! ஆனால் அக்காலத்தில் போற்றப்பட்ட காதலுக்கும், நாம் இப்பொழுது வாசிக்கும் கதைகளில் வரும் காதலுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் 'நிரந்தர முக்கோணம்' (Eternal triangle) என்று சொல்லுவதுண்டு.

அதாவது இரண்டு புருஷர்கள், ஒரு ஸ்திரீ; அல்லது இரண்டு ஸ்திரீகள், ஒரு புருஷன். இவர்களில் ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் ஒருவரை ஒருவர் காதலிப்பது; அம்மூன்ருவது ஸ்திரீயோ புருஷனே, அக்காதலுக்கு இடையூறுகள் விளைவிப்பது; முடிவில் ஆசிரியர் இஷ்டப்படி கதையைக் கொட்டுமேளத்துடனே அழுகையுடனே முடித்துவிடுவது. மேற்சொன்ன முறையில்தான் நூற்றுக்குத் தொண்ணூறு கதைகளின் போக்கு அமைந்திருக்கிறது.

நம் புராணக் கதைகளை எடுத்துக்கொண்டால், சத்தியம், கடமை, தியாகம், பரோபகாரம், காருண்யம் முதலிய நற்குணங்களைத் தனித்தனியே எடுத்துக்காட்டும் கதைகள் எவ்வளவோ இருக்கின்றன. ராமாயணத்தைத்தான் காதற் கதை என்று சொன்னேம். இரும்புக்கும் காந்தத்திற்கும், சந்திரனுக்கும் கடலுக்கும் பரஸ்பரம் ஆகர்ஷிக்கும் சக்தி இருப்பதுபோல் உலகம் ஏற்பட்ட நாள் முதல் புருஷனும் ஸ்திரீயும் ஒருவரை ஒருவர் கண்டு காமுறுவது இயற்கை; அதைப்பற்றி எவ்வளவு எழுதினலும் நியாயந்தான் என்ருலும், சம்ஸ்கிருதத்தில் மற்ருெரு பெரிய காவியமாகிய மகாபாரதத்தை நாம் என்ன கதையென்று சொல்லுவது? ராஜ்யத்திற்காக இரு குடும்பங்கள் சண்டையிட்டதைத் தவிரக் காதலையும் கல்யாணத்தையும் பற்றிப் பாரதத்தில் என்ன கதை இருக்கிறது? மண்ணசை, பொன்னசை என்றபடி அதிகாரத்திலும் பொருளிலும் மோகம் கொள்ளுவதும் மனித இயல்பேயல்லவா? ஆகவே அதைப்பற்றி எழுதுவதும் மிகவும் பொருத்தமாகவே தோன்றுகிறது.

ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகா கவி 'ரோமியோவும் ஜூலியட்டும்' என்ற நாடகம் எழுதியிருக்கிருர். அதில் முதல் வரியிலிருந்து கடைசி வரி வரையிலும் காதலைப் பற்றித்தான் இருக்கிறது. ரோமியோ, ஜூலியட் இவர்களுடைய காதல் வெள்ளத்தில் படிப்பவர்களும் முழுகி மெய்மறந்து விடுகிருர்கள். எல்லாம் ஒரே காதல்மயமாகத் தோன்றுகிறது. இத்தகைய நாடகத்தை எழுதிய கவியே மக்பத் என்னும் நாடகத்தையும் எழுதியிருக்கிருர். மனிதன் பேராசைப்பேய் பிடித்து உணர்வழிந்துபோய் இயற்கைக்கு மாருகக் கொடிய செயல்களுக்கு உள்ளாகும்பரிதாபத்திற்கு இந்நாடகத்தைக் காட்டிலும் பெரிய அத்தாட்சி வேறு இருக்க முடியாது. இக்கதையில் காதல் என்பது மருந்துக்கும் இல்லை. அதற்குப் பதில் பேராசையே நிரம்பியிருக்கிறது. ஷேக்ஸ்பியர் உலக இயல்பு நன்கு அறிந்தவராதலின் மனிதனை வசப்படுத்தக் காதலுக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவு பேராசை பொருமை முதலிய கொடிய குணங்களுக்கும் உண்டு என்பதை அறிந்தவர். ஆகையால்

தான் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறான நாடகங்கள் அவரால் இயற்ற முடிந்திருக்கிறது.

இப்பொழுது 'காதலில்லாக் கதைகள் முடியுமா?' என்ற கேள்விக்கு, 'ஏன் முடியாது?' என்று நாம் தைரியமாய் விடையளிக்கலாம். உயிரற்ற, ரசமற்ற காதற்கதைகளே பெரும்பாலும் பத்திரிகை வாயிலாகவும் புஸ்தக ரூபமாகவும் வெளி வருவதால் நமக்கு இந்தச் சந்தேகம் எழுகின்றது. ஆனால் காதலைத் தவிர, வேறு விஷயங்களைப்பற்றிய கதைகள் எழுதுவதில் எழுத்தாளர்களுக்குத் தேர்ச்சியில்லை என்றோ அப்படி எழுதினாலும் அத்தகைய கதைகளை வாசகர்கள் படித்து இன்புறமாட்டார்களென்றோ நினைப்பது தவறு. எழுதுகிறபடி எழுதினால், எவ்வளவு சாதாரண விஷயமும் சிறந்த இலக்கியமாக மாறிவிடுமென்பதை யார் சந்தேகிக்கமுடியும்? தமிழில் காதலைப்பற்றியே இல்லாமல் சாதாரணமான குடும்ப விஷயத்தைப் பற்றியே எழுதியிருக்கும் ஒரு கதையை எடுத்துக் கொள்வோம். காலம் சென்ற பண்டித நடேச சாஸ்திரி அவர்களால் இயற்றப்பட்ட 'ஸ்ரீ மாமி கொலுவிருக்கை' என்னும் கதையை அநேகமாய் எல்லாரும் படித்திருப்பார்கள். 'ஸ்ரீ மாமி கொலுவிருக்கை'யில் எந்த அழகிய வாலிபனும், ஓர் அழகிய யுவதியைச் சந்தித்துக் காதல் கொள்ளவில்லை. கேவலம் ஒரு மாமியார் மருமகளைப் படுத்தும் அற்ப விஷயந்தான். ஆயினும் அது சிறந்த இலக்கியக் கதையாகவே விளங்குகிறதென்று கூறலாம். இதற்குக் காரணம் சாதாரணமான குடும்ப விஷயத்தை ஆசிரியர் கையாண்டிருக்கும் திறமையேதான். உண்மைக்கு மாறுபடாமலிருப்பதுடன் மாமியாரான மகா சுவேதை, நாட்டுப்பெண் கௌரி, கதையில் வரும் இன்னும் மற்றவர்கள் அனைவரும் நம்மைச் சுற்றிலும் நாம் பார்க்கும் உயிருள்ள மனிதர்களாகவே தோன்றுகிறார்கள். காதற் கதைதான் வாசகர்களுக்குப் பிரியமானது என்ற எண்ணத்தைக் காதல் லவலேசமும் இல்லாத இக்கதை அடியோடு அகற்றிவிடுகிறதென்பதில் என்ன சந்தேகம்?

ஆங்கிலத்தில் 'கிரான்போர்டு' என்ற ஒரு நாவல் இருக்கிறது. அது 'காதல் இல்லாமல் கதைகள் எழுதமுடியும்; அவற்றை நாம் படித்து இன்புறவும் முடியும்' என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இருக்கிறது. அதை உண்மையில் கதை என்றே சொல்வதற்கில்லை. எழுதியவர் ஒரு ஸ்திரீ. அக்கதையைப் படித்து முடித்த பிறகு மனத்திற்கு இன்பமாவது உற்சாகமாவது மூட்டக்கூடிய விஷயங்களே ஒன்றும் இல்லாமலிருந்தும் நாம் இவ்வளவு ருசியுடன் எப்படிப் படிக்க முடிந்தது என்று நினைக்க எனக்கு மிகவும் ஆச்சரியம் உண்டாயிற்று. நகரத்தின் வேடிக்கை வினோதம் ஒன்றும் இல்லாமல் அமைதி குடி கொண்டிருக்கும் ஒரு சிறு கிராமம். அதில் உள்ள

வயதான நாலைந்து ஸ்திரீகளை மட்டுமே எடுத்துக்கொண்டு, அவர்கள் அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள், நகரத்தில் இருப்பவர்களுக்கு மிகவும் அற்பமாகத் தோன்றும் சிறு கவலைகள், பயங்கள், சந்தோஷங்கள் இவைகளைப் பற்றியே விவரித்து ஆசிரியை ஹாஸ்யரசத்துடன் ஒரு பெரிய புஸ்தகம் எழுதிவிட்டாள். அதில் வரும் ஸ்திரீகள் பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்; கல்யாணமில்லாதவர்கள். காதல், கல்யாணம் என்ற வார்த்தைகளே அவர்களுக்கு மிகவும் அதிசயமாகத் தோன்றுகின்றன. அப்படி இருந்தும் 'நாலைந்து கிழவிகளைப்பற்றிய ஒரு கதையா?' என்ற அலக்ஷ்யம் தோன்றாமல் நாம் உற்சாகத்துடன் படிப்பது பெரிய விந்தையல்லவா?

வங்காளியில் பிரபல ஆசிரியர் பங்கிம் சந்திர சட்டர்ஜீ அவர்கள் எழுதிய 'ஆனந்த மடம்' என்னும் நாவலை எடுத்துக்கொள்வோம். அதில் பிரதானமாய் அமைந்திருப்பது தேச உணர்ச்சி. அக்கதையைப் படிக்கும்பொழுது நம் மனத்திலும் அப்பெரிய உணர்ச்சி எழும்புகிறது. இதைப் போலவே தேச பக்தி, கடமை, தியாகம் முதலிய சிறந்த குணங்களை அடிப்படையாகக் கொண்ட நாவல்களோ சிறு கதைகளோ அதிகமாக ஏன் இயற்றலாகாது?

சமூகம், மதம், அரசியல் இவை சம்பந்தமான கொள்கைகளில் பெரும் மாறுதல் ஏற்படும்போதுதான் எழுதுபவர்களின் கற்பனை சக்திக்கு அரிய சந்தர்ப்பம் வாய்க்கின்றது. அப்பொழுதுதான் மாறாமல் ஒரே அடிப்பட்ட பாதையை விட்டுப் புதிய வழிகளை எழுத்தாளர்கள் பின்பற்றுவார்கள். மேல் நாடுகளில் காதல் ஒன்றுதான் எழுதுவதற்குரிய விஷயம் என்று எண்ணுவதில்லை. அங்கே ஆசிரியர்கள் பல வேறு விதமான விஷயங்களைக் கையாளுகிறார்கள். பயங்கரமான கொலைவழக்குகள், அவைகளைப்பற்றிய விசாரணைகள், நுட்பமான உளவுகளைக் கண்டுபிடித்து உண்மையைத் துலக்கக்கூடிய துப்பறியும் கதைகளை நாம் எவ்வளவு உற்சாகத்துடனும் ருசியுடனும் படிக்கின்றோம்!

குழந்தைகளின் மனோதத்துவத்தைக் கதைகள் எழுதுவதற்குரிய சிறந்த விஷயமாகக் கொள்ளலாம். இதன் சம்பந்தமான கதைகள், காவியங்கள் கவி ரவீந்திரநாத் டாகுர் எவ்வளவோ அழகாக எழுதியிருக்கிறார். ஒரு குழந்தையின் மனோபாவத்தை உள்ளபடி அறிந்து எழுதுவது சாதாரண விஷயமா? அதற்கு எவ்வளவு ஆழ்ந்த மனோதர்மம் இருக்கவேண்டும்! டாகுர் எழுதிய 'காபுலிவாலா' என்பது போன்ற கதைகளைப் படித்தால் இது நமக்கு எளிதில் புலப்படும்.

மேல் நாட்டில் ஆண் பெண்கள் சகஜமாய்ச் சேர்ந்து பழகுவதால் அவர்களுள் ஒருவர்மேல் ஒருவர் காதல் கொள்வது, அக் காதலில் போட்டி பொறாமை முதலியன ஏற்பட்டுக் கஷ்டங்கள் விளைவது முதலிய விஷயங்கள் காணப்படுவது மிகவும் இயற்கை. ஆகவே அங்கு அவ்வாறான கதைகள் ஏராளமாய்த் தோன்றுவதற்கும் மிக்க நியாயம் இருக்கலாம். ஆனால் நம் சமூகத்திலோ ஆண் பெண்கள் சேர்ந்து பழகுவது, காதலிப்பது என்பது வழக்கமில்லை. அப்படி இருக்கும்பொழுது அவ்வாறான கதைகள் எழுதுவது உண்மைக்குச் சற்று விரோதமேயல்லவா?

'காதலில்லாக் கதைகள் முடியுமா?' என்ற கேள்வியை, 'காதலில்லா ஸினிமாப் படங்கள் முடியுமா?' என்று நாம் சற்று மாற்றிக் கேட்கலாம். சிருங்கார ரசம் இருந்தால்தான் பொது மக்கள் ரஸிப்பார்கள் என்ற கொள்கையை மேற்கொண்டு காதல் இல்லாத படங்களே கூடாவென்று படம் தயாரிப்பவர்கள் முடிவு செய்துவிட்டார்களென்று தோன்றுகிறது. இல்லாவிடில் பக்தி ரசமே பிரதானமான நந்தனர் சரித்திரத்திலும் வேதியரும் அவர் மனைவியும் சரச சல்லாபம் புரிவதாக ஒரு காட்சியை வைப்பார்களா?

காதலைத் தவிர மனிதன் மனத்தை முற்றிலும் வசப்படுத்தக் கூடிய சிறந்த உணர்ச்சிகள் வேறு எவ்வளவோ இருக்கின்றன. இவைகளை நன்கு ஆராய்ந்தறிந்து ஆசிரியர்கள் எவ்வளவோ ரசமான கதைகள் எழுதவும் முடியும் என்பது நிச்சயம். இவ்வுண்மையை உணர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டால் இலக்கியத்திற்குப் பெரும் பயன் ஏற்படுமென்பதில் தடையில்லை.



சென்னை அகில இந்திய ரேடியோவில் 13-3-40-ல் பேசியது; அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.




## : உயர்ந்த பரிசு :

* 'வாசகன்' *

ஒரு வித்தையாடி ஓர் அரசனுடைய முன்னிலையில் தன் வித்தைகளைக் காட்ட ஆரம்பித்தான். தன் உடம்பைப் பலவகையாக வளைத்தும் நிமிர்த்தும் ஒரு பாகத்தை மாத்திரம் அசையச்செய்தும் தன் சாமர்த்தியத்தைக் காட்டினான். அவன் பல வருஷங்களாகச் செய்த அப்பியாசத்தினால் அவ்வாறு தன் உடம்பை இஷ்டம்போல் வளைக்கமுடிந்தது.

கஜகர்ணம், கோகர்ணம் என்ற வித்தைகளையும் அவன் காட்டுவதாகச் சொன்னான். யானையானது நின்றபடியே தன் காதைமாத்திரம் ஆட்டும் சக்தி உடையது. பசுவும் அப்படியே செய்யும். இந்த மாதிரி ஆட்டும் வித்தையில் அவன் வல்லவனாக இருந்தான். பசுவைப்போலவே இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக்கொண்டு காதுகளை மட்டும் ஆட்டினான்.

பசுவைப் போலவே அவன் நடித்துக்காட்டியதோடு அங்கே இருப்பவர்கள் தன்னை எப்படி வேண்டுமானாலும் பரீக்ஷை செய்து பார்க்கலாமென்று சொன்னான். அரசன் தன் மந்திரிகளை அவ்வாறு பரீக்ஷை செய்யச் சொன்னான். அவர்கள் தங்கள் தங்களுக்குத் தெரிந்தபடி பரீக்ஷை செய்து பார்த்து, "இவன் மிகவும் சாமர்த்தியசாலியே!" என்று சொல்லி வியந்தார்கள். ஒவ்வொரு வித்தைக்கும் ஒவ்வொரு பரிசை அரசன் அந்த வித்தையாடிக்

குத் தந்தான். அவன் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டான்.

கோகர்ணவித்தை செய்து காட்டும்போது அங்கே கூடியிருந்த ஜனங்களுக்குள் இடையன் ஒருவன்



இருந்தான். அவன் வித்தையாடிக்குப் பக்கத்தில் வந்தான். ஒரு சிறு கல்லை எடுத்து வித்தையாடியின் மேல் போட்டு அவனைக் கவனித்தான்; உடனே அவ் விடையன் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று. மிகவும் ஸந்தோஷத்துடன் தான் மேலே போட்டிருந்த பழைய கம்பளி ஒன்றை வித்தையாடியின்மேல் எறிந்துவிட்டுச் சென்றான்.

வித்தையாடி அந்தப் பழைய கம்பளியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டான்; உடனே அதைத்

தன் பெட்டியில் வைத்தான். மற்றப் பரிசுகளெல்லாவற்றையும் விட அதை மிகவும் உயர்ந்ததாக அவன் எண்ணினான்.

அவன் இவ்வாறு செய்வதைக் கண்டு அரசனுக்கு அதிகமான கோபம் உண்டாயிற்று; 'நாம் கொடுத்த விலையுயர்ந்த பரிசுகளை இவன் சாதாரணமாக வாங்கிக் கொண்டான். அந்த இடையன் கொடுத்த பழைய கம்பளியை அவ்வளவு சிரத்தையோடு வாங்கி வைத்துக் கொண்டானே. நமக்கு இதனால் அவமதிப்பல்லவோ உண்டாகிவிட்டது?' என்று யோசித்தான். அவன் கண்கள் சிவந்தன.

வித்தைகள் செய்து முடிந்தபிறகு கூட்டம் கலைந்தது. அரசன் வித்தையாடியைத் தனியே அழைத்து வரச் செய்தான்; "நீ நாம் கொடுத்த பரிசுகளை அலக்ஷியமாக வைத்துவிட்டு அந்த இடையன் கொடுத்த பொத்தல் கம்பளியை அவ்வளவு மரியாதையோடு வாங்கிக் கொண்டாயே; நம்மை இப்படி அவமதித்த குற்றத்துக்காக உனக்குத் தக்க தண்டனை அளிக்க உத்தரவு இடப்போகிறோம்" என்றான்.

**வித்தையாடி:** மகாராஜா, தாங்கள் இந்த ஏழையின் மீது அவ்வளவு கோபம் கொள்ளக் கூடாது. நான் செய்த அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். நான் அவ்வாறு செய்ததற்கு என்ன காரணமென்பதை மாத்திரம் மகாராஜாவுக்கு விண்ணப்பம் செய்து கொள்கிறேன்.

**அரசன்:** என்ன காரணம்?

**வித்தையாடி:** நான் கோகர்ணவித்தை செய்து காட்டினபோது பலர் என்னைப் பரீக்ஷை செய்தார்கள். அந்த இடையனும் என்னைப் பரீக்ஷித்தான். என் மேல் ஒரு சிறு கல்லைப் போட்டான். நான் அந்தக் கல்விழுந்த இடத்தைமாத்திரம் சுழித்துக் கொண்டேன். பசுவின் ஸ்வபாவம் இது. இதை நன்றாக அறிந்த இடையன் என் சாமர்த்தியத்தைத் தெரிந்து

கொண்டான். அவன் செய்த பரீக்ஷை உயர்ந்தது. அவன் மனம் மகிழ்ந்து தந்த பரிசு எப்படி இருந்தாலும் விஷயத்தை அறிந்து கொடுத்தது; ஆகையால் விஷயம் அறியாமல் தந்த பரிசுகளைக் காட்டிலும் அதன்பால் அந்தச் சமயத்தில் எனக்கு அதிக மதிப்பு உண்டாயிற்று. 'இது ராஜசபை' என்ற ஞாபகம் எனக்கு அந்த நிமிஷத்தில் மறந்து போயிற்று.

அரசன் உண்மையை உணர்ந்தான். அவன் நல்ல அறிவாளியாகையால் வித்தையாடி சொன்னது நியாயமே என்று தெரிந்து கொண்டான். அவனுக்குப் பின்னும் சில பரிசுகளைத் தந்தான். அவனைப் பரீக்ஷித்த இடையனை வருவித்துத் தன் அரண்மனைப் பசுக்களைப் பாதுகாக்கும் உத்தியோகத்தை அளித்தான்.






## கம்பன் கவிதை

ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரின் கவிதையைப்பற்றி அளவிறந்த ஆராய்ச்சிகள் எழுந்துள்ளன. தமிழ்நாட்டுக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனது பெருமையைப்பற்றியும் கம்ப ராமாயணத்தின் சுவையைப்பற்றியும் எவ்வளவோ பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. உருப்படியாகப் படித்து இன்புறத்தக்க ஆராய்ச்சி ஒன்றும் வெளிவரவில்லை. ஸ்ரீ வ. வே. ஸு. ஐயரவர்கள் பாலபாரதியில் வெளியிட்டு வந்த கம்ப ராமாயணத்தைப்பற்றிய கட்டுரைகள் மிகவும் சுவைமலிந்து விளங்குவன. இந்தப் புஸ்தகம் கம்ப ராமாயணத்தைப் பொதுவாகவும், தனித்தனிப் பாகங்களைப்பற்றிச் சிறப்பாகவும் பலர் ஆராய்ந்து எழுதியுள்ள 17 கட்டுரைகளின் தொகுதி. முதல் 72 பக்கங்களில் ஸ்ரீ வ. வே. ஸு. ஐயரவர்கள் எழுதிய 'கம்ப ராமாயண ரசனை' என்ற கட்டுரை உள்ளது. அது ஒன்றுக்காகவேனும் இந்தப் புஸ்தகத்தை எல்லோரும் வாங்கவேண்டும். சீதை அசோகவனத்தில் இருக்கும் காட்சியைக் காட்டும் மூவர்ண அட்டைச் சித்திரமும் காகிதமும் அச்சும் தமிழனும் சௌந்தரிய உணர்ச்சியை உடையவனென்பதைக் காட்டும் அடையாளங்கள். இதன் விலை ரூ. 1-8-0.

பேலிஸ்ட் ஜடாமுனி: [ஸ்ரீ சொ. விருத்தாசலம், பி. ஏ., எழுதியது. விலை ரூ. 1 8 0.]

"இந்தப் புதிய ஜடாமுனி யார்?" என்று எவரும் திகைக்கவேண்டாம். அபிஸீனியாவைக் கவர்ந்த இத்தாலிய ஸர்வாதிகாரியைத்தான் இப்பெயர் கொண்டு அழைத்திருக்கிறார் ஆசிரியர். ஆரம்பம் முதல் இறுதிவரை சலிப்பில்லாமல் மேலே என்ன நிகழும் என்று ஆவலுடன் படிக்கும் ஒரு நாவலைப்போல் இருக்கிறது, இந்த ஜடாமுனியின் வாழ்க்கை வரலாறு. 'புதுமைப்பித்தன்' என்னும் தம் புனைபெயருக்கு ஏற்ப இதன் ஆசிரியர் ஆங்கில மரபை அனுசரித்தே எழுதியபோதிலும நடை இனிமை பயப்பதாகவே இருக்கிறது. வெளியட்டையில் மூஸ்ஸோலினியின் படம் ஒன்று அச்சிடப்பட்டுள்ளது. நவயுகப்பிரசுராலயத்தாரின் இவ்வெளியீடு அவர்கள் மற்றப் பிரசுரங்களைப் போலவே சிறந்ததாக இருக்கிறது.

தேவதாஸ்: [ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜி எழுதியதை ஸ்ரீ அ. கி. ஜயராமன் மொழிபெயர்த்தது. விலை ரூ. 1 0 0.]

இந்தக் கதையை ஸினிமாப் படமெடுத்துத் திரையில் காட்டியபோது மகிழாதவர்கள் இல்லை. சரத்சந்திரர் தற்கால வங்காளி யுவகன் ஒருவனுடைய வாழ்க்கை வரலாற்றை நன்றாகச் சித்திரித்துச் சோகம் ததும்பும் இக்கதையாக முடித்திருக்கிறார். மொழிபெயர்ப்பாசிரியர் அழகாகவே மூலத்தின் சுவை குன்றாதபடி மொழிபெயர்த்திருக்கிறார். சரத்சந்திருடைய நல்ல நவீனமொன்றைத் தமிழ்நாட்டினருக்காக வெளியிட்டுதவிய நவயுகப் பிரசுராலயத்தாரின் முயற்சி வெற்றியடைவதாக.

ஷை மூன்றும் நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜி. டி. சென்னை என்ற விலாசத்திற் கிடைக்கும்.

1. தேவி சௌதுராணி, 2. ஹிரண்மயி, 3. ராதாராணி : [பங்கிம் சந்திரர் எழுதியவை. மூல வங்காளியினின்று மொழிபெயர்த்தவர் ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பி. ஏ., விலை: முறையே, ரூ. 1—4—0, ரூ. 0—5—0, ரூ. 0—8 —0.] 4. கிருஷ்ணகாந்தன் உயில் : [பங்கிம் சந்திரர் எழுதியதை மூல வங்காளியினின்று ஸ்ரீ ஸ்ரீசைல தாதாசாரியாரும் ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமியும் மொழிபெயர்த்தது. விலை ரூ. 1—8—0.]

சில நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பியர் வர்த்தகம் செய்ய இந்தியாவுக்கு வந்து, பின்னர் ராஜ்யாதிகாரம் பெற முயன்றார்கள். அப்போது நிகழ்ந்த ஒரு சரித்திர ஸம்பவத்தைப் பங்கிம் முதல் நவீனமாகச் சிருஷ்டித்துள்ளார். ஓர் இந்தியப் பெண்மணியின் தீரம் மிக்க சரிதையை நாம் இதில் காண்கிறோம். அவள் கடைசியில் இல்லறமே நல்லறம் என உணர்ந்து கணவனுக்கேற்ற ஸஹதர்மிணியாகிறாள். இரண்டாவது கதை முக்கியமாகத் தாமிரலிப்தி (தாம்லூக் என்று இப்போது வங்காளத்தில் வழங்குவது) என்ற இடத்திலும் பிற இடங்களிலும் நிகழ்வதாக அமைக்கப்பட்ட பழைய காலத்துச் சரித்திரக் கற்பனை. மூன்றாவது கதை சென்ற நூற்றாண்டு இறுதி வங்காள ஸமூக வாழ்க்கையைப் பற்றியது. நான்காவது நவீனம், பங்கிம் பாபுவின் சிறந்த சிருஷ்டி நான்கனுள் ஒன்றாகும். நாலைந்து கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு அவர் நெஞ்சை அள்ளும் கதையொன்றைப் புனைந்து விட்டார்.

இந்த நான்கு கதைகளை மொழிபெயர்த்தவர்களும் மூலத்தின் சுவை சிறிதும் குன்றாமல் நன்றாகத் தமிழில் ஆக்கியுள்ளனர். வழக்கம்போல் பிரசுரகர்த்தர்கள் நல்ல காகிதத்தில் சீரிய முறையில் இவற்றை வெளியிட்டுள்ளனர்.

5. மௌலானா அபுல் கலாம் ஆஜாத் : [ஸ்ரீ வி. என். ரங்கசாமி ஐயங்கார் இயற்றியது. விலை அணா 8.]

இந்த வருஷத்துக் காங்கிரஸுக்கு அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மௌலானா அவர்களின் வாழ்க்கை வரலாறு அழகான எளிய நடையில் ஐயங்காரவர்களால் எழுதப்பட்டுள்ளது. புத்தகம் கையடக்கமாகவும் முன் அட்டையில் மௌலானாவின் படத்துடனும் விளங்குகிறது. ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டிய புத்தகம்.

ஷை ஐந்து புத்தகங்களும் அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் என்ற விலாசத்திற் கிடைக்கும்.

1. ஸௌந்தர்ய லஹரி : [ஸம்ஸ்கிருதத்திலிருந்து ஸ்ரீ சிவத்தியானனந்த மஹர்ஷி மொழிபெயர்த்தது. விலை அணா 4.] 2. திருமுலர் திருப்பதிகம் : [ஷை மொழிபெயர்ப்பாசிரியர் எழுதிய நூல். விலை தெரியவில்லை. இவ்விரண்டும் கிடைக்குமிடம் : காரியதரிசி, வேதப்ரவசன மந்திரம், கோடம்பாக்கம், சென்னை.]

(1) ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய 'ஸௌந்தர்யலஹரி' சுலோகங்களை ஸ்ரீ சிவத்தியானனந்தர் தமிழிற் பாடியுள்ளார். பாராயணம் பண்ணுவோர்க்கு உதவும்படி இச்சிறு நூல் அரும்பத வுரை குறிப்பு முதலியவற்றுடன் கையடக்கமாக வெளியிடப்பட்டுள்ளது. (2) தம் ஸஹஜ நிஷ்டைக்குப் பங்கம் நேராதிருக்கும் பொருட்டு இந்நூலாசிரியர் திருமூலநாதர் பேரில் இப்பதிகம் பாடியுள்ளாரென அறிகிறோம். இவ்விரண்டையும் ஆஸ்திகர் அனைவரும் வாங்குவாரென நிச்சயமாக நம்புகிறோம்.

**மகாத்மா காந்தியடிகளின் உபதேசமொழிகள்:** [ஆசிரியர்: சகோதரி வி. பாலம்மாள்; கிடைக்குமிடம்: இந்தியமாதர் சகாய பீரோ, 2-E, தாண்டவராயன் தெரு, ராயப்பேட்டை, சென்னை, விலை அணா 1.]

'காந்தி நவரத்தின மாலை' என்ற தோத்திரமும், மகாத்மாவின் உபதேச மொழிகளும் இச்சிறு புத்தகத்தில் அமைந்திருக்கின்றன.

**படியாதவர் படும் பாடு:** [திருநெல்வேலி, தென்னிந்தியச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியீடு. ராப்பர் கட்டடம் விலை அணா 6; அட்டைக்கட்டடம் அணா 10.]

இப்புத்தகம் திரு தி. அ. அவிநாசிலிங்கம் செட்டியாரவர்களின் முகவுரைகொண்டு விளங்குகிறது. படிக்காமலிருப்பதால் உலக விஷயங்கள் பல தெரியாமற்போய்விடுகின்றன. அதனால் அநாவசியமான பல கஷ்டங்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. இம்மாதிரி ஆகாமலிருப்பதற்காக இனிமேலாவது முதியோர்க்குக் கல்விபோதிக்கவேண்டும் என்ற ஒரு யோசனை சிலர் மனத்திடை சமீபகாலத்தில் எழுந்துள்ளது. அந்த எண்ணம் நிறைவேறுவதற்குத் தக்க சாதனங்கள் புத்தகங்களேயாம். இதற்கு முன்னால் முதியோர்க்குத் தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்கும் முறையைப் பற்றிய ஒரு புத்தகத்தை வெளியிட்ட இக் கழகத்தார் இப்போது இதை வெளியிட்டிருப்பது போற்றற்குரியதாகும். கல்வியில்லாத முதியோன் ஒருவன் கஷ்டப்படும் விதம் முன்பாகத்திலும் உலகவிஷயங்களைப்பற்றிய பல கட்டுரைகள் பின்பாகத்திலும் படங்களுடன் இதில் அடங்கியுள்ளன. கிராம முன்னேற்றத்திலும் முதியோர்க்குக் கல்விபுகட்டுவதிலும் அக்கறை காட்டுவோர்க்கு இப்புத்தகம் இன்றியமையாததாகும்.

**ஆரம்ப ஆசிரியர் தோழனும் 1940-ஆம் ௵ பஞ்சாங்கமும்:** [வேங்கடாராமன் அண்டு கம்பெனியார் வெளியீடு, சார்ப்பரேஷன் பழக்கடை, ஜி. டி. சென்னை. விலை அணா 4.]

இப்புத்தகத்தில் அரசாங்கத்தார் புதிதாக வெளியிட்டுள்ள தமிழ்ப்பாட அமைப்பு முறையும், பஞ்சாங்கமும், விடுமுறைகள், இராகுகாலம், இக் கம்பெனியின் பிரசுரங்கள் முதலியவற்றைப்பற்றிய விவரங்களும் அச்சிடப்பட்டுள்ளன.

**இன்றைய ரஷ்யா:** [ஜோசப் ஸ்டாலின்: வெளியிட்டவர்: ஸ்ரீ டி. ஆர். சுப்பிரமணியம், 2/65, பிராட்வே, சென்னை. விலை அணா 4.]

ஐக்கிய ஸோவியத் ஸோஷலிஸ்டுக் குடியரசின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் 1939-ஆம் ௵ மார்ச்சு௴ 10-ஆம் தேதி கம்யூனிஸ்ட் கட்சியின் 18-ஆம் கூட்டத்தின் போது பேசிய ஒரு பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பாகும் இச் சிறு புத்தகம். ஸ்டாலினின் அயல் நாட்டுக் கொள்கை முதலியன இதினின்று தெரியவருகின்றன. அட்டையில் ஸ்டாலினின் படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

**தோபா சுவாமிகள் புராண வசனம்:** [வேத மொழிபெயர்ப்பாசிரியர் ஸ்ரீ கா. சிவானந்த யதீந்த்ர சுவாமிகள் இயற்றியது. விலை அணா 12. கிடைக்குமிடம்: ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள், தோபா சுவாமிகள் மடாலயத் தலைவர், வேலூர் (வடார்க்காடு).]

தமிழ் நாட்டில் உள்ள பல யோகீந்திரர்களுள் ஒருவரான தோபா சுவாமிகள் வேலூரில் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். அவருடைய சரித்திரமாகும் இது. இம்மாதிரியான பெரியோர்களுடைய சரிதைகள் தமிழில் வெளிவருவதைத் தமிழ் நாட்டார் வரவேற்பார்களென்றே எண்ணுகிறோம்.

---




## கம்பர் திருநாள்

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரது திருநாள் இவ்வாண்டு தமிழ் நாட்டில் பல இடங்களிற் கொண்டாடப்பட்டதென்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியை அடைகிறோம். எல்லா இடங்களிலும்விடச் சிறப்பாகக் காரைக்குடியில் நடைபெற்றது. மார்ச்சு மீ 21, 22, 23, 24-ஆம் தேதிகளில் பல பண்டிதர்களும் நவீன ஆராய்ச்சியாளர்களும் அங்கே ஒன்று கூடிக் கம்பரதுபெருமையையும் கம்பராமாயணத்தின் பல திறப்பட்ட விசேஷங் களையும் எடுத்துக்காட்டினார்கள். இதற்கு மூலகாரணமாக இருப்பவர் ஸ்ரீமான் சா. கணேசனுகும். கம்பரிடத்தில் பித்துப்பிடித்து அலையும் இளைஞர்களில் அவர் ஒருவர். அவருடைய ஊக்கம் தமிழ்நாட்டில் கம்பனுடைய புகழைக் கிளர்த்திவிட்டது. கம்ப ராமாயண ஆராய்ச்சியும் கம்பரை அநுபவிக்கும் முயற்சிகளும் தமிழ் நாட்டில் இனி வளர்ந்து வரு மென்ற நம்பிக்கை இப்போது உதயமாகியிருக்கிறது.

## தமிழ்ப் பரிசுகள்

திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதஸ்வாமிகள் அவர்கள், சென்னை ஸர்வகலாசாலைத் தனித் தமிழ் வித்துவான் பரீட்சையில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுபவருக்கு வருஷந்தோறும் ஆயிர ரூபாய் பரிசு அளிக்கும்படி ஏற்பாடு செய்திருப்பதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

இப்போது அவர்கள் அண்ணாமலை ஸர்வகலாசாலையில் தேவாரத் திருமுறைக்கல்வி அபிவிருத்தி குறித்தும் தமிழ் இலக்கிய இலக்கண வெளி யீடுகள் குறித்தும் வருஷந்தோறும் முறையே ரூபாய் 500-ம், ரூபாய் 1250-ம் அளிப்பதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இதன்பொருட்டு எழுபத் தையாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலங்களை அண்ணாமலை யூனிவர்ஸிடி யாரிடம் ஒப்பித்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் தர்மம் செய்வாருக்கு வழி காட்டியாக இருக்கும் ஸ்வாமிகள் 'மூவேந்தரு மற்றுச் சங்கமும் போய்'த் தமிழின் நிலை குலைந்திருக்கும் இக்காலத்தில் 'தேவேந்த்ர தாரு' வைப் போல விளங்குகிறார்களென்பது மிகையன்று. அவர்கள் தர்மம் வளர்க!

70. காவா லிருநிதியாற் கண்பலவால் வேள்விகளாற்
கோவாற் புரந்தரனுங் குற்றாலம்—மாவார்
வருக்கைமூ லத்தார் வழங்குபொக்க ணஞ்சேர்
திருக்கைமூ லத்தார் சிலம்பு.

71. அற்றவராய் வந்தோரு மாரமரு வந்தோரும்
கொற்றவரா கத்துடங்குங் குற்றாலம்—நற்றவராம்
மூவரிசைப் பாடலார் மும்முரச மண்டபத்துத்
தேவரிசைப் பாடலார் சேர்பு.

72. வாடாக் கலைபிரிந்த மானு நூல் கற்பவரும்
கோடா மதிக்கலைகூர் குற்றாலம்—தோடாடச்
தூக்குமிசைத் தாண்டவர் தொல்வினைதீர்த் தென்மனமும்
வாக்குமிசைத் தாண்டவர் வாழ்வு.

---

தில்; யாண்டும் பரவெளியார் - எவ்விடத்திலும் பரவப்படுகின்ற எளியர். தாண்டும் பரவெளியை உடையவர்.

70. கா - கற்பக தரு, சோலை. இருநிதி - சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு நிதிகள், பெரிய பொற்றிரள். கண் பலவால் - பல கண்களால், கருதப்படுகின்ற பலாமரத்தால். கோவால் - காமதேனுவால் அல்லது வச்சிராயுதத்தால், தலைமையால். புரந்தரன் - இந்திரன். மா ஆர் - பெருமை பொருந்திய. வருக்கை மூலத்தார் - பலாமரத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்; பலாவென்றது இங்கே குறும்பலாவாகிய இத்தலவிருக்ஷத்தை; இது தனியே தேவாரப்பதிகம் பெற்றது. பொக்கணம் - திருநீற்றுப் பை; "சுத்திய பொக்கணத்து" (திருச்சிற்.) கைம்மூலம் - கையினடி; என்றது அக்குளை.

71. அற்றவராய் - வறியவராய்; கொற்றவராகத் துடங்கும் - அரசராகத் தொடங்கும்; தொடங்குமென்றது துடங்குமென வந்தது. ஆர் அமர் உவந்தோர் - அரிய போரை விரும்பினோர்; கொல் தவர் ஆகத்து உடங்கும் - கொல்லுகின்ற வில் உடம்பில் ஒன்றுபட்டு நிற்கும். மூவர் - திருஞான சம்பந்தமூர்த்தி முதலிய மூவரது. இசை பாடலார் - இசையையுடைய தேவாரமாகிய திருப்பாட்டைப் பெற்றவர். மும்முரச மண்டபமென்று ஒரு மண்டபம் இத்தலத்து உண்டு. தேவர் இசைப்பு ஆடலார் - தேவர் புகழ் தலையுடைய நடனத்தைச் செய்பவர். இந்த ஆடல் வாசுகியின்பொருட்டுச் செய்தது.

72. கலை பிரிந்த - ஆண்மானைப் பிரிந்த; மான் - பெண்மானனது; கோள் தாம் மதி - நவக்கிரக மண்டலத்தில் தாவிச்செல்லுகின்ற சந்திரனது; கலை கூர் - மானை விரும்புகின்ற. நூல்கற்பவருடைய; கோடா மதி - கோணுத

73. ஞாலமிசை யெப்பொருளு நன்னதியிற் சூல்வளையும்
கூல மறுகுதருங் குற்ருலம்—மா லுருவாய்
முன்பாலின் கண்படுத்தார் முக்கணர சாரடையிற்
றென்பாலின் கண்படுத்தார் சேர்பு.

74. கற்றமைந்தோர் சொல்லுங் கலகவிழி யார்குழலும்
குற்றமல ராதரிக்குங் குற்ருலம்—பற்றத்
திரமாலை யத்தன் றிரிகூடத் தெய்வப்
பரமாலை யத்தன் பதி.

75. வாவிக் கலைகுதித்தும் வானமுகி லைப்பழித்தும்
கூவற் கயமுழக்குங் குற்ருலம்—யாவர்க்கும்
தோமே களைகணர் தொல்லையண்ட கோடிகட்குத்
தாமே களைகணர் சார்பு.

---

வில்லாத புத்தியில்; கலை கூர் - வித்தை மிகப்பெற்ற. தோடு - காதணி. தூக்கும் - திருவடியைத் தூக்குதற்குரிய. மிசை தாண்டவர் - எல்லாக்கூத்திற்கும் மேலான பரமானந்த தாண்டவத்தையுடையவர். இசைத்து - ஒன்றுபடுத்தி. ஆண்டவர் - அடியேனை ஆட்கொண்டவர்.

73. எப்பொருள்களையும்; கூலமறுகு தரும் - கடைவீதியானது தருகின்ற. சூல்வளை - கர்ப்பத்தையுடைய சங்குகள்; கூலம் மறுகுதரும் - நீர்க்கரையில் வருத்தத்தால் சுழலாநிற்கும். ஆலின்கண் படுத்தார் - ஆலிலையின்மீது யோக நித்திரை செய்தவர்; இத்தலத்தில் திருமாலாக இருந்தமையைக் கூறியபடி. முக்கண் அரசார் - மூன்று கண்களையுடைய அரசராக உள்ளவர். அடையின் - தம்மைச் சரணுக அடைந்தால். தென்பாலின் கண் படுத்தார் - யமனுக்குரிய தென்றிசைக்கண்ணே போகச் செய்யாதவர். (பி-ம்.) 'முக்கணரசாய் வடவிற்.'

74. கற்றமைந்தோர் சொல்: குற்றம் அலராது அரிக்கும் - குற்றம் பரவாதபடி கெடுக்கும். கலகவிழியார் குழல் - மகளிருடைய கூந்தல்; குற்ற மலர் ஆதரிக்கும் - பறித்த பூக்களை அன்புசெய்யும்; விரும்பிச்சூடு மென்பது கருத்து. பற்று அத்திரம் மாலை அத்தன் - பிடித்தற்குரிய அம்பாகிய திருமாலைப் பாதிஉருவத்தில் உடையவர்; அத்திரம் - அம்பு; அத்தம் - பாதி. பரம ஆலையத்தன் - மேலான ஆலயத்தையுடையவரது.

75. வாவி - தாவி; கலை குதித்து - ஆண்மானனது துள்ளி; கூவல் கயம் உழக்கும் - கிணற்றையுடைய குளத்தைக் கலங்கச்செய்கின்ற. முகிலை பழித்து கூவல் கயம் முழக்கும் - மேகத்தைப் பழித்துக் கூவுதலையுடைய யானையானது முழக்கத்தைச் செய்யும்; பழித்து முழக்கும் என்க. தோம் களைகணர் - குற்றத்தைக் களைகின்ற திருவிழிகளையுடையார்; ஏ - அசைநிலை. களைகணர் - ஆதாரமாகவுள்ளவரது.

76. வாட்டானை வேந்து மணிப்பகலால் வாயசமும்
கோட்டானை யங்கடல்செய் குற்ருலம்—தோட்டானை
மாத்தூலத் தோலுரியார் மாமருங்கிற் சாத்துகலே
சாத்தூலத் தோலுரியார் சார்பு.

77. பானற் செழுந்தேனும் பல்சுருங்கை பாய்மதியும்
கூனத் தினமுகக்குங் குற்ருலம்—கானப்பேர்
பூவணங்கே தாரத்தார் புத்தூரர் வெற்பீன்ற
மாவணங்கே தாரத்தார் வாழ்வு.

78. மாவிளம் பூங்குயிற்கு மாதரார் பொன்முலைக்கும்
கூவிளங் காயிணையாங் குற்ருலம்—மீவிளம்பி
ஏறுபடைப் பாரிடத்தா ரேத்தியநா வஞ்செழுத்தின்
வீறுபடைப் பாரிடத்தார் வீடு.

---

76. வாள் தானை வேந்து - வாட்படையை உடைய அரசர்; கோட்டு ஆனை அம் கடல் செய் - கொம்பையுடைய ஆனைகளால் அழகிய கடலைச்செய்கின்ற; யானைப்படையைக் கடல் என்ருர். மணி பகலால் - மாணிக்கம் செய்யும் வெயிலால்; வாயசம் - காக்கையானது; கோட்டானை அங்கு அடல் செய் - கோட்டானென்னும் பறவையை அங்கே வருத்துகின்ற; கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது; "பகல்வெல்லுங் கூகையைக் காக்கை" (திருக்குறள்.) தோள் தானை - தோளில் அணிந்துகொள்ளும் ஆடையாக; மா தூலம் தோல் உரியார் - மிகப் பருத்த உடம்பையுடைய யானையினது தோலை யுடையவர்; தோல் - யானை; உரி - தோல். யானைத்தோலைத் தோளாடையாக உடையவரென்றபடி. மருங்கில் சாத்துகலை - இடையில் அணிந்து கொள்ளும் கலையாக; சாத்தூலத் தோல் உரியார் - புலியினது தோலை உரியவர்; சாத்தூலம் - சார்த்தூலம்.

77. பானல் - நீலோற்பலத்திலுள்ள; தேன் - தேனை; கூன் நத்தினம் முகக்கும் - உடல் வளைந்த சங்கினங்கள் முகந்து செல்லும். சுருங்கை பாய் மதி - மாளிகைச்சுவரிலுள்ள நுழைவாசலில் பாய்ந்து செல்லுகின்ற பூர்ண சந்திரன்; கூன தினம் உகக்கும் - கூனிச்செல்வதற்குத் தினந்தோறும் விரும்புகின்ற; சுருங்கையின் சிறுமையால் சந்திரன் அதிற் செல்வதற்கு இயலாமல் வளைந்து செல்லுதலை விரும்புவான். கானப்பேர் - காளையார்கோவில். பூவணம் - திருப்பூவணம். கேதாரம் - வடநாட்டுத் திருப்பதியுள் ஒன்று. வெற்பு ஈன்ற மா அணங்கே - பார்வதியையே; தாரத்தார் - தேவியாக உடையவரது.

78. மா மரம் இளம்பூங்குயிலுக்குக் கூவில் விளங்கும் ஆய்க்கு இணையாகும்; கூ - பூமி; ஆய் - தாய்; இணை - ஒப்பு. மாதரார் நகிற்கு: கூவிளங்காய் இணை ஆம் - இரண்டு வில்வக்காய் உவமையாகும்; இணை - இரண்டு. மீ விளம்பி - மேலாகச் சொல்லி; ஏறு படை பாரிடத்தார் - பகைமேற்

79. மேற்றேவர் வான்வழிக்கும் வீணையோர் பாடலுக்கும்
கோற்றேன் வழுக்கெடுக்குங் குற்றாலம்—மேற்றேறிற்
புள்வா கனத்துவந்தார் போதமுனிக் காகவிடை
வெள்வா கனத்துவந்தார் வீடு.

80. முத்துமரு விச்சிகர முட்டையென்று வான்குருகு
கொத்துமரு விச்சிகரக் குற்றாலம்—தொத்துமருப்
பூங்கொன்றைத் தாமத்தர் பூதலமெல் லாநிறைந்தும்
ஊங்கொன்றைத் தாமத்த ரூர்.

81. வெம்பாவக் குன்றிடிக்கும் வெற்பெனும்பே ரானைக்கும்
கொம்பாம் வடவருவிக் குற்றாலம்—தம்பால்
அடியவரை யாதரிப்பா ரல்லவரை மேனாட்
கடியவரை யாதரிப்பார் காப்பு.

---

செல்லுகின்ற பூதப் படையை உடையவர்; பாரிடம் - பூதம். ஏத்திய நா - தோத்திரம் செய்த நாவில்; அஞ்செழுத்தின் வீறு படைப்பார் இடத்தார் - பஞ்சாக்ஷரத்தின் பெருமையைப் பெற்றவரிடத்தில் இருப்பவர்.

79. தேவர் வான்வழிக்கு - தேவர் செல்லுகின்ற வானவீதியில்; கோல் தேன் வழுக்கு எடுக்கும் - கொம்புத்தேன் வழுக்குதலை உண்டாக்கும். வீணையுடையவரது பாடலுக்கு: கோல் தேன் - திரண்ட வண்டுகள்; வழு கெடுக்கும் - (சுருதியாக இருந்து) குற்றத்தை நீக்கும். மேல் - பண்டைக் காலத்தில்; புள் வாகு அனத்து உவந்தார் - கருடப்பறவையினிடத்தும் அழகையுடைய அன்னப்பறவையிடத்தும் உவப்புற்றவர்; பண்டைக்காலத்தில் திருமாலாகவும் பிரமதேவராகவும் இருந்தவரென்றபடி. போதமுனிக்காக - ஞானத்தையுடைய அகத்தியமுனிவர் பொருட்டு; விடையாகிய வெள்ளிய வாகனத்தில் வந்தாரது.

80. இச்செய்யுளிற் சிலேடை இல்லை.

சிகரம் முத்து மருவி - மலைச் சிகரத்தில் உள்ள முத்தை அடைந்து; வான் குருகு முட்டையென்று கொத்தும் - பெரிய பறவைகள் முட்டையென்று அவற்றைக் கொத்துகின்ற. அருவிச்சிகரம் - வடவருவியின் துளிகளையுடைய; சீகரமென்றது சிகரமென வந்தது. தொத்து - பூங்கொத்து. மரு - நறுமணம். ஊங்கு ஒன்று ஐ தாமத்தர் - அதற்குமேலே பொருந்திய அழகிய இடமாகிய மோக்ஷத்தையுடையவரது.

81. வெம்பாவமாகிய குன்றை இடித்தற்குரிய கொம்பு ஆகிய; கொம்பு-தண்டு. வெற்பாகிய பெரிய யானைக்குத் தந்தம்போன்ற அருவியையுடைய. வடவருவி - வடபால் விழும் அருவி. அந்த அருவிக்கு இடிக்கின்ற தண்டும் யானைத் தந்தமும் உவமைகள். அடியவரை ஆதரிப்பார். அல்லவரை - அடியாரல்லாதவரை. கடிய - நீக்குதற்பொருட்டு. வரையாது அரிப்பார் - ஓயாமல் வருத்துபவரது.

82. மண்டலங்க ணிக்குமெழின் மாவெயிலுந் தூவெயிலும்
குண்டலங்க டந்திலகு குற்றாலம்—அண்டருய்யக்
கண்டங்கார் பூத்திருந்தார் கற்பிலாக் கேதகையின்
கண்டங்கார் பூத்திருந்தார் காப்பு.

83. காட்டலையும் வாரணமுங் கானாறுந் தேனாறும்
கோட்டலைவா ரிப்புல்லுங் குற்றாலம்—நாட்டலையார்
உத்த மதிக்குடையா ரோண்ணின்ற வண்டமெல்லாம்
வைத்த மதிக்குடையார் வாழ்வு.

84. தேடுதவத் தெய்வத் திருமலைக்கு மாநதிக்கும்
கோடுதவு முத்தலைசேர் குற்றாலம்—ஏடுதவப்
பூணா மறைப்பொருளார் பொய்ப்பொருளாய்க் காண்பவர்கள்
காணா மறைப்பொருளார் காப்பு.

---

82. மண்டலம் கணிக்கும் எழில் - பூவுலகத்தினர் எண்ணிப் பார்க்கும் அழகையுடைய; மா எயில் - பெரிய மதிலானது; குண்டலம் கடந்து இலகு - ஆகாயத்தைக் கடந்து விளங்கும். தூ வெயில் - புனிதமான வெயிலை; குண்டலங்கள் தந்து இலகும்; குண்டலம் - காதணி. அண்டர் உய்ய - தேவர்கள் பிழைக்க. கண்டம் கார்பூத்து இருந்தார். கற்பிலா - அறிவில்லாத. கேதகையின் கண் தங்கு - தாழை மரத்தின் கண்ணே தங்கிய; ஆர் பூ திருந்தார் - நிறைந்த பூவிற்குப் பகைவராயுள்ளார். தாழம் பூவைச் சிவபெருமான் அணிவதில்லை யென்பது இங்கே அறியற்பாலது.

83. காடு அலையும் வாரணம் - காட்டில் திரியும் யானை; கோள் தலை வாரி புல்லும் - நவக்கிரகங்களைத் தலையிலேயுடைய கூடத்தை அடையும்; வாரி - யானைக்கூடம். கான் நாறும் - நறுமணம் வீசுகின்ற; தேனாறு - தேனருவி; என்றது சிவமது கங்கையை; கோடுகளையுடைய அலைவாரியைப் புல்லும் ; கோடு - சங்கு; அலைவாரி - கடல். நாள் தலையார் - தலைமையான நாளையுடையவர்; திருவாதிரை நட்சத்திரத்துக்கு உரியவர் ; நாள் - நட்சத்திரம். உத்தம திக்கு உடையார் - உத்தமமான திசையாகிய உடையாகப் பெற்றவர். அண்டம் - ஆகாயம்; உலகங்களுமாம். மதிக்குடையார் - மதிபோன்ற குடையை உடையவர்; எல்லா அண்டங்களுக்கும் தலைவ ரென்றபடி.

84. திருமலைக்கு - இத்தலத்துள்ள மலைக்கு; கோடு உதவும் முத் தலை சேர் - சிறுசிகரங்களை உதவுகின்ற மூன்று பெரிய சிகரங்கள் சேரப்பெற்ற; இதுபற்றி இத்தலத்தைச் சார்ந்த மலைக்குத் திரிகூடாசலமென்று ஒரு பெயருண்டு. மாநதிக்கு - பெரிய நதியின் கண்; கோடு உதவு முத்து அலை சேர் - சங்கால் தரப்பெற்ற முத்து அலையினிடத்தே சேர்கின்ற. ஏடு உதவப் பூணா மறை - ஏட்டில் உதவும்படி பூணாத வேதம்; எழுதாக்கிளவி யென்றபடி. காணா மறைப் பொருளார் - அறியாத இரகசியப் பொருளாக உள்ளவர்; “மேவுமொரு சிவலிங்கந் தேவரக சியமாய்” (குற். குறவஞ்சி.)

85. செப்புக் குவிமுலையார் சேல்விழியும் வானரமும்
கொப்புக் குழைதாவுங் குற்றாலம்—துப்புத்
தருக்கமழு மானேற்றார் தாளிரண்டின் முப்பூ
மருக்கமழு மானேற்றார் வாழ்வு.

86. தோட்டிக் கயல்வயலிற் றன்னருவிக் கோட்டயலிற்
கோட்டிக் கயம்பாயுங் குற்றாலம்—கூட்டிப்
பரசமைய முந்தடுப்பார் பண்டமரர் போற்றிப்
பரசமைய முந்தடுப்பார் பற்று.

87. வாம்புரவித் தேருமட வார்வதன பங்கயமும்
கூம்புபடா மாலைமலர் குற்றாலம்—பாம்புபிறை
சூடலை யாற்றினர் தூங்கானை மாடத்தார்
கூடலை யாற்றினர் குன்று.

---

85. விழி, கொப்பை அணிந்த குழையில் தாவும்; கொப்பு - மேற் காதின் அணி; குழை - காது. வானரம் - குரங்கு; கொப்பு குழை - கிளைகளில் உள்ள தளிரில்; கொப்புக்கு உழையெனப் பிரித்துப் பொருள்கொள்ளலும் பொருந்தும். துப்பு தரு கம் மழு மான் ஏற்றார் - வன்மையைத் தருகின்ற தலையையும் மழுவையும் மானையும் ஏற்றவர்; கம் என்றது பிரம கபாலத்தை. பூ: உலகத்தின் பொதுப் பெயராய் நின்றது. மரு கமழும் ஆனேற்றார்; மரு - நறுமணம்; ஆனேறு - இடபவாகனம்.

86. தோட்டி கயல் - அழகையுடைய கயல் மீன்; வயலில் கோடு இக்கு அயம் பாயும் - வயலின்கண் வளைதலையுடைய கரும்பின் சாறு பாய்கின்ற. அருவிக் கோடு அயலில் - அருவிகளையுடைய சிகரங்களின் அயலில்; கோட்டி கயம் பாயும் - கூட்டமாகிய யானைகள் பாய்கின்ற. பரசமையமுங் கூட்டித் தடுப்பார் - பிறமதத்தாரை ஒருங்கு சேர்த்து அவரைத் தடுப்பவர். (பி-ம்.) 'கோட்டிப் பரசமையமும்'. பரசு அமைய - துதித்தல் பொருந்த. முந்து அடுப்பார் - அவர்களுக்கு முன்னே அடைபவர்.

87. தேர் - தேரில்; கூம்பு - கொடிஞ்சி; படாம் மாலை மலர் - சீலைகளும் பூமாலைகளும் மலரப்பெற்ற; படாம் மாலை - சீலைகளாலாகிய மாலையெனலுமாம். மடவார் - மகளிரது; வதனபங்கயம் - முகமாகிய தாமரை மலர்கள்; கூம்புபடா - குவியாமல்; மாலைமலர் - மாலைக்காலத்தில் மலரப் பெற்ற. பாம்பு பிறை - பாம்பையும் பிறையையும்; சூடலை ஆற்றினர் - சூடுதலைச் செய்தவர். தூங்கானைமாடம் - பெண்ணாகடம் என்னும் திருப்பதியின்கண் உள்ள திருக்கோயில். கூடலையாறு - கூடலையாற்றூர் ; கூடல் ஐயாறு என்னும் இரண்டு தலங்களாகவும் கொள்ளலாகும்.

88. செண்டாடல் வீதிகளுஞ் சேயிழையார் மேடைகளும்
கொண்டாடுங் கந்துகம்பாய் குற்றாலம்—வண்டாடாச்
செண்பகவ னத்திறன் செங்கைமழு வான்மலர்மேல்
ஒண்பகவ னத்திற னூர்.

89. தெற்றம் பயில்கவிஞர் செய்யுளுமா றூர்விழியும்
குற்றம் பலகழிக்குங் குற்றாலம்—பற்றணியா
நஞ்சமர ராக்குவித்தார் நஞ்சமுண்டு வானவரை
விஞ்சமர ராக்குவித்தார் வீடு.

90. அம்புபடா வில்லு மளிபடாப் பூமலரும்
கொம்புபடாச் சோலையுஞ்சூழ் குற்றாலம்—வம்புபடாப்
போதுபடா மாத்தருவார் போர்வினைப டாமலருள்
மீதுபடா மாத்தருவார் வீடு.

---

88. செண்டாடல் வீதிகள் - செண்டாடுதலையுடைய வீதிகளில்; கொண்டாடும் கந்துகம் - எல்லாரும் பாராட்டும் குதிரைகள். மேடைகளில்: கொண்டு ஆடும் கந்துகம் - கையிற் கொண்டு ஆடுகின்ற பந்து. மலர்மேல் ஒண் பகவன் - பிரமன். நத்திறன் - திருமால். பிரமதேவராகவும் திரு மாலாகவும் எழுந்தருளியிருந்தவர் என்றபடி.

89. தெற்றம் - தெளிவு; தேற்றமென்பதன் குறுக்கல்; செய்யுள் குற்றம் பல கழிக்கும் - பாடல்கள் குற்றம் பலவற்றை நீக்கும். மாறூர்விழி: குற்றுகின்ற அம்பின் அலகை அழிக்கும்; அலகு - அம்பின் முனை. பற்று அணியா - பற்றப்படும் ஆபரணமாக. நஞ்சு அமர் அரா குவித்தார்; அரா - பாம்பு. விஞ்சு அமரர் ஆக்குவித்தார்; அமரர் - மரணமற்றவராக.

90. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. அம்புபடா வில் - இந்திரவில். வடவருவியில் இந்திர வில் தோன்றுதலை இன்னும் காணலாகும்; "வாரி, இந்திர தனுவைச் சார்ந்தா னிந்திரன்." (குற்றலப். தேவர்கள் சிவத் துரோகம். 14.) அளிபடாப் பூமலர் - சண்பக மலர்; இத்தலத்திலுள்ள சண்பக வனத்தைக் குறிப்பிக்கின்றது. கொம்புபடாச் சோலை - மரக்கிளைகள் பட்டுப்போகாத சோலை; கொம்பு நீங்கிய சோலை - சாலை யெனலுமாம். வம்பு படா - நிலையின்மை உண்டாகாத. போதுபடா - அரும்புகள் உண்டா காத. மா தருவார் - பெரிய குறும்பலாமரத்தையுடையவர். பூவாது காய்க் கும் மரங்களுள் பலா ஒன்று. அருள் மீது படாமா தருவார் - அருளை மேலே போர்த்துக்கொள்ளும் ஆடையாகத் தருபவர்; படாம் - மேற் போர்வை.

91. அத்தளவித் தாரநகை யார்குழலும் பேரெயிலும்
கொத்தளவித் தாரமருங் குற்றாலம்—முத்தளகத்
தாய்க்காடு நாடகத்தான் சாய்க்காடும் வெண்காடும்
வேய்க்காடு நாடகத்தான் வீடு.

92. கோட்டுவரை யாடிவருங் கூடமிசை மாடமிசைக்
கோட்டுவரை யாடிவருங் குற்றாலம்—கோட்டுவரை
வில்வளைக்கை மாதிடத்தார் வெண்கனகச் செங்கனகப்
பல்வளைக்கை மாதிடத்தார் பற்று.

93. மட்டார் குழலார் வனமுலையு நெற்பொலியும்
கொட்டாரம் பட்டடைசேர் குற்றாலம்—அட்டாங்க
யோகத் திருப்பா ருளத்திருப்பார் மங்கையொரு
பாகத் திருப்பார் பதி.

---

91. அ தள வித்து ஆரம் நகையார் - அழகிய மாதுளையின் வித்தையும் முத்தையும் போன்ற பல்லையுடைய மகளிர்; மாதுளை, மாதளமெனவும் வழங்கும். குழல் கொத்து அளவி தார் அமரும் - கூந்தல் பூங்கொத்துக்கள் கலந்து மாலை தங்கப்பெற்ற. எயில் கொத்தள வித்தாரம் மரும்; கொத்தளம் - மதிலின் ஒருறுப்பு; மரும் - மருவும். முத்து அளகம் தாய்க்கு - முத்தைப் போன்ற கூந்தலையுடைய காரைக்காலம்மையாருக்கு; முத்தளகமென்றது முதுமையைக் குறித்தபடி. ஆடும் நாடகத்தான் - ஆடும் தாண்டவத்தையுடையவர். இந்நாடகம் திருவாலங்காட்டில் நிகழ்ந்தது. வேய்க்காடு - திருநெல்வேலி, பாசூர். நாடு அகத்தான் - விரும்பிய திருவுள்ளத்தையுடையவர்.

92. கோட்டுவரை - கொம்பையுடைய மலைகளைப் போன்ற யானைகள்; ஆடிவருங்கூடமிசை - ஆடிவரும் சிகரங்களின்மேல் ; கோட்டுவரை ஆடு இவரும் - கொம்புகளையுடைய மலையாடு ஏறுகின்ற. மாடமிசை - மாடங்களின்மேல்; கோள் துவர் ஐ ஆடி வரும் - ஒன்பது கோள்களைச் சார்ந்துள்ள சிவந்த அழகிய உத்திராட நாளும் வரும்; ஆடி - உத்திராட நட்சத்திரம். கோள் துவரை ஆடிவரும் எனப்பிரித்து ஒன்பது கோள்களானவை மகளிர் பூசிக்கொள்வதற்கு வைத்த பத்துத் துவரைத் தாம் பூசிக்கொண்டு வாரா நிற்கும் எனலுமாம். கோட்டுவரை வில் வளைக்க மா திடத்தார் - சிகரங்களையுடைய மேருமலையை வில்லாக வளைத்தற்குரிய பெரிய திடத்தையுடையவர். வெண்கனகத்தாலும் செங்கனகத்தாலும் ஆகிய பல்வளைகளை அணிந்த கைகளையுடைய மாதை (உமாதேவியாரை) இடத்தேயுடையவர்.

93. நகில்களானவை கொட்டு ஆர் அம் பட்டு அடை சேர் - கொட்டுதல் ஆர்ந்த அழகிய பட்டும் தளிர்களும் சேரப்பெற்ற; தனத்தின்கண் தளிரை மகளிர் அணிந்துகொள்வது பண்டைக்காலத்து வழக்கம்; "பொரிப்பூம் புன்கினெழிற்றகை யொண்முறி, சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி"

# ரூ. 2-8-0-க்கு

**3 கைக்கடிகாரங்களும் 1050 விநோதச் சாமான்களும் அளிக்கப்படும்**




எங்களுடைய சரியான மணி காட்டும் கடிகாரத்தையும் 5 வருஷ உத்தரவாத முள்ளதும் ஒருதடவை முடுக்கிவிட்டால் 36-மணி நேரம் வரை நில்லாமல் மணி காட்டுவதுமான ஜேபி கடிகாரமும் ரூபாய் 2-8-0க்கு வாங்குவோருக்குக் கீழ்க் கண்ட சாமான் இனாமாக அளிக்கப்படும். (1) பொன் முலாம் பூசிய உறையுடைய விநோதமான பொம்மைக் கைக் கடிகாரம், (2) 300 அடி தூரம் வரை நன்றாக வெளிச்சம் காட்டும் டார்ச் லைட், (3) 14-காரட் ரோல்டுகோல்டு நிப் உடைய ஊற்றுப்பேனா, (4) பொம்மை B. டைம்பீஸ், (5) சேப்டிரேஸர், (6) க்ஷவர ப்ரஷ், (7) சோப்பு, (8) பொன்முலாம் பூசிய 4 பித்தான்க[illegible], (9) 440 விநோத வெகுமதிகள்.

தபால், பாக்கிங் செலவு தனியே அணா 12.

**The American Commercial Stores, Post Box No. 12213, Calcutta (K.)**

---

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸம்ஸ்க்ருத மூலத்துடன்

காலஞ்சென்ற ராவ்சாகிப் பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்

('தர்மாலயம்' மயிலாப்பூர்)

வசனரூபத்தில் இயற்றிய மூலத்திற்கு நேரான

## அழகிய தமிழ் மொழிபெயர்ப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரண்யகாண்டம்-ஒரு பிரதி | ... ரூ. | 5 | 0 | 0 |
| சுந்தரகாண்டம் ,, | ... ரூ. | 6 | 8 | 0 |

---

சுந்தரகாண்ட மாஹாத்ம்யமும்

பாராயணம் செய்வதற்கு மூலமும்

(ஒரு பிரதி) ரூ. 1 4 0

தபால் ரெயில் செலவு தனி

**மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்.**

# Kalaimagal Agents

1. L. Arunachalam Esq.,
M. A.R. Street, Devakottah.

2. A. Balakrishnaswami Esq.,
News agent, 191-193, Norris Road,
Colombo, Ceylon.

3. T. S. Chakrapani, Esq.,
Agent, 'Mail' and 'Swadesamitran',
Koradacheri, (Nannilam).

4. C. Bharati, Esq.,
45, Mantapam Street, Erode.

5. A. Devarajan Esq.,
C/o. Modern Circulating Library,
24-A, Iswar Ganguly Lane,
Kalighat P. O., Calcutta.

6. M. Duraiswamy Iyer. Esq.,
Book-seller, South Rampart,
Tanjore.

7, The Educational Supplies Co.,
142-A, Ponnurangam Street,
R. S. Puram, Coimbatore.

8. P. Krishnamachari, Esq.,
'Hindu' Agent
120, Raja Street,
Big Conjeeveram.

9. The Manager,
Bharati Picture Palace,
Book-sellers & Glass Dealers,
Karaikudi.

10. The Manager,
Eastern Book-centre
Publishers etc.,
Salem.

11. The Manager,
Swadesi Patrikalaya, Chemma St.,
Jaffna (Ceylon)

12. P. S. Mani, Esq.,
26, Dhanappa Mudali Street, Madura

13. K. S. Narayanaswami & Co.,
News agents, Mutt Street,
Kumbakonam.

14. R. V. Pathi Rao, Esq.,
News agent, High Road,
Tinnevelly Junction.

15. The Proprietor,
Naveenakatha Vachaga Book Depot,
40-A Chulia Street, Penang (F.M.S.)

16. Messrs. Ram & Co.,
Merchants and Commission agents,
No. 1, Andar Street,
Teppakulam, P.O. Trichy Town.

17. E. S.Reddiar Esq.,
Bharata Mata News mart,
88, Konda Reddiar Street,
Olugarai P. O
Pondichery.

18. P. Samuel, Esq.,
Proprietor, News Mart & Open Air
Advt. Coy., Great Cotton Road,
Tuticorin.

19. P. Sivaguru & Bros.,
News agents, 108, Brickfields Road,
P.B. 255, Kuala—Lumpur. (F.M.S.)

20. M. Subbiah, Esq.,
196, Colombo Street.
Kandy, (Ceylon).

21. N. Sundaram Esq.,
News agent, 96, Baird Road,
New Delhi.

22. P. R. Sundararajan Esq.,
40, Motilal Mansions, Matunga,
Bombay.

23. M. Thambi Pillai Pathar, Esq.
Gandharva Musical Stores,
Koddaimunai, Batticaloa (Ceylon).

**Wanted Agents**

**In other Places.**

***Manager, Kalaimagal, Mylapore.***

## அல்லயன்ஸ் சித்திரை மாத வெளியீடுகள்

(1) ராம்கார்

காங்கிரஸ் வைபவம்
(படங்களுடன்)
தமிழ் நாடு காங்கிரஸ்
கமிட்டித்
தலைவர் சிறப்புரையுடன்

(2) தீனபந்து ஆண்ட்ரூஸ்

இவ்வுத்தமரின் வாழ்க்கை வரலாற்றையும், இந்தியாவுக்கு இவர் புரிந்துள்ள ஸேவைகளையும் விவரிக்கும் அரிய நூல்.

(3) சக்ரவாகம்

முதலிய கதைகள்

(4) கனகாம்பரம்

முதலிய கதைகள்

ஏப்ரல் மாதம் 25 தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு மாத்திரமே, ஒவ்வொரு புத்தக விலையிலும் 2 அணா வீதம் கழிவு செய்து தரப்படும்.

---

அல்லயன்ஸ் கம்பெனி, பிராடீஸ் ரோட்,
மயிலாப்பூர், சென்னை

---

## ஒரு நல்ல சந்தர்ப்பம்

என் தந்தையாராகிய ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சமீபத்தில் ராயபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அடைந்து சௌக்கியமாக ஜாகைக்கு வந்து சேர்ந்த நற்செய்தியைக் கருதி அவர்களுடைய பதிப்பு நூல்களை அவர்களுடைய 86-ஆம் ஜன்மதினமாகிய 10-3-1940 முதல், 31-5-1940 வரையில் குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. விவரங்களுக்கு எழுதுக.

இங்ஙனம்:

S. கலியாணசுந்தர ஐயர்,

'தியாகராஜ விலாஸம்', பிள்ளையார் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.




## கலைமகள் வருட சந்தா

(தபால் செலவுடன்)

**இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0**

**பர்மா ரூ. 4-8-0**

**பினங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0**

**தனி ஸஞ்சிகை அணா 6**

**அல்லது 36 சதம்**

2/1860

### முக்கிய அறிவிப்பு

சந்தா நேயர்கள் பலர் தமக்குப் பிரதிகள் கிடைக்காவிடின் குறிப்பிட்ட பிரதி கிடைக்கவில்லையென்று பல மாதங்கள் கழித்துக் கடிதம் எழுதுகிறார்கள். விலாச மாறுதலையும் அவ்விதமே முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை இங்கிலீஷ் மீ 10-ஆம் தேதிக்குள் தெரிவிப்பது நலம். கலைமகள் இதழ் ஒவ்வொன்றும் தமிழ்மீ முதல் தேதி (இங்கிலீஷ் மீ சுமார் 16-ஆம் தேதி) வெளிவரும். 20 தினங்களுக்குள் இதழ் கிடைக்காவிடின் கடிதம் எழுதினால் அதை மீண்டும் அனுப்ப இயலும்.

வெளிவந்து விட்டது!

சாணக்கியர், சந்திரகுப்தன், அலெக்ஸாண்டர்

ஆகிய

# முப்பெருவீரர்



ஸ்ரீ ஏ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.,

எழுதிய புதிய நவீனம்

விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.

உலகத்தை அள்ளும் உன்னத சித்திரம்

மகதநாட்டு மன்னன்
சந்திரகுப்தன்

மலைநாட்டு இளங்குமரி
சாயா

ஒருவரையொருவர்
காதலிக்கின்றனர்.
ஆனல்
சாணக்யன்
அவர்கள் மணத்தை
மறுக்கிருன்!

காதலா?

தேசமா?

இது போன்ற பல
அரிய சம்பவங்கள்
நிறைந்த தமிழ்க் காட்சி

சந்திரகுப்த
சாணக்யா

கே. சாம்பமூர்த்தி
வசந்த கோகிலம்
நடிப்பது

டைரக்ஷன்:
C. K. சாச்சி, B.A., B.L.

ஸ்டுடியோ:
காளி பிலிம்ஸ்

உதவி டைரக்ஷன்:
சார்லஸ் F. ஹில்டன்
வி. எஸ். வி. பதி

H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்

புக்கிங்குகளுக்கு

டிரினிடி தியேட்டர்ஸ் லிமிடெட்
கலீல் மான்ஷன்ஸ்
மௌண்ட் ரோடு : : மதராஸ்


மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, ரா. நாராயணசா
ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பதிப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.